REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 மே 6 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

வரு. 89 இல. 106 | May 06, Thursday, 2021 | 20பக்கங்கள் | 30/-






ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று (05) முற்பகல் பாராளுமன்றத்திற்கு விஜயம் செய்தார். பாராளுமன்ற சபா மண்டபத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி அங்கிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களின் உரைகளை செவிமடுத்த போது,.....

## A/L பரீட்சையில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற மாணவர்கள்




2020ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி கணித மற்றும் விஞ்ஞானப் பிரிவுகளில் அகில இலங்கை ரீதியில் தமிழ் மாணவர்கள் முதலிடத்தைப் பெற்றுள்ளனர்.

அகில இலங்கை ரீதியில் கணிதப் பிரிவில் சாவகச்சேரி இந்து கல்லூரி மாணவன் தனராஜ் சுந்தரபவன் முதலாமிடத்தை பெற்றுள்ளார்.

விஞ்ஞானப் பிரிவில் மட்டக்களப்பு, பட்டிருப்பு தேசிய பாடசாலையில் கல்வி கற்கும் மகிழூரைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை தினோஜன் முதலாமிடத்தை பெற்றுள்ளார்.

06

## 04 மாவட்டங்களின் 12 GS பிரிவுகள் தனிமைப்படுத்தலில்



4 மாவட்டங்களைச் சேர்ந்த 12 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவ த்தளபதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். இதற்கமைய கொழும்பு மாவட்டத்தின்

06

## தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தால் பயணக் கட்டுப்பாடு

டாக்டர் அசேல குணவர்தன தெரிவிப்பு



03

## தோட்ட தொழிலாளருக்கு காணிகள் வழங்கும் திட்டம்

அமைச்சரவை அனுமதி வழங்கல்

03



பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதாகியுள்ள

# ரிஷாத் எம்.பியை பாராளுமன்றம் அழைத்துவர அனுமதிக்க கூடாது

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரையும் விசாரணைகள் முடிவடையும் வரை பாராளுமன்றத்திற்கு அழைத்துவரும் உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டாமென பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றம் நேற்று காலை 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. இதனையடுத்து பிரதான நடவடிக்கைகள் இடம்பெற்ற பின்னர். எதிர்க்கட்சி

அமைச்சர் சரத் வீரசேகர நேற்று கடும் கண்டனம்

06

## ரிஷாத் எம்.பி பாராளுமன்ற அமர்வில் பங்கேற்கலாம்



எவ்வித சட்டச்சிக்கலும் இல்லை சட்ட மாஅதிபர்

பாராளுமன்ற உறுப்பினர் பாராளுமன்ற நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் எவ்வித சட்ட சிக்கல்களும் இல்லை என சட்ட மாஅதிபர் அறிவித்துள்ளார். குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளரின் கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையிலேயே

06



கொழும்பு நகரில் ஆங்காங்கே நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகள்.....
படம்: விமல் கருணாதிலக்க

## இந்தியாவுக்காக இலங்கை வானொலி பிரார்த்தனை



கொரோனாவால் இந்தியாவில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களிலிருந்து மீள்வதற்கு ஏதுவாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் எதிர்வரும் 6ஆம் திகதி முதல் 13ஆம் திகதிவரை மாலை 6 மணி முதல் 8 மணிவரை 'ரத்ன சூத்ர' எனு ம் பிரார்த்தனையை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சகல அலைவரிசைகளினூடாக இந்தியா முழுவதிலும் கேட்கும் வண்ணம் ஒலிபரப்புச் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.




27 அத்தியாவசிய பொருட்களுக்கான சலுகை விலை;

## சதொச மூலமாக அடுத்த மூன்று மாதம் தொடர முடிவு

பாராளுமன்றில் அமைச்சர் பந்துல அறிவிப்பு



**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

ச.தொ.ச நிறுவனத்தினூடாக சலுகை விலையில் வழங்கப்படும் 27 அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை தொடர்ந்து எதிர்வரும் மூன்று மாதகாலத்திற்கு பேணுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக

06

## பைசர் நிறுவனத்திடமிருந்து 10 இலட்சம் தடுப்பூசிகள்

அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபன தலைவர் தெரிவிப்பு



பைசர் நிறுவனம் எதிர்வரும் 3 மாதங்களில் 1 இலட்சம் தடுப்பூசிகளையும், அதனைத் தொடர்ந்து 10 இலட்சம் தடுப்பூசிகளையும் இலங்கைக்கு வழங்க எதிர்பார்த்துள்ளதாக அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டொக்டர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார். கொரோனா வைரஸ் பரவலுக்கு எதிராக

06

## தேர்தல் முறைமை தெரிவுக் குழுவில் 06 சிறுபான்மையினர்

தேர்தல் முறைமை தொடர்பில் ஆராய்வதற்காக, அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையில், 15 பேர் கொண்ட பாராளுமன்ற தெரிவுக்குழு

06

### விக்கல் வீராச்சாமி



நம்ம வடக்கு–கிழக்கு தலைவர்கள் கலைஞர திட்டித்தீர்த்த வாயால அவரின்ர மகன் ஸ்டாலின வாழ்த்திப் பாராட்டுகினம், பாத்தியலே....

வடிவேலு சொன்ன மாதிரி அது வேற வாய், இது நாற வாயா இருக்குமோ, ஆனா சைக்கிள்காரர் மட்டும் வாயே திறக்கலை–யாம்...!!!

## பொருளாதாரத்திற்கு பாதிப்பின்றி கொவிட் கட்டுப்பாட்டு நடவடிக்கை



பாராளுமன்றில் அமைச்சர் பவித்ரா தெரிவிப்பு

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

நாட்டின் பொருளாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படாதவாறு கொவிட் 19 வைரஸுக்கு எதிரான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லுமென சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை

06

கிழக்கில் சிங்கள முதலமைச்சரா?

## சாணக்கியனின் கூற்று அப்பட்டமான பொய்

சபையில் ஹரீஸ் M.P காட்டம்



கிழக்கில் சிங்கள முதலமைச்சர் ஒருவரை நாம் கொண்டுவர முயற்சிப்பதாக சாணக்கியன் எம்.பி. கூறியது அப்பட்டமான பொய். அவ்வாறான எந்த தீர்மானத்தையும் நாங்கள் எடுக்கவில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எச்.எம். ஹரிஸ் தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,...

சாணக்கியன் எம்.பி. முஸ்லிம் விரோத போக்கை கையில் எடுத்துள்ளார். அம்பாறையில்

06



# சர்வதேச செய்திகள்

## மாலி நாட்டுப் பெண்ணுக்கு ஒரே பிரசவத்தில் ஒன்பது குழந்தைகள்



ஒரு அரிதா ன நிகழ்வாக மாலி நாட்டு பெண் ஒருவர் ஒரே பிரசவத்தில் ஒன்பது குழந்தைகளை பெற்றெடுத்துள்ளார்.

25 வயதான ஹலிமா சிசே என்ற அந்தப் பெண் கடந்த செவ்வாய்க்கிழமை மொரோக்கே மருத்துவமனை ஒன்றில் ஐந்து பெண்கள் மற்றும் நான்கு ஆண் குழந்தைகளை பிரசவித்ததாக மாலி சுகாதார அமைச்சர் பன்டா சிபி தெரிவித்துள்ளார். சிசேரியன் முறையில் குழந்தை பிரசவம் இடம்பெற்றுள்ளது.

மாலியில் மேற்கொள்ளப்பட்ட அல்ட்ராசௌன்ட் ஸ்கான் சோதனையில் சிசேவின் கர்ப்பத்தில் ஏழு குழந்தைகள் இருப்பதாகவே எதிர்பார்க்கப்பட்ட நிலையில் மொரோக்கோவில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் மேலும் இரு குழந்தைகள் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

தாய் மற்றும் குழந்தைகள் நலமாக இருப்பதாக மருத்துவர் சிபி தெரிவித்தார். அவர்கள் அடுத்த சில வாரங்களில் சொந்த நாட்டுக்கு திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த மார்ச் மாதத்தில் மருத்துவர்கள் ஹலிமா சிசேவுக்கு சிறப்பு கவனிப்பு தேவை என்று கூறியதையடுத்தே, அதிகாரிகள் அவரை மொரோக்கோவிற்கு விமானத்தின் மூலம் அனுப்பிவைத்தனர். ஒரே பிரசவத்தில் ஒன்பது குழந்தைகளை பெற்றெடுப்பதில் மருத்துவ சிக்கல்கள் அதிகம் உள்ளது. பெரும்பாலும் சில குழந்தைகள் முழு காலத்தை எட்டியது இல்லை என கூறப்படுகிறது.

## 50 வயதுக்கு மேற்பட்டோருக்கு பிரிட்டனில் 3ஆவது தடுப்பூசி




பிரிட்டனில் 50 வயதைத் தாண்டிய அனைவருக்கும் இலையுதிர் காலத்தில் 3ஆவது தடுப்பூசி போடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வரும் கிறிஸ்மசுக்குள் கொரோனா தொற்றை முற்றாகத் துடைத்தொழிக்கும் நோக்கத்தில் அந்த முயற்சி எடுக்கப்படுகிறது.

பிரிட்டனில் தற்போது, 2 முன்னோடித் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக திடைம்ஸ் நாளேடு தெரிவித்துள்ளது.

முதல் திட்டத்தில், உருமாறிய புதிய வகை வைரஸை சமாளிக்கும் வகையில் மேம்படுத்தப்பட்ட தடுப்பூசிகள் போடப்படுகின்றன. 2ஆவது நடைமுறையில், பிரிட்டனில் அனுமதிக்கப்பட்டுள்ள ஒக்ஸ்போர்ட்–அஸ்ட்ராசெனெகா, பைசர், மொடர்னா ஆகிய தடுப்பூசிகள் பயன்படுத்தப்படுகின்றன.

முதன் முதலில் தடுப்பூசி போடும் பணியைத் ஆரம்பித்த ஐரோப்பிய நாடு பிரிட்டனாகும்.

வைரஸ் தொற்றுக்கு ஆளாவோர் எண்ணிக்கை குறைந்து வருவதால், அங்கு கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவுள்ளன. வரும் 17 ஆம் திகதி, வெளிநாட்டுப் பயணங்களுக்கான கட்டுப்பாடுகளை பிரிட்டன் தளர்த்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இஸ்ரேலில் ஆட்சி அமைக்கும் நெதன்யாகு முயற்சி தோல்வி

இஸ்ரேல் பிரதமர் பென்ஜமின் நெதன்யாகுவுக்கு புதிய அரசு ஒன்றை அமைப்பதற்கு வழங்கப்பட்ட காலக்கெடு கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவுடன் காலாவதியாகியுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இடம்பெற்ற நான்காவது பொதுத் தேர்தலுக்குப் பின்னர் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை பெறும் கூட்டணி ஒன்றை அமைப்பதற்கு நெதன்யாகு கடந்த 28 நாட்களாக முயன்றார்.

இந்நிலையில் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு மற்றொரு அரசியல் தலைவருக்கு ஜனாதிபதி ரியூவன் ரிவ்லின் அழைப்பு விடுக்கவுள்ளார்.

எனினும் இஸ்ரேல் மற்றொரு பொதுத் தேர்தலுக்கு செல்லும் நெருக்கடி தற்போது அதிகரித்திருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற தேர்தலில் எந்த கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறாத நிலையில், இஸ்ரேலில் நீண்ட கால தலைவராக இருந்து சாதனை படைத்திருக்கும் நெதன்யாகுவுக்கு இது பெரும் பின்னடைவாக உள்ளது.

இதன்படி புதிய அரசு ஒன்றை கட்டியெழுப்ப ஜனாதிபதி ரிவ்லின் மற்றொரு பாராளுமன்ற உறுப்பினருக்கு 28 நாட்கள் அவகாசம் வழங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



கடந்த தேர்தலில் நெதன்யாகுவின் வலதுசாரி லிகுட் கட்சிக்கு அடுத்து இரண்டாவது இடத்தை பிடித்த மையவாத யெஷ் அடிட் கட்சியின் தலைவர் யெயிர் லபிட்டுக்கு அந்த வாய்ப்பு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் கூட்டணி ஒன்றை அமைப்பதில் சிந்தனை அடிப்படையில் பிளவுகளை சந்தித்துள்ள கட்சிகளை ஒன்று சேர்ப்பதில் அவர் பெரும் சவாலை எதிர்கொள்ள வாய்ப்பு உள்ளது.

இந்த அபேட்சகரும் அரசொன்றை அமைப்பதில் தோல்வி கண்டால், பிரதமர் ஒருவரை தேர்வு செய்வதற்கு பாராளுமன்றத்தை ஜனாதிபதி கோருவார். அதுவும் முடியாத பட்சத்தில் இஸ்ரேல் மீண்டும் ஒரு முறை பொதுத் தேர்தலுக்கு செல்லும் நிலை உள்ளது. பிரதமர் நெதன்யாகு ஊழல் வழக்கு விசாரணைக்கு முகம்கொடுத்திருக்கும் நிலையிலேயே இஸ்ரேலில் அரசியல் இழுபறி நீடித்து வருகிறது. அந்தக் குற்றச்சாட்டுகளை நெதன்யாகு மறுத்து வருகிறார். எனினும் குற்றவியல் குற்றச்சாட்டுகளுக்கு முகம்கொடுத்திருக்கும் நிலையில் அவர் தொடர்ந்து பதவியில் இருக்கக் கூடாது என்று அவரது போட்டியாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

1996 தொடக்கம் ஐந்து அரசுகளுக்கு நெதன்யாகு தலைமை வகித்துள்ளார். கடைசியாக அவர் பிரதான எதிர்க்கட்சியுடன் சேர்ந்து கூட்டணி அமைத்த நிலையில் கடந்த டிசம்பரில் அது முறிந்தது. அதனைத் தொடர்ந்தே அண்மைய தேர்தல் இடம்பெற்றது.

## பிரேசில் பாலர் பாடசாலையில் கத்திக்குத்து: ஐவர் உயிரிழப்பு



தெற்கு பிரேசிலில் உள்ள பாலர் பாடசாலை ஒன்றில் 18 வயது இளைஞர் ஒருவர் நடத்திய கத்திக்குத்து தாக்குதலில் ஐந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதில் இரண்டு வயதுக்கு குறைவான மூன்று குழந்தைகள் மற்றும் அந்த பாடசாலையின் இரு பணியாளர்களே கொல்லப்பட்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து அந்த ஆயுதத்தை தன் மீது பயன்படுத்தி இருக்கும் தாக்குதல்தாரி ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சன்டா கட்டரினா என்ற மாகாணத்தின் சவுடாடஸ் என்ற சிறு நகரில் இடம்பெற்ற இந்த தாக்குதலின் பின்னணி பற்றி தெளிவாகத் தெரியவில்லை.

சம்பவம் இடம்பெறும்போது சிறுவர்கள் பலர் அந்த பாடசாலையில் இருந்த நிலையில் அவர்களை மறைத்து வைப்பதற்கு பணியாளர்கள் முயன்றுள்ளனர். இதில் நான்காவது ஒரு சிறுவர் சிறு காயத்திற்கு உள்ளாகியுள்ளார். கத்தியுடன் ஆடவர் ஒருவர் பாலர் பாடசாலைக்குள் நுழைந்ததாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்ததை அடுத்தே இராணுவ பொலிஸார் அங்கு விரைந்துள்ளனர்.

அந்த பாலர் பாடசாலை வாயிலில் இருந்த ஆசிரியர் ஒருவரை முதலில் தாக்கிய அந்த ஆடவர் வகுப்பறை ஒன்றுக்கு சென்று சிறுவர்கள் மீது தாக்குதல் நடத்தி இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## அமெரிக்காவில் வைரஸ் பரவல் தொடர்ந்து வீழ்ச்சி



அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோர்எண்ணிக்கைதொடர்ந்துகுறைந்துள்ளது. தினசரி வைரஸ் தொற்றுக்கு ஆளாவோர், உயிரிழப்போர் ஆகியோரின் சராசரி எண்ணிக்கை ஜனவரியை விட 80 வீதம் குறைந்துள்ளது. நாடு முழுவதும் நோய் தொற்றுக் கட்டுப்பாடுகள் மேலும் தளர்த்தப்படுகின்றன.

அமெரிக்க மக்கள் தொகையில் சுமார் 30 வீதத்தினருக்கு இரு முறை தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

43 வீதத்திற்கும் அதிகமானோர் முதல் தடுப்பூசி போட்டுள்ளதாக, அமெரிக்க நோய்க் கட்டுப்பாட்டு, தடுப்பு நிலையம் குறிப்பிட்டது.

இருப்பினும், உருமாறிய புதிய வகை வைரஸ் பரவி வருவதால், அமெரிக்கா கூட்டு எதிர்ப்புச் சக்தியை அடைவது கடினம் என்று சுகாதார வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

## கொரோனா சோதனை கருவிகளை 'கழுவி' விற்பனை செய்தோர் கைது



இந்தோனேசியாவில் நாசி குச்சியால் மேற்கொள்ளும் கொரோனா சோதனை கருவிகளை கழுவி மீண்டும் விற்ற குற்றச்சாட்டில் மருந்து நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மீள் பயன்படுத்தப்பட்ட கருவிகளைக் கொண்டு மெடான் நகர விமான நிலையம் ஒன்றில் 9,000 பயணிகள் மீது கொரோனா தொற்று சோதனை செய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த பயணிகள் சார்பில் கிமியா பார்மா என்ற அரசுக்கு சொந்தமான மருந்து நிறுவனம் வழக்கிற்கு முகம் கொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த பெருந்தொற்று காரணமாக நாசி குச்சியால் மேற்கொள்ளும் கொரோனா சோதனை பல நாடுகளிலும் வழக்கமான ஒன்றாக மாறியுள்ளது.

வடக்கு சுமத்திராவில் மெடான் நகரில் உள்ள குவாலானாமு விமான நிலையத்தில் கடந்த டிசம்பர் மாதம் தொடக்கம் இந்த மோசடி இடம்பெற்று வருகிறது என்று சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விமானத்தில் பறப்பதற்கு பயணிகளுக்கு கொரோனா தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட வேண்டி இருந்ததால் இந்த விரைவுச் சோதனை இடம்பெற்று வந்துள்ளது. இதற்கான சோதனைக் கருவிகளை கிமியா பார்மா மருந்து நிறுவனம் வழங்கியுள்ளது.

தமக்கு தவறான முறையில் சோதனை செய்யப்படுவதாக பயணிகள் முறையிட்டதை அடுத்தே பொலிஸார் இதுபற்றி விசாரணை நடத்தியுள்ளனர்.

# சிரியாவின் பல பகுதிகளில் இஸ்ரேல் சரமாரி தாக்குதல்

## ஒருவர் பலி: அறுவர் காயம்



மத்திய தரைக்கடலை ஒட்டிய துறைமுக நகரான லடகியா உட்பட வட கிழக்கு சிரியாவின் பல பகுதிகளில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலை சிரிய வான் பாதுகாப்பு முறை இடைமறித்துள்ளது. இதன்போது ஒருவர் கொல்லப்பட்டு ஆறு பேருக்கு காயம் ஏற்பட்டிருப்பதாக இஸ்ரேல் அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை அதிகாலை இடம்பெற்ற இஸ்ரேலிய தாக்குதல்களில் ஹிபா, லடக்கியா நகரின் கிழக்கு பகுதி மற்றும் ஹமா மாகாணத்தில் மஸ்யாப் பகுதிகளும் இலக்கு வைக்கப்பட்டுள்ளன. தெற்கு லடக்கியா மற்றும் ஏனைய கரையோர பகுதிகள் மீது அதிகாலை 2.18 மணியளவில் தாக்குதல்கள் இடம்பெற்றதாக சிரிய இராணுவத் தரப்பை மேற்கோள்காட்டி அந்நாட்டு சானா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

'ஏவுகணை தாக்குதல்களை எமது வான் பாதுகாப்பு பிரிவு எதிர்கொண்டதோடு அவற்றில் சிலவற்றை சுட்டு வீழ்த்தின' என்று இராணுவம் சார்பில் பேசவல்ல ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதில் ஒரு ஏவுகணை சிவிலியன்களின் பிளாஸ்டிக் தொழிற்சாலையில் விழுந்து பொருட் சேதத்தை ஏற்படுத்தி இருப்பதாக அரச ஊடகம் தெரிவித்தது. இதில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட காயமடைந்த அனைவரும் பொதுமக்கள் என்று சானா செய்தி நிறுவனம் தெரிவித்தது. லடக்கியா சிரிய அரசின் கோட்டையாக இருப்பதோடு அது ஜனாதிபதி பஷர் அல் அஸாத்தின் பூர்வீக பூமியாகும்.

எனினும் இந்தத் தாக்குதல் பற்றி இஸ்ரேல் தரப்பில் உடன் எந்த பதிலும் அளிக்கப்படவில்லை. சிரியாவில் ஈரானுடன் தொடர்புபட்ட போராளிகளை இலக்கு வைப்பதாகக் கூறி இஸ்ரேல் கடந்த பல ஆண்டுகளில் சிரியா மீது நூற்றுக்கணக்கான தாக்குதல்களை நடத்தியுள்ளது.

எனினும் அது பற்றி இஸ்ரேல் மிக அரிதாகவே வெளி உலகிடம் கூறுகிறது.

சிரியாவில் அரச எதிர்ப்பு ஆர்ப்பட்டங்கள் கொடூரமான முறையில் ஒடுக்கப்பட்ட நிலையில் அங்கு வெடித்த உள்நாட்டுப் போரில் சிரிய அரசின் நெருங்கிய கூட்டாளியாக ஈரான் உள்ளது.

அண்டை நாடான சிரியாவில் இருந்து ஈரானிய படைகளை வெளியேற்றுவதே தமது இலக்கு என்று இஸ்ரேல் கூறி வரும் நிலையில் அது சிரியா மீது நடத்தும் தாக்குதல்கள் அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ளன.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN தினகரன்

2021 மே 6 வியாழக்கிழமை




**தொழுகை நேரம்**

04 முதல் 08 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.37 |
| லுஹர் | 12.09 |
| அஸர் | 03.27 |
| மஃரிப் | 06.19 |
| இஷா | 07.32 |

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் சித்திரை 23

ராகுகாலம் : பகல் : 01.30 - 03.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: மரணசித்த யோகம்
திதி: தசமி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | வெற்றி |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | நிறைவு |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | தனம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | செலவு |
| தனுசு | சுகம் |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | கோபம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

கொரோனா வைரஸ் தொற்று

# குணமடைந்தோர் எண்ணிக்கை 1 இலட்சத்தைத் தாண்டியுள்ளது

## 11 பேருக்கு ஒருவர் என தொற்றாளர் அடையாளம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தைக் கடந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்றைய தினமும் சிகிச்சை பெற்று வந்த மேலும் 922 வைரஸ் தொற்று நோயாளர்கள் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ள நிலையில் நாட்டில் குணமடைந்துள்ள கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தை தாண்டியுள்ளதாகவும் தொற்று நோய் சிகிச்சை பிரிவு தெரிவித்துள்ளது. அதற்கிணங்க இதுவரை நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் முழுமையான எண்ணிக்கை ஒரு இலட்சத்து 75 ஆக அதிகரித்துள்ளதாகவும் அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதேவேளை கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நேற்று முன்தினம் 11 பேர் உயிரிழந்ததாகவும், அதற்கிணங்க நாட்டில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றினால் ஏற்பட்ட மரணங்களின் மொத்த எண்ணிக்கை 720 ஆக அதிகரித்துள்ளதாகவும் அந்தப் பிரிவு தெரிவித்தது.

அதேவேளை நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பரிசோதனைகளின் முடிவுகளின்படி பதினொருவருக்கு ஒருவர் என்ற ரீதியில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர்.

தொடர்ச்சியாக இத்தகைய பரிசோதனை முடிவுகள் வெளியிடப்பட்டு வரும் நிலையில், கடந்த இரு தினங்களுக்கு முன்னர் சம்பந்தப்பட்ட நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கைக்கிணங்க ஒன்பது பேருக்கு ஒருவர் என்ற நிலையிலேயே வைரஸ் தொற்று நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஸ)




## தான தர்மம் செய்தலின் மகத்துவம்

ரமழான் மாதமானது நன்மைகள் நிரம்பப்பெற்ற வளமான மாதமாகும். இம்மாதம் தன்னகத்தே கொண்டுள்ள நன்மைகளையும் வளங்களையும் அடைந்து கொள்வதில் கவனம் செலுத்துவது மனிதனின் பொறுப்பு. அந்த வகையில் அல்லாஹ் ஒருவனுக்காக என்ற உணர்வோடு இம்மாதத்தில் தானதர்மங்களில் ஈடுபடும் போது ஈருலகிலும் அளப்பரிய நன்மைகளை அடைந்துகொள்ளலாம்.

அதேநேரம் தானதர்மங்களை எவ்வாறு அமைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஒழுங்கை அல்லாஹ்வே அல் குர்ஆனில் '(நபியே.. பொருட்களில்) எதைச் செலவு செய்வது ? (யாருக்குக் கொடுப்பது?) என்று உங்களிடம் கேட்கின்றனர். (அதற்கு) நீங்கள் கூறுங்கள் (நன்மையைக் கருதி) நீங்கள் எத்தகைய பொருளைச் செலவு செய்த போதிலும் (அதனைத்) தாய், தந்தை, சுற்றத்தார், அநாதைகள், ஏழைகள், வழிப்போக்கர்கள் ஆகியோருக்கு கொடுங்கள்' (02215) என்று குறிப்பிட்டிருக்கின்றான்.

அத்தோடு ரமழானில் புரியப்படும் தானதர்மங்களுக்கு அதிக நன்மைகள் கிடைக்கப்பெறும். இதற்கு நபி (ஸல்) அவர்கள் ரமழான் காலத்தில் வீசும் காற்றை விடவும் வேகமாக தானதர்மம் செய்யக்கூடியவர்களாக இருந்தமை நல்ல எடுத்துக்காட்டாகும்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஸல்மான் பின் ஆமிர் (ரலி) அவர்கள் 'ஏழைகளுக்கு தர்மம் வழங்கினால் தர்மத்திற்கான நன்மை கிடைக்கப்பெறும். உறவினர்களுக்கு தர்மம் செய்யும் போது தர்மத்திற்கான நன்மையும் உறவைப் பேணியமைக்கான நன்மையும் கிடைக்கப்பெறும் (ஆதாரம் இப்னு மாஜா, முஸ்னத் அஹ்மத்) என்றார்கள்.

ஆகவே அல் குர்ஆனும் நபி(ஸல்) அவர்களும் வழங்கியுள்ள வழிகாட்டல்களுக்கு ஏற்ப தானதர்மங்களை அமைத்துக்கொள்ள வேண்டும். அதன் ஊடாக பெற்றோர் சுற்றத்தார் உட்பட ஏழை எளியவர்கள், தேவையுடையோர் மீதான அன்பு, கருணை மனப்பான்மை மேலோங்கும். மனித நேயம் வளர்ச்சி அடையும். அவை அவர்களது தேவைகளும் எதிர்பார்ப்புகளும் நிறைவேற உதவுவதாகவும் அமையும். அதனால் இம்மாதத்தில் தான தர்மம் செய்வதில் அதிக அக்கறை எடுத்துக்கொள்வோம்.

மர்லின் மரிக்கார் ...

# கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு இராணுவத்தினரால் 10,000 படுக்கைகள்

## இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவிப்பு

கொரோனா சிகிச்சை நிலையங்களுக்காக இராணுவம் 100,000க்கும் மேற்பட்ட படுக்கைகளை வழங்குவதோடு, இராணுவ முகாம்களை இடைநிலை பராமரிப்பு மையங்களாகச் செயற்படுத்தவுள்ளது என இராணுவத் தளபதியும், தேசிய கொவிட் 19 தடுப்பு செயற்பாட்டு மையத்தின் பிரதானியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய ஆயுதப்படைகள் சாதாரண படுக்கைகளையும் கொவிட்19 நோயாளிகளுக்கு இடைநிலை பராமரிப்பு மையங்களாகச் செயற்பட முகாம்களையும் வழங்குவர். மேலும் மருத்துவமனைகளில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவின் திறனை அதிகரிப்பர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன் படி அதி தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் படுக்கைகளின் எண்ணிக்கையை விரைவில் அதிகரிப்பது தொடர்பாக யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

தற்போது கொரோனா சிகிச்சை நிலையங்கள் அதிக பணியாளர்களுடன் பகல் மற்றும் இரவு முழுவதும் கொரோனா நோயாளர்கள் தொடர்பான முன்னேற்றங்களைக் கண்காணித்து வருவதுடன் , சுகாதாரப் பிரிவுடன் தொடர்பு கொண்டு புதிய நோயாளிகள் பற்றிய விபரங்களை சேகரித்து வருவதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்தார். தனிமைப்படுத்தல் பணிகளை உன்னிப்பாகக் கண்காணிக்கும் படி பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், வீடுகளில் 7 நாட்கள் முதல் இரண்டு வாரங்கள் வரை தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டியது அவசியம் எனவும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார்.

# தோட்ட தொழிலாளருக்கு காணிகள் வழங்கும் திட்டம்

## அமைச்சரவை அனுமதி வழங்கல்

மலையக தோட்ட தொழிலாளர்களுக்கு காணி வழங்கும் திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஜனதா தோட்ட மேம்பாட்டு வாரியத்தின் கீழ் வரும் தோட்டங்களில் பணிபுரியும் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 7பேர்ச் காணி வழங்கவத்திற்கு அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே வழங்கிய திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

7 வருடகால கோரிக்கையான 1000 ரூபாய் சம்பளம் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதுடன் மிக நீண்டகால கோரிக்கையான உறுதிக்காணி கோரிக்கையும் முதல் கட்டமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

## ஹற்றனிலிருந்து வந்த புதுக்குடியிருப்பு வாசிக்கு கொரோனா

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்குட்பட்ட வள்ளி புனம் பகுதியினை சேர்ந்த ஒருவர் கொவிட் 19 ற்கு இலக்காகியுள்ளார். ஹற்றன் பொஹவந்தலாவ பயிற்சி கல்லூரியில் பயிற்சி பெற்ற வள்ளிபுனத்தினை சேர்ந்த 31 அகவையுடை நபருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 29 ஆம் திகதி பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில் 03.05.21 அன்று இதன் முடிவு கிடைக்கப் பெற்றுள்ளது. ஹற்றனில் இருந்து வந்த நிலையில் புதுக்குடியிருப்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது முடிவு கிடைக்கப்பெற்றுள்ளது.

## 1990 'சுவசெரிய' சேவைக்கு தினமும் 5,000 அழைப்புகள்

### சுமார் 1000 பேர் நாளாந்தம் பயன்பெறுகின்றனர்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

1990 சுவசெரிய" அம்பியூலன்ஸ் சேவைக்கு நாளாந்தம் 5,300 இற்கும் அதிகமான அழைப்புகள் கிடைப்பதாக ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு தெரவித்துள்ளது.

இதனூடாக நாளாந்தம் 1000 இற்கும் அதிகமானவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதாகவும் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது, நாடு முழுவதுமாக 297 சுவசெரிய அம்பியூலன்ஸ்கள் சேவையில் ஈடுபடுவதோடு, சுவசெரிய சேவை ஊழியர்கள் சங்கத்தின் ஊடாக 1394 வண்டிகள் இயக்கப்படுவதாகவும் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு

06

கன மழையில் ஆற்றங்கரையோரமாக

# கீரை பறிக்க சென்ற தாயும் இரண்டு பிள்ளைகளும் பலி

## நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழப்பு



பெரும் மழை பெய்து கொண்டிருந்த போது கீரை பறிக்கச் சென்ற தாய் மற்றும் இரண்டு பிள்ளைகள் நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளனர்.

கட்டான, ஹல்பே, அம்பலயாய பிரதேசத்தில் தாய் ஒருவர் இரண்டு பிள்ளைகளுடன் நேற்று முன்தினம் (03) பெரும் மழை பெய்து கொண்டிருந்த போது கீரை பறிப்பதற்காக மாஓயாவிற்கு சென்றுள்ளனர்.

இதன்போது, குறித்த மூவரும் நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 41 வயதான தாய் மற்றும் அவரது 9 வயது பெண் பிள்ளை மற்றும் உறவினர் ஒருவருடைய 8 வயது ஆண் குழந்தை ஆகியோர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் கைவிடப்பட்டிருந்த களிமண் குழி ஒன்றில் இருந்து மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. சடலங்கள் நீர்கொழும்பு வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

# தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தால் பயணக்கட்டுப்பாடு

## - டாக்டர் அசேல குணவர்தன தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்கள் மேலும் அதிகமாக இனங்காணப்படுவார்களானால் மாகாணங்களுக்கிடையில் பயணத் தடை விதிக்க நேரும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மக்கள் மிக அவதானமாக செயற்படாவிட்டால் கொரோனா வைரஸ் நாடு முழுவதும் பரவும் எச்சரிக்கை சூழ்நிலை உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட கிராம சேவை உத்தியோகத்தர்கள் பிரிவு தனிமைப்படுத்தலுக்காக முடக்கப்பட்டுள்ள நிலையில் நேற்றுவரை நாடளாவிய 14 மாவட்டங்களில் 06 பொலீஸ் நிர்வாக பிரதேசங்களில் 98 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

06

# அர்ஜுன் உள்ளிட்ட பத்து பேருக்கு எதிரான வழக்கு

## ஜுன் 07 இல் அழைக்க நீதிமன்று உத்தரவு

மத்திய வங்கி பிணைமுறி மோசடியில் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் உள்ளிட்ட 10 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை, எதிர்வரும் ஜூன் மாதம் 7 ஆம் திகதி அழைப்பதற்கு கொழும்பு மேல்நீதிமன்றின் மூவரடங்கிய நிரந்தர நீதாய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கை மத்திய வங்கியின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட பிணை முறி ஏலத்தில், 688 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பிணைமுறிகளை போலியாக பரிமாற்றிய குற்றத்திற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, சம்பா ஜானகி ராஜரத்ன, தமித் தொடவத்த மற்றும் நாமல் பலேல்ல ஆகிய மூவரடங்கிய மேல்நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் நேற்று அழைக்கப்படவிருந்தது.

எனினும் தற்போதைய கொவிட்19 பரவல் காரணமாக நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு ஊடாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின் அடிப்படையில், இந்த வழக்கை எதிர்வரும் ஜூன் மாதம் 7 ஆம் திகதி வரையில் பிற்போடுவதற்கு நீதிபதிகள் ஆயம் தீர்மானித்துள்ளதாக நீதிமன்ற பதிவாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கையில் கொரோனா சூழ்நிலை உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.தற்போதைய கொரோனா வைரஸ் பரவல் சூழ்நிலையை தீவிர நிலையாக கருதி இலங்கை மக்கள் செயற்பட வேண்டுமென உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி டாக்டர் ஒலிவியா நிவெராஸ் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கையில் நாளாந்தம் கொரோனா வைரஸ் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. கொரோனா மூன்றாவது அலையானது மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியது.

இத்தகைய சூழ்நிலையை இலங்கை மக்கள் மிகவும் சாதாரணமாக எடுத்துக்கொள்ளக்கூடாது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எச்சரிக்கை மிகுந்த சூழ்நிலையில் சுகாதாரத் துறையினர்,பாதுகாப்புத்துறை மற்றும் அரசு துறையினரால் மட்டும் வைரஸ் தொற்று பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாது. பொதுமக்களின் முழுமையான ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ)

# முஸ்லிம் மாணவி சிங்களப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலாமிடம்

**மாவத்தகம தினகரன் நிருபர்**



2020 ஆம் ஆண்டுக்கான க. பொ. த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவி முஹம்மட் சாதிகீன் பாத்திமா புஸ்ரா வர்த்தகப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் சிங்கள மொழிப் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இம்மாணவி வர்த்தகம் ஏ, பொருளியல் ஏ, கணக்கியல் ஏ என மூன்று பாடங்களில் ஏ சித்திகளைப் பெற்று பாடசாலையின் வரலாற்றில் முதல் தடவையாக சாதனை நிலைநாட்டியுள்ளார்.

இம்மாணவி கண்டி பூருணவத்தையைச் சேர்ந்த முஹமட் சாதிகீன் மற்றும் கதீஜா தம்பதிகளின் புதல்வியுமாவார்.

# பிரதமரின் வடக்கு, கிழக்கு இணைப்பாளராக கீதநாத்



வடக்கு, கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு விடயங்கள் தொடர்பான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இணைப்பாளராக கீதநாத் காசிலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமரின் இணைப்புச் செயலாளராக தற்போது பதவி வகித்து வரும் கீதநாத் காசிலிங்கம் அதற்கு மேலதிகமாக இப்பொறுப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த நியமனம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையை பிறப்பிடமாகக் கொண்ட கீதநாத் கொழும்பில் கல்வி பயின்றவர்.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் இணைப்புச் செயலாளராகவும் இவர் முன்னர் பணியாற்றியிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 149.59 | 155.65 |
| கனடியன் டொலர் | 157.42 | 163.79 |
| யூரோ | 233.21 | 241.39 |
| ஜப்பான் யென் | 1.7806 | 1.8399 |
| சிங்கப்பூர் டொலர் | 145.26 | 150.65 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 270.21 | 278.96 |
| சுவிஸ் பிராங்க் | 211.99 | 220.17 |
| அமெரிக்க டொலர் | 195.08 | 199.94 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 529.40 | கட்டார் ரியால் | 54.81 |
| குவைத் டினார் | 662.13 | சவூதி ரியால் | 53.20 |
| ஓமான் ரியால் | 518.42 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.33 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

பிலவ வருடம் சித்திரை மாதம் 23ம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ரமழான் பிறை 23

### குறள் தரும் சிந்தனை



தவமும் தவமுடையார்க்கு ஆகும் அதனை
அஃதிலார் மேற்கொள் வது

தவக்கோலமும் தவஒழுக்கமும் உடையவர்க்கே பொருந்துவதாகும்; அக் கோலத்தை தவஒழுக்கம் இல்லாதவர் மேற்கொள்வது வீண்முயற்சியாகும்.

## கொவிட் 19 பரவலை கட்டுப்படுத்த அரசின் துரித நடவடிக்கைகள்

நாட்டில் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளானவர்களாக நாளாந்தம் பதிவாகின்றவர்களின் எண்ணிக்கை கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளது. அதிலும் கடந்த இரண்டொரு நாட்களாக தினமும் 1500 இற்கும் மேற்பட்டவர்கள் இத்தொற்றுக்குள்ளானவர்களாகப் பதிவாகும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் இத்தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்கும், அதற்கு உள்ளாகின்றவர்களை மருத்துவ ரீதியில் பராமரித்து முகாமைத்துவம் செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் பரந்த அடிப்படையில் முன்னெடுத்திருக்கின்றது.

அந்த வகையில் தற்போதைய இத்தொற்று பரவுதல் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தினமும் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கை 25 ஆயிரம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இத்தொற்றுக்குள்ளானவர்கள் அதிகளவில் பதிவாகும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை முடக்கும் நடவடிக்கைககளும் முன்னெடுப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் இற்றை வரையும் 70 இற்கும் மேற்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அத்தோடு இத்தொற்று தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல் மற்றும் தனிமைப்படுத்தல் சட்டங்களை உதாசீனம் செய்பவர்களையும், மீறி நடப்பவர்களையும் கைது செய்து சட்டத்தின் முன் ஆஜர்படுத்தி சட்ட நடவடிக்கைளும் முன்னெடுக்கப்படுகின்றன.

மத வழிபாட்டு நிகழ்வுகள் உள்ளிட்ட மக்கள் கூடக்கூடிய வகையிலான எல்லாவித வைபவங்களும் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன. பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களும் மூடப்பட்டுள்ளன. அரச தனியார் அலுவலகங்களில் பணிபுரிபவர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதற்கு ஏற்பவும் விஷேட சுற்றறிக்கையும் விடுக்கப்பட்டுள்ளன.

இவை இவ்வாறிருக்க, இத்தொற்றுக்கு உள்ளானவர்களுக்கு சிகிச்சை அளிக்கவென தயார்படுத்தப்பட்டுள்ள வைத்தியசாலைகளில் 13ஆயிரத்து 800 படுக்கைகள் தற்போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதனை மேலும் 10 ஆயிரம் படுக்கைகளால் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் இத்தொற்றுக்கு உள்ளானவர்களை அடையாளம் காணவெனப் பயன்படுத்தப்படும் பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ளத் தேவையான மருத்துவ உபகரணங்களை மேலும் கொள்வனவு செய்யவும் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தொற்று தவிர்ப்புக்கு சிறந்த தீர்வு தடுப்பூசியாகும். அந்த வகையில் நாட்டில் 09 இலட்சத்து 25 ஆயிரத்து 240 பேருக்கு அஸ்டரா செனகாவின் இந்திய உற்பத்தியான கொவிஷீல்ட் தடுப்பூசியின் முதலாவது 'டோஸ்' வழங்கப்பட்டுள்ளது. இதன் இரண்டாம் கட்டம் வழங்கும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றாலும் 3 இலட்சத்து 45 ஆயிரம் தடுப்பூசிகள்தான் கையிருப்பில் உள்ளன. இந்நிலைமை தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் விஷேட கவனம் செலுத்தியுள்ளது.

தற்போது இந்தியாவில் ஏற்பட்டுள்ள இத்தொற்று நிலைமை காரணமாக கொவிஷீல்ட் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. இந்நிலையில் கொவிஷீல்ட் தடுப்பூசியை வழங்கும் சில நாடுகளில் இத்தடுப்பூசி மேலதிகமாக இருப்பதாகத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதனால் அவ்வாறான நாடுகளுடன் கலந்துரையாடி இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் டொக்டர் ரமேஷ் பத்திரன தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை இத்தொற்றுத் தவிர்ப்புக்காக ரஷ்யா உற்பத்தி செய்துள்ள ஸ்புட்னிக்_வி தடுப்பூசியைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை ஏற்கனவே அங்கீகாரம் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 13 மில்லியன் தடுப்பூசி கொள்வனவு செய்யப்பட உள்ளது. அந்த வகையில் முதற்கட்டமாக ஸ்புட்னிக்_வி தடுப்பூசியில் 15 ஆயிரம் நேற்றுமுன்தினம் நாட்டுக்கு வந்து சேர்ந்துள்ளது. எஞ்சிய தடுப்பூசிகளும் கட்டம் கட்டமாக நாட்டை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் சீன உற்பத்தியான சினோபாம் தடுப்பூசியில் 06 இலட்சம் ஏற்கனவே இலங்கைக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. அத்தடுப்பூசிக்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதும் இந்நாட்டு பிரஜைகளுக்கு அதனை வழங்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் இவ்வருட முடிவுக்குள் நாட்டில் 63 வீதமானோருக்கு இத்தொற்று தவிர்ப்புக்கான தடுப்பூசியை வழங்க எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி குறிப்பிட்டிருக்கின்றார்.

இவ்வாறு இத்தொற்று பரவுதல் கட்டுப்பாட்டுக்கான நடவடிக்கைகள் விரிவான அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இருப்பினும் எதிர்க் கட்சியினர் இத்தொற்று பரவுதலைப் பயன்படுத்தி அற்ப அரசியல் இலாபம் பெறும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதை மக்கள் கவலைக்குரிய நடவடிக்கையாகவே நோக்குகின்றனர். தற்போதைய சூழலில் இத்தொற்று பரவுதலை விரைவாகக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழுமையாக ஒத்துழைப்பதே சிறந்த பணியாகும்.

ஆகவே கொவிட் 19 தொற்று பரவுதலைக் கட்டுப்படுத்தி முகாமைத்துவம் செய்வதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு கட்சி பேதங்களுக்கு அப்பால் சகலரும் ஒத்துழைப்பு நல்குவதே இன்றைய தேவை.

editor.tkn@lakehouse.lk

# குடிநீருக்காக நீண்ட காலமாக ஏங்கும் காரைநகர் மக்கள்

## கடல்நீரை நன்னீராக மாற்றும் திட்டத்தை செயலுருப்படுத்த அமைச்சர் வாசுதேவ நாணயக்கார உதவ வேண்டுமென பிரதேச சபை தவிசாளர் கேதீஸ்வரதாஸ் அவசர கோரிக்கை

காரைநகர் மக்களுக்கு பொறிமுறையூடாக குடிதண்ணீர் வழங்கும் நடைமுறை பின்பற்றப்பட தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்குப் பொறுப்பான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார முன்வர வேண்டும். இதன் மூலமே காரைநகர் மக்களின் நீடித்த பிரச்சினைக்கு வரட்சிக் காலத்தில் மட்டுமன்றி, ஏனைய காலங்களிலும் குடிதண்ணீரை சிரமமின்றி பெற முடியும்.

இவ்வாறு காரைநகர் பிரதேச சபை தவிசாளர் வி.கேதீஸ்வரதாஸ் தெரிவித்தார்.

குடிதண்ணீருக்கு கஷ்டப்படும் காரைநகர் மக்களுக்கு நிலைபேறான பேண்தகு திட்டம் ஊடாக குடிதண்ணீர் வழங்கும் விடயமாக தவிசாளர் மேலும் தெரிவித்ததாவது:

"காரைநகர் மக்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கு நாம் குடாநாட்டில் உள்ள ஏனைய உள்ளூராட்சி சபைகளின் வளங்களை நீண்ட காலமாக நம்பியுள்ளோம்.

இன்று வரை எமக்கான குடிதண்ணீர் தேவை என்பதை உணர்ந்து ஏனைய சபைகள் எவ்வித தடைகளுமின்றி மனமுவந்து வழங்கி வருகின்றன. ஆனால் நீண்ட காலத்திற்கு நாம் ஏனைய சபைகளை குடிதண்ணீருக்காக நாட முடியாது. அவர்களின் நிலத்தடி நீர்வளம் பேணப்பட வேண்டும்.

எனவே இன்று நவீன தொழில்நுட்பத்தின் கீழ் கடல்நீரை பொறிமுறைத் திட்டத்தின் ஊடாக நன்னீராக மாற்றுவதற்கான தொழில்நுட்ப மற்றும் தொழில் நுணுக்க முறைகள் நன்கு வளர்ச்சியடைந்துள்ளன. எமது காரைநகர் பிரதேசத்தில் 3559 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 552 பேர் தற்போது வசிக்கின்றனர்.

இம்மக்களுக்கான குடிதண்ணீர் தேவையை நிறைவு செய்ய நாம் பவுசர் மூலம் குடிதண்



ணீர் வழங்கும் பொறிமுறையில் இருந்து முற்றாக மாற வேண்டும். மாற்றுத் திட்டமாக எமது மக்களுக்கு காரைநகர் கோவளம் கடல்நீரை பொறிமுறைத் திட்டத்தின் ஊடாக நன்னீராக மாற்றுவதற்கான மூலோபாயத் திட்டத்தினை உடன் முன்வைத்து செயற்படுத்த தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்குப் பொறுப்பான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார முன்மொழிய வேண்டும்.




அத்துடன் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் வடக்கு மாகாண பிரதிப் பொது முகாமையாளரும் யாழ். குடிதண்ணீர் திட்டப் பணிப்பாளருமான பொறியிலாளர் தி. பாரதிதாசன் எமக்கான கருத்திட்டத்தை தூர நோக்கில் கவனத்தில் கொண்டு முன்மொழிந்து குடிதண்ணீருக்காக அல்லல்படும் மக்களின் துன்பம் நீக்க முன்வர வேண்டும்.

இத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு எமது பூரண பங்களிப்பை நாம் முதன்மைப்படுத்துவதுடன் இவ்வாண்டுக்குள் கருத்திட்டம் நிறைவேறி மக்கள் முழுநன்மையடைய வேண்டும் என்பது எமது நிலைப்பாடாகும். தற்போது நெடுந்தீவு மக்கள் எவ்வாறு கடல்நீரை நன்னீராக்கி பயன்பெறுகின்றனரோ அதே போல காரைநகர் மக்களும் கடல்நீரை முழுமையாக பயன்படுத்தி நன்னீரை பெறும் பாக்கியத்திற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அமைச்சு உதவ வேண்டும். வடமாகாண ஆளுநரும் இதற்கு முன்வர வேண்டும்.

2030 இல் அனைவருக்கும் குடிதண்ணீர் திட்டம் எனும் மகுட வாக்கியம் நிறைவேற காரைநகர் பிரதேசம் முதலில் நன்மையடைவதே பொருத்தமானது." இவ்வாறு தவிசாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

"குடிதண்ணீர் விடயத்தில் வடக்கு மாகாண ஆளுநர் கூடுதல் முன்னுரிமை வழங்கி வருவதுடன் ஜனாதிபதியின் ஒத்துழைப்பும் கிடைக்கும் எனத் தெரிவித்துள்ளதால் காலத்தின் தேவையறிந்து முன்மொழியும் கருத்திட்டம் வலுப்பெற வேண்டும்" என தவிசாளர் கேதீஸ்வரதாஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

**எஸ்.ரமேஸ்...**

# நோன்பு காலத்தில் சமூக இடைவெளியை பேணி விழிப்புணர்வை கடைப்பிடியுங்கள்!

## அக்கரைப்பற்று பொது சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் பரூசா நக்பர் கண்டிப்பான அறிவுறுத்தல்



அடுத்து வரும் சில நாட்களில் கொரோனா வைரசின் தாக்கம் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியதாக அமையுமென்று எதிர்பார்க்கப்படுவதால், பொதுமக்கள் இந்த அலையிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் என அக்கரைப்பற்று பொது சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் பரூசா நக்பர் கேட்டுக் கொண்டுள்ளார்.

புடைவைக் கடை உரிமையாளர்களுக்கும் , சிகை அலங்கார நிலைய உரிமையாளர்களுக்கும், கொரோனா வைரஸ் தொற்று அபாயம் தொடர்பாக அவர்கள் எவ்வாறு தமது தொழில்கள மேற்கொள்ள வேண்டுமென ஏற்கனவே விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட டொக்டர் பரூசா நக்பர் குறிப்பிட்டார். அது குறித்து எழுத்து மூலமான அறிவுரைகளை வழங்கியிருப்பதாகவும் அவர் கூறினார்.

முஸ்லிம் மக்கள் இன்றைய ரமழான் காலத்தில் பள்ளிவாசல்களில் சட்ட திட்டங்களுக்கு அமைவாக மிகவும் கண்டிப்பாக நடந்து கொள்ள வேண்டும் எனவும் இப்தார் ஒன்று கூடல்கள், தேநீர் ஒன்றுகூடல்கள் போன்றவற்றை தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர் வேண்டியுள்ளார். இது விடயத்தில் பள்ளிவாசல் நிர்வாகம் மிகவும் அவதானமாகவும் விழிப்பாகவும் செயல்பட வேண்டும் என டொக்டர் பரூசா நக்பர் அறிவுறுத்தியுள்ளார்.

"முடியுமான வரை புடவைக் கடைகளுக்கு செல்வதை தவிர்த்துக் கொள்ளுங்கள். அவசியம் ஏற்படுமிடத்து மாத்திரம் அவதானமாக சென்று வாருங்கள். கூட்டம் கூட்டமாகச் செல்லாது புடைவைக் கடைகளின் கொள்ளளவைக் கருத்திற் கொண்டு சமூக இடைவெளியைப் பேணி நடந்து கொள்ளுங்கள்.

கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும், அதன் அபாயத்திலிருந்தும் நாம் இன்னும் பூரணமாக விடுபடவில்லை என்பதனை மறந்து விடலாகாது. நாளாந்தம் இதன் தாக்கத்திற்கு உட்பட்ட பலர் இனங்காணப்பட்டு வருவதை ஊடகங்கள் வாயிலாக அறிந்திருந்தும் அதன் ஆபத்தை இன்னும் பலர் அறிந்து கொள்ளாமல் செயற்பட்டு வருவது கவலைக்குரியது" என்றும் டொக்டர் பரூசா நக்பர் குறிப்பிட்டார்

"கொரோனா வைரஸின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பு பெற்றுக் கொள்வதில் சமூகஇடைவெளி பேணுவதே பிரதானமாகக் காணப்படுகின்றது. அத்துடன் கைகளை அடிக்கடி சவர்க்காரம் இட்டு சுத்தம் செய்து கொள்வது, வெளியில் செல்லும் போது முகக்கவசம் பயன்படுத்துவது, உடல் ஆரோக்கியத்தை நன்றாக பேணிக் கொள்வது போன்ற சுகாதார அறிவுறுத்தல்களை தொடர்ந்தும் நாம் பின்பற்ற வேண்டும்.

குறிப்பாக, முஸ்லிம் மக்கள் நோன்புப் பெருநாள் நெருங்கி வரும் இவ்வேளை மிகவும் அவதானத்துடன் செயற்படுவது அவசியம். தொற்று நோய் தவிர்ப்பு நடைமுறைகளை உரிய முறையில் பின்பற்றி ஒத்துழைப்பு வழங்குவது நாட்டிற்கு வழங்கும் பெரும் பங்களிப்பாகும். புடைவைக் கடைகள், வர்த்தக நிலையங்கள், சந்தைகளில் சமூக இடைவெளி பின்பற்றப்படாது அதிக சனநெரிசல் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறான நிலைமைகள் தொடர்ந்தும் காணப்படுமாயின் மீண்டும் ஊரடங்கு சட்டத்தை மிகவும் கண்டிப்பாக அரசாங்கம் அமுல்படுத்த வேண்டி ஏற்படலாம் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவது ஒவ்வொருவரினதும் கடமை மட்டுமல்லாது, இது ஒரு சமூகப் பொறுப்புமாகும் என்பதை ஒவ்வொருவரும் நன்கு உணர வேண்டும். அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச மக்கள் சமூக இடைவெளியை கடைப்பிடித்து சட்டத்தையும், ஒழுங்கையும் பின்பற்ற வேண்டும். அரசாங்க அறிவுறுத்தல்களுக்கமைய கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரின் நேரடி வழிகாட்டுதலின் கீழ் அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், மக்களின்

## கடைகள், சிகை அலங்கார நிலையங்களுக்கு செல்வதில் எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம்; சட்டதிட்டங்களை கடைப்பிடிப்பது ஒவ்வொருவரினதும் பொறுப்பு





இயல்பு வாழ்க்கையை வழமைக்கு கொண்டு வருவதற்கான பல்வேறுபட்ட விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. அதற்கமைய புடைவைக் கடைகளின் உரிமையாளர்கள், சிகை அலங்கார தொழிலாளர்கள், உணவகங்களின் உரிமையாளர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன" என்று அவர் விபரித்தார்.

இதேவேளை, பொது சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் பரூசா நக்பர் தலைமையிலான அதிகாரிகள் புடைவைக் கடைகள், மீன் சந்தை, மரக்கறிச் சந்தை , பஸ் நிலையம் உட்பட பல இடங்களுக்கும் அடிக்கடி சென்று நிலைமையைப் பார்வையிட்டு வருகின்றனர். பீ.சி.ஆர் பரிசோதனைகளும் நடத்தப்பட்டு வருகின்றன. முகக்கவசம் அணியாதோர் கடுமையாக எச்சரிக்கப்படுகின்றனர்.

**அட்டளைச்சேனை குறூப் நிருபர்**

# 'என்னடி முனியம்மா கண்ணுல மைய்யி' புகழ் நடிகர் நடராஜன் காலமானார்



"என்னடி முனியம்மா கண்ணுல மைய்யி" பாடல் மூலம் பிரபலமான பழம் பெரும் பாடகரும், நடிகருமான டி.கே.எஸ். நடராஜன் வயது மூப்பு காரணமாக நேற்று காலை இயற்கை எய்தினார். அவருக்கு வயது 87. தமிழ் சினிமாவில் தொடர்ந்து பல பிரபலங்கள் உடல் நலக் குறைவு காரணமாக காலமாகி வருகின்றனர்.

இந்நிலையில், பழம் பெரும் நடிகரான டி.கே.எஸ். நடராஜன் மறைவு சினிமா பிரபலங்களையும் ரசிகர்களையும் சோகத்தில் ஆழ்த்தி உள்ளது. 1954ம் ஆண்டு வெளியான 'ரத்த பாசம்' படத்தின் மூலம் நடிகராக அறிமுகமானவர் டி.கே.எஸ். நடராஜன். ஏராளமான நாட்டுப்புற பாடல்களையும் பாடி பிரபலமானவர்.

எம்.ஜி.ஆர், சிவாஜி, ரஜினிகாந்த், கமல்ஹாசன் உள்ளிட்ட அனைத்து முன்னணி நடிகர்கள் படங்களிலும் நடித்து பிரபலமானவர். தமிழ் சினிமாவில் 500க்கும் மேற்பட்ட படங்களில் குணசித்திர நடிகராக நடித்துள்ளார். பிரபல இசையமைப்பாளர் சங்கர் கணேஷ் இசையில் 'வாங்க மாப்பிள்ளை வாங்க' படத்தில் இடம் பெற்ற "என்னடி முனியம்மா" பாடலை பாடி ரசிகர்கள் மத்தியில் பிரபலமானவர் நடராஜன். மேலும், 2006ம் ஆண்டு அர்ஜுன் நடித்த 'வாத்தியார்' படத்தில் அந்த பாடல் ரீமேக் செய்யப்பட்ட நிலையில், டி.கே.எஸ். நடராஜனையும் அந்த பாடலில் ஆட வைத்திருந்தனர். பாடகராகவும் நடிகராகவும் தமிழ் சினிமாவில் பல ஆண்டுகள் பணியாற்றி வந்தவர் அவர்.

# மக்களின் துயர் துடைக்க ஓயாமல் உழைத்த ஆளுமை மிகுந்த அதிகாரி வே. சிவஞானசோதி

**புன்னகை பூத்த முகம், யாரும் அணுகக்கூடிய சுபாவம், கூர்ந்து கிரகிக்கும் திறன், அமைதியாக அரவணைத்துப் பேசும் பக்குவம் போன்ற உயர் குணங்களைக் கொண்டவரும், மக்கள் சேவையே தனது அரச பணியின் பிரதான கடமை என வாழ்ந்தவருமான அரச உயர் அதிகாரி வே.சிவஞானசோதி கடந்த மாதம் ஐந்தாம் திகதி இவ்வுலகை விட்டு பிரிந்தார்.**

அரச பணிகளில் மிகச் சிறந்த ஆளுமையான வர் இவர். இனம், மதம், கட்சி போன்ற பேதங் களைக் கடந்து விளங்கிய அவர், இலங்கை திட்டமிடல் சேவையில் தனது அரச சேவையை ஆரம்பித்து பணிப்பாளர், பணிப்பாளர் நாயகம், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சின் செய லாளர், நிறைவாக சிரேஷ்ட செயலாளர் என தனது அரச பணிகளை செவ்வனே நிறைவு செய்தார். இந்தப் பயணத்தில் அவருடைய சிறந்த செயற்திறனின் பயனாக இந்நாட்டு மக்கள் பல அரச திட்டங்களின் பலன்களை அனு பவிக்கும் பேறு பெற்றார்கள்.

முக்கியமாக, நாடு தழுவிய ரீதியில் கம்பெ ரலிய துரித கிராமிய அபிவிருத்தித் திட்டம், கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், பின்தங்கிய பிரதேச அபிவிருத்தித் திட் டங்கள், சிறிய நடுத்தர கைத்தொழில் மேம்பாட் டுத் திட்டம், கைத்தொழில் பேட்டைகள் அபிவி ருத்தித் திட்டம் போன்ற பல அரச திட்டங்களை செவ்வனே அமைச்சரவையில் உரிய அங்கீகா ரங்களை நேரம் தவறாது பெற்று, அந்தந்த அரச அதிகாரிகள் மூலமாக, விரைவாக மக்க ளுக்கு கிடைக்க இரவு பகலாக அயராது சேவை யாற்றினார்.

அவருடைய உண்மையான உழைப் பும், நட்பார்ந்த பேச்சும், அரவணைத் துச் செல்லும் சுபாவமும் மற்றைய அரச அதிகாரிகளுக்கு அவரோடு சேர்ந்து பணி யாற்றவும் மேற்கூறிய திட்டங்களை திட் டமிட்டவாறு செயல்படுத்தவும் பெரும் துணையாகவும் ஊக்கமாகவும் இருந்தன.

மிகப் பெரியதும், கடுமையானதுமான பல திட்டங்களை தன் தனிப்பட்ட திறமை யால் நிறைவேற்றிய பெருமை அன்னாரை சாரும். அவர் தனது ஆரம்பக் கல்வியை கொழும்பு விவேகானந்தா கல்லூரியி லும், இடைநிலைக் கல்வியை யாழ் பரி. யோவான் மற்றும் யாழ் இந்துக் கல்லூ ரிகளிலும் நிறைவாக உயர் கல்வியை கொழும்பு றோயல் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார்.

உயர் கல்வியை நிறைவு செய்யும் போது விக்கிரமசிங்க ஞாபகார்த்த விருதையும், சேர். சுசந்த டீ பொன்சேகா ஞாபகார்த்த விருதையும் சிறந்த கல்வித் தகைமைகளுக்காகப் பெற்றுக் கொண்டார்.

மேலும், கொழும்பு பல்கலைக்கழகம், பிராங்பொர்ட் பல்கலைக்கழகம் பிரித்தானியா, ஹவார்ட் பல்கலைக்கழகம் ஐக்கிய அமெரிக்க இராச்சியம், ஓட்டாவா கார்ல்ட்டன் பல்கலைக்க ழகம் கனடா போன்றவற்றில் தனது மேற்படிப் பையும், துறைசார் பயிற்சிகளையும் பெற்றுக் கொண்ட அவர், தனியார் துறையைத் தேர்ந்தெ டுக்காமல் இந்நாட்டு மக்களுக்கு பணி செய்ய வேண்டுமென்ற அவாவினால் அரச பணியில் தன்னை இணைத்துக் கொண்டார்.



ஒரு மாத நினைவு தினம்

முக்கியமாக வடக்கு, கிழக்கு மக்களின் இடர் துடைக்க அமைச்சரவையிலும், பாராளுமன்றத் திலும், மாகாண சபைகளிலும், பிரதேச சபைக ளிலும் பல திட்டங்களை நிறைவு செய்வதற்காக இரவு பகல் என்று பார்க்காமல் தனது இறுதி மூச்சு வரை செயலாற்றினார். போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீட்டுத் திட்டம், இடம்பெயர்ந்த மக்களுக்கான மீள்குடியேற் றம், இராணுவ சேவைக்காக எடுக்கப்பட்ட காணிகளை மீண்டும் மக்களிடம் கையளிக் கும் திட்டம், கண்ணி வெடியகற்றல் மற்றும் பல்வேறு கல்வி, சுகாதார, மருத்துவ, தரை ஆகாய போக்குவரத்து, உட்கட்டமைப்பு, வழிபாட்டுத் தலங்கள் மேம்பாடு, பனை வள அபிவிருத்தி, மீன்பிடி அபிவிருத்தி, போன்ற அத்தியாவசிய திட்டங்களை மிகத் துரிதமாக பல்வேறு அரசாங்கங்களின் அனுசரணையுடன் அமுல்படுத்த அயராது பணியாற்றினார்.

தனிப்பட்ட மனித வாழ்வு மேம்பட வேண்டும் என்ற எண்ணக்கருவோடு உருவாக்கப்பட்ட உதவித் திட்டங்கள் பலவற்றை மக்களுக்கு கிடைக்க வழி சமைத்தார். உதாரணமாக, பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உதவித் திட்டம், மாற்றுத்திறனாளிகள் உதவி, கண்ணிவெடியால் பாதிக்கப்பட்டவர்களைக் கொண்ட குடும்பங்க ளுக்கான உதவிகள், புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கான உதவி, பட்டதா ரிகளுக்கான வேலைவாய்ப்பு, தொண்டராசிரி யர்களுக்கான நிரந்தர வேலைவாய்ப்பு போன்ற வாழ்வாதார திட்டங்களை முன்னின்று நிறை வேற்றியுள்ளார்.

அன்னாரின் சேவைகள் கடல் கடந்தும் பல சபைகளிலும், கருத்தரங்குகளிலும் பரந்துள் ளன. ஐக்கிய நாடுகள் சபையின் அமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் போன்றவற்றில் முதன் மைப் பேச்சாளராகவும், ஆலோசகராகவும் அர சாங்கம் சார்பாக பங்குபற்றியுள்ளார்.

சர்வதேச பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான நிதி வழங்கும் நாடுக ளின் ஆதரவோடு நிறுவப்பட்ட செயலணி யின் இணைத்தலைவராகவும் இலங்கைக்குப் பெருமை சேர்த்துள்ளார். அதன் பயனாக கண் ணிவெடி அகற்றல் திட்டத்தின் முன்னேற்றத்தை யும் பெறுபேறுகளையும் கேட்ட சபை 2021 இல் இலங்கையை கண்ணிவெடியற்ற நாடாக பிரகடனப்படுத்தும் பட்டியலில் இணைத்துக் கொண்டது.

அன்னாரின் சேவையின் திறன் கண்டு பொதுநலவாய கணக்காளர் மற்றும் தேசிய முகாமைத்துவ கணக்காளர் களின் சர்வதேச மாநாட்டில் அவருக்கு 'உயர் தொழில்சார் அதிசிறப்பு விருது' வழங்கிக் கௌர விக்கப்பட்டது.

அதேபோல் இலங்கை கம்பன் கழகத்தினால் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத் திக்கு பாரிய பங்களிப்புச் செய்தமைக்காகவும் பல்வேறு தேசிய ரீதியான அபிவிருத்தித் திட்டங் களைச் சிறப்பாக அமுல்படுத்தியமைக்காகவும் 'சான்றோருக்கான விருது' வழங்கி கௌரவிக் கப்பட்டார்.

இவ்வாறாக தன் இறுதிமூச்சு அயராது உழைத்து மறைந்த சிவஞானசோதி நினைவை விட்டு அகலாத சேவையாளர் ஆவார். (ஸ)

**யுத்தத்தில் அல்லலுற்ற மக்களின் நல்வாழ்வுப் பணிக்காக அன்னார் ஆற்றிய பணிகள் என்றும் நினைவை விட்டு நீங்காதவை**

---

# பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிப்பு

## இன்றைய பின்னடைவை சீர்செய்ய ஆரம்பிக்க வேண்டிய உடனடி திட்டம் யாது? மருத்துவ நிபுணர் முன்வைக்கும் ஆலோசனைகள்...

**கடந்த 2020 பெப்ரவரி மாதம் இலங்கையில் கொரோனா தாக்கம் அதிகரித்ததைத் தொடர்ந்து கடந்த 14 மாதங்களுக்கு மேலாக அரசாங்க பாடசாலைகள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மூடிக் கிடப்பதையும், முறையான கல்விச் செயற்பாடுகள் இன்றி மாணவர்கள் வகுப்பேற்றப்படு வதையும் காணக் கூடியதாக உள்ளது.**

இந்த நிலைமையானது இந்த வருடம் சீராகும் என்று எதிர்பார்க்கப் பட்ட போதும், கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள 3 முக்கிய காரணங்களினால் கல்விச் செயற்பாடுகள் பின்னடைவு கண்டுள்ளது என்பதுடன், இன்னும் சில வருடங்களுக் கும் இதேநிலை தொடரக் கூடிய ஆபத் தான நிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

1. தடுப்பூசி வழங்குவதில் ஏற்பட்ட தாமதம்

தடுப்பூசி இந்த வருட ஆரம்பத்தில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும், இலங்கை ஏனைய பல நாடுக ளுடன் ஒப்பிடும் போது தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள உரிய முன்னடவ டிக்கை எடுக்கத் தவறியதால், இப்பணி தாமதமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது டன் மெதுவாக வழங்கப்படுகிறது. இந்த நிலையில் குடித்தொகையில் நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் நிலையை அடைவதற்கு தேவையான அளவு தடுப்பூசிகளை வழங்குவதற்கு பல மாத காலம் செல்லும் .

2. வைரஸ் உருமாற்றத்தினால் ஏற் பட்டுள்ள பின்னடைவு

ஆரம்பத்தில் கொரோனா வைரஸ் சிறுவர்கள் மத்தியில் பாரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தாது என்று கரு தப்பட்டதுடன் தடுப்பூசிகளும் வளர்ந் தவர்களை இலக்கு வைத்தே தயா ரிக்கப்பட்டன. ஆனால் உருமாற்றம் பெற்று தற்போது நாட்டில் பரவி வரும் வைரஸ் சிறுவர்களையும் தாக்கும் வல்லமை கொண்டதாக இருப்பத னால், பாடசாலை வகுப்பறைச் சூழல் போன்ற ஒன்றுகூடல்களை மாணவர் கள் தவிர்க்க வேண்டிய நிலை ஏற்பட் டுள்ளது.



3. சமூகப் பரவல் நிலையினால் ஏற் பட்டுள்ள பின்னடைவு

அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து போன்ற கொரோனாவை வெற்றிகரமாக கட்டுப்படுத்திய நாடுகளுடன் ஒப்பிடும் போது, இலங்கை வெளிநாட்டில் இருந்து வரும் நோய்த் தொற்றையும் உள்ளூ ரில் பரவி வரும் நோய்த் தொற்றையும் கட்டுப்படுத்தத் தவறி விட்ட நிலையில் சமூகப் பரவல் அச்சம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் இருந்து மீள பல மாத காலம் செல்லும்.

இதன் காரணமாக நீண்ட காலம் பாடசாலைகள் மூடி இருக்கப் போகும் நிலையில், மாணவர்களின் உடல் உள நலன்களை பேணும் ஆலோசனைக ளுக்கு அப்பால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை மீண்டும் முன்னெடுப் பது எப்படி என்பதை தீவிரமாக சிந்திக்க வேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளது. மேலைத்தேய வளர்ச்சியடைந்த நாடுகள் இலகுவாக இந்தப் பிரச்சினைக்கு இணைய வழிக் கல்வியை மேம்படுத்திய தன் மூலமாக தீர்வு கண்டுள்ளன.

இலங்கையைப் பொறுத்த வரையில் இன்னமும் பல இடங்கள் இணைய ஆற்றல் எல்லைக்கு (internet coverage ), அப்பால் இருப்பதுடன், பல வறிய மாணவர்கள் இலத்திரனியல் உபகரணங் களைப் பயன்படுத்தி கல்வியை பெறும் வசதி அற்று இருக்கிறார்கள். இதன் காரணமாக இணைய வசதிகள் உருவா குவதற்கு முன்னர் வகுப்பறைகளுக்கு வராமல் மாணவர்கள் தொலைநிலைக் கல்வி பெறுவதற்குரிய முறைகளை குறிப்பாக அஞ்சல் வழிக் கல்வி முறை என்பது அமுல்படுத்துவதில் சிரமங்கள் இருந்தாலும், அனைத்து மாணவர்களும் பாகுபாடின்றி கல்வியை பெறுவதற்கு உரிய வழியாக பரிசீலிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இந்த முறையின்படி வாராவாரம் ஆசிரியர்கள் பாடங்களுக்குரிய வினாக் கொத்தை மாணவர்களுக்கு அனுப்பு வார்கள். மாணவர்கள் பாடப் புத்தகங் களை படித்து வினாக்கொத்துக்குரிய பதிலை சுயமுயற்சியினால் எழுதி அனுப் புவதுடன், ஆசிரியர்கள் பதில்களுக்கு ரிய பின்னூட்டங்களை திருத்தி அனுப்பு வார்கள்.



மருத்துவர்
**முரளி வல்லிபுரநாதன்...**
(Consultant Community Physician, Ministry of Health Visiting Lecturer, Universities of Jaffna & Colombo)

அசாதாரண சூழ்நிலையில் தியாக சிந்தையுடைய ஆசிரியர்கள் சிரமம் பாராது இந்தப் பணியை செய்ய முன் வருவார்கள் என்று எதிர்பார்க்கலாம். கல்வி அமைச்சு ஒவ்வொரு பாடத்துக் கும் ஆசிரியர் குழுக்களை அமைத்து நாடளாவிய ரீதியில் செயல்படுத்தக் கூடிய வகையில் பாடத்திட்டத்தின்படி வாராவாரம் அனுப்பக் கூடிய வினாக் கொத்துக்களையும்பதில்களையும் தயா ரித்துக் கொடுத்தால் இதை இலகுவாக அமுல்படுத்தலாம்.

தபால் சேவைகள் சீராக இயங்காத இடங்களில் பாடசாலைகளில் பெட்டி களை வைப்பதன் மூலம் மாணவர்கள் தமது கேள்வி பதில்களை பெற்றுக் கொள்ள முடியும். பழைய மாணவர் சங்கங்களும் ஏனைய நலன்விரும் பிகளும் கேள்விக் கொத்துகளை அச்சடிப்பது போன்ற மேலதிக செல வுகளை பொறுப்பெடுப்பதன் மூலமா கவும், அஞ்சல் வழிக் கல்வியில் சிறப் பாக செயல்படும் மாணவர்களுக்கு ஊக்குவிப்பு பரிசுகளை வழங்குவதன் மூலமாகவும் தமது பாடசாலைகளில் கல்வி நிலையை மேம்படுத்த முடியும்.

சுயவிருப்பத்தின் பேரில் மாணவர் கள் கற்க வேண்டிய தேவை இருப்பத னால் பெற்றோர்கள் வீட்டிலேயே தமது பிள்ளைகள் அஞ்சல் வழிக் கல்வியை கற்பதற்குரிய வசதிகளை ஏற்படுத்தி, அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். அதேவேளை அஞ்சல் வழிக் கல்வி மாணவர்கள் சுயமாக கல்வி கற்கும் ஆற்றலை மேம்படுத்துவதுடன் இந்த இருண்ட காலத்தில் இருந்து மீண்டு அறிவுடைய எதிர்கால சந்ததியினரை உருவாக்கவும் வழி சமைக்கும்.

பாதகமான இந்தக் காலகட்டத்தில் கல்விச் சமூகம் மீண்டும் சுமூக நிலை ஏற்படும் வரை இத்திட்டத்தை செயல் படுத்துவதற்கு எனது யோசனையை பரிசீலிக்க முன்வரவேண்டும் என்று விநயமாக கேட்டுக் கொள்கிறேன்.

**இணையவழி கல்வியை செயற்படுத்துவதில் பின்னடைவான அம்சங்கள் உள்ளதால் அஞ்சல் வழிக் கல்வி முறை மீது உடனடியாக கவனம் செலுத்துவதே உகந்தது. மாணவர்களின் எதிர்காலம் கருதி ஆசிரியர்கள் தியாக சிந்தையுடன் பணியாற்ற முற்படுவது ஒருபுறமிருக்க, நலன்விரும்பிகளின் ஒத்துழைப்பும் இங்கே பிரதானமாகின்றது.**

---


# இனநல்லுறவுக்காக இறுதிக் காலம் வரை உழைத்த இலக்கியவாதி மருதூர் வாணர்

**பிரபல எழுத்தாளரும், கவிஞரும் 'சமாதானம்' சஞ்சிகையின் ஆசிரியருமான மருதமுனையைச் சேர்ந்த கலாபூசணம் எஸ்.எல்.ஏ. லத்தீப் என்ற 'மருதூர் வாணர்' இலங்கையின் கலை, இலக்கியப் பரப்பில் பல சாதனைகளை புரிந்துள்ளார். இலக்கியமே இவர் பேச்சிலும், மூச்சிலும், நடைமுறைச் செயற்பாடுகளிலும் இருந்தது. தள்ளாத வயதிலும் தளராத மன உறுதியோடு இலக்கியப் பணி செய்து வந்தவர் மருதூர் வாணர்.**

தனது பழைய சைக்கிளில் தினமும் நூலகத்திற்குச் சென்று நாளேடுகள் அனை த்தையும் வாசித்து முடிப்பது அவரது நாளாந்தக் கடமைகளில் முக் கியமானதொன்றாகும். எல்லாக் கலை இலக்கிய நிகழ்வுகளிலும் முன்வரிசை யில் அமர்ந்து கொள்வார். நல்ல கலை இலக்கிய எழுத்துக்களைப் பாராட்டு வார், யாராக இருந்தாலும் பிழையான வற்றை துணிந்து விமர்சிப்பார்.

ஆரம்ப காலத்தில் கலை இலக்கித் தோடு அசியலில் அதிக ஈடுபாடு கொண்டு பல தமிழ், முஸ்லிம் அரசியல் தலை வர்களுடன் இணைந்து செயற்பட்டிருக் கிறார். தந்தை செல்வநாயகத்துடனும் பின்பு மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப்புட னும் நெருங்கிய தொடர்பு வைத்திருந் தவர். இவர்1939.08.24ஆம் திகதி மருதமுனையைச் சேரந்த சாலிஹ் லெவ்வை போடியார்,சரீபா உம்மா தம் மபதியருக்கு 3வது மகனாக பிறந்தார்.

தனது இலக்கிய ஆசான்களாக புல வர்மணி பெரியதம்பிப்பிள்ளையையும் அவருக்குப் பின் புலவர்மணிஆ.மு.ஷ ரிபுத்தீனையும் நன்றியுடன் நினைவு கூர்ந்துள்ளார்.1951ஆம் ஆண்டு 'என் தம்பி'என்ற தலைப்பில் பத்திரிகையில் பிரசுரமான கவிதையின் மூலம் தனது 11வது வயதில் இலக்கிய உலகிற் குள் பிரவேசித்துள்ளார். இவர் பாடல், நடிப்பு, இசை ஆகிய துறைகளில் அதிக ஈடுபாடு கொண்டவர். அத்தோடு நூற்றுக்கணக்கான கவிதைகள், சிறுக தைகள், கட்டுரைகள் என எழுதியுள்ள தோடு நபி ஜனன பா, இசைவிருந்து, முரசொலி, பெருநாள் பரிசு, முதலிரவு, சூறாவளி, மத்திய கிழக்கிலே,சுனாமி போன்ற நூல்கள் உள்ளிட்ட பல சிறிய நூல்களையும் எழுதியுள்ளார்.



'தேன்மதி' என்ற சஞ்சிகையை வெளி யிட்டதோடு இலங்கையில் இனப்பிரச்சி னைத் தீர்வின் மூலம் சமாதானம் வள ரவேண்டும் என்ற தூய எண்ணத்தோடு 'எல்லா இனங்களும் இணைந்தன்பு கொள்வோம்'என்ற தொனிப்பொருளில் 1988 ஜ்லை மாதம் முதலாவது 'சமா தானம்' சஞ்சிகை இதழை வெளியிட்டு மரணிக்கும் வரை 16 இதழ்களை வெளியிட்டுள்ளார். 17வது சமாதானம் இதழை வெளியிட இருந்த நிலையி லேயே அவர் உயிரிழந்தார்.

உள்நாட்டில் அனைத்து தேசிய பத்தி ரிகைகளுக்கும் ஆக்கங்கள் எழுதியுள் ளார். குட்டிப் புலவன் இசைவாணர், ஈழபாரதி என பல பட்டங்களைத் தன் னகத்தே கொண்டதோடு 2001ஆம் ஆண்டு கலாபூஷணம் விருதும் அர சாங்கத்தால் இவருக்கு வழங்கப்பட் டது. இவரது பணியைப் பாராட்டி யாழ் தந்தை செல்வா நினைவு மன்றத்தால் 2004.04.26ஆம் திகதி யாழ் பல்க லைக்கழக கைலாசபதி அரங்கில் 'தந்தை செல்வா விருது' வழங்கப்பட்டது. தினச்சு டர் விருதும் சிரேஷ்ட கவிஞருக்கான சான்றிதழும் கடந்த 2004.06.06 ஆம் திகதி கல்முனையில் முன்னாள் ஊடகப் பிரதி அமைச்சர் எம்.எச்.சேகு இஸ்ஸதீனால் வழங்கப்பட்டன.மேலும் தென்கிழக்குப் பல்கலைக் கழக அப் போதய பீடாதிபதி கலாநிதி கே.எம்.எச். காலிதீன், செழியன் பேரின்பநாயகம் உட்பட பலர் இவருக்குப் பொன்னாடை போர்த்தி இவரது இலக்கியப் பணியைப் பாராட்டியுள்ளனர்.

மருதூர் வாணர் தான் வாழும் காலத் திலேயே ஊடகவியலாளர்களையும், கலை இலக்கியவாதிகளையும் பாராட்டி வாழ்த்துப் பத்திரம்,பணமுடிப்பு என்பன வழங்கி கௌரவித்தவர் என்பது குறிப் பிடத்தக்கது.

இவரது இலக்கியப் படைப்புகளின் பிரசவத்திற்கு சட்டத்தரணியும்,பதில் நீதி பதியுமான மருதமுனையைச் சேர்ந்த ஏ.எம். பதுறுத்தீன் அவ்வப்போது நிதியு தவி வழங்கி மருதூர் வாணரை உச்சா கப்படுத்தினார். அவர் சேமித்து வைத்தி ருந்த பெருந்தொகையான நூல்களை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், மரு தமுனை பொது நூலகம், மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி நூலகம் ஆகியவற்றுக்கு தனது அந்திமக் காலத் தில் வழங்கினார். இவரது கவிதைகள், கட்டுரைகள்,கதைகள்,நூல்கள்,ஏனைய இலக்கியப் படைப்புக்கள் அனைத்தும் தென்கிழக்குப் பல்ககலைக்ககழகத்தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

கலாபூசணம் எஸ்.எல்.ஏ. லத்தீப் என்ற மருதூர்வாணர் தனது எழுபதா வது வயதில் கடந்த 2009.05.08ஆம் திகதி மருதமுனை பிரதான வீதியைக் கடக்க முற்படும் போது விபத்தில் அகப் பட்டு உயிரிழந்தார். இவர் மரணித்து 08.05.2021 அன்று 12 வருடம் பூர்த்தியடைகின்றது.

வறுமையிலும் புலமை கொண்டு பல்வேறு ஆளுமைகளுடன் பிரகாசித்த மருதூர்வாணரின் மரணம் பேரிழப்பாகும்.

**பி.எம்.எம்.எ.காதர்...**
(மருதமுனை தினகரன் நிருபர்)

## ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றிய மாணவி;

# மாவட்டத்தில் முதல் நிலை

கிளிநொச்சி குறூப் நிருபர்

கிளிநொச்சி மாவட்டத்தில் உயிரியல் தொழிநுட்ப பிரிவில் முதல் நிலை பெற்ற மாணவி கிளிநொச்சி அறிவியல் நகரில் இயங்கி வருகின்ற ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றியவராவார்.

பரீட்சை எழுதிவிட்டு தனது குடும்பத்தின் பொருளாதார சுமையை குறைக்க ஆடைத் தொழிற்சாலைக்கு பணிக்குச் சென்ற கிளிநொச்சி பரந்தன் பகுதியைச் சேர்ந்த மகேஸ்வரன் கயலினி என்ற கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மாணவியே இரண்டு ஏ, பி பெறுபேறுகளை பெற்று உயிரியல் தொழிநுட்ப பிரிவில் மாட்ட மட்டத்தில் முதல் நிலையை பெற்றுள்ளார். மூன்று சகோதரிகளை கொண்ட குடும்பத்தில் ஒருவர் திருமணம் செய்துள்ள நிலையில் இரண்டாவது சகோதரி யாழ்.பல்கலைகழகத்தின் தொழிநுட்டப பீடத்தில் கல்வி கற்று வருகின்றார். தந்தை கூலித் தொழில், தாய் வீட்டுப் பணி.

எனவேதான் 2020 உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு குடும்ப பொருளாதாரத்தை தனியே சுமந்து நிற்கும் தந்தைக்கு தோள் கொடுக்க ஆடைத் தொழிற்சாலைக்கு பணிக்குச் சென்றுள்ளார்.

பரீட்சை பெறுபேறு வெளிவந்த தினத்தில் கூட தனது ஆடைத் தொழிற்சாலை பணியை நிறைவு செய்துவிட்டு வீடு திரும்பிய போதே பெறுபேறுகள் வெளிவந்த செய்தியை அறிந்து தனது பெறுபேறுகளை பார்த்ததாகவும் தெரிவித்த கயலினி. தற்போதும் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றி வருவதாகவும் தெரிவித்தார்.





## வடமராட்சி கிழக்கு, மணற்காடு சவுக்கம் காடுப் பகுதியில் திடீர் தீ

வடமராட்சி கிழக்கு, மணற்காடு சவுக்கம் காடுப் பகுதியில் திடீர் தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

நூற்றுக்கு மேற்பட்ட மரங்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. தீயை அணைக்கும் முயற்சியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபட்டுள்ளனர். விஷமிகளால் தீ வைத்திருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்

## கொரோனா தொற்றில் தவிக்கும்

# இந்தியாவுக்காக பிரார்த்திக்கும் இலங்கைக்கு இந்தியா நன்றி தெரிவிப்பு

## இந்திய உயர் ஸ்தானிகராலயம் அறிக்கை

முன்னொருபோதும் எதிர்கொண்டிராத கொவிட்19 நோய்க்கு எதிராக தீவிரமான போராட்டத்தை முன்னெடுத்துவரும் இந்திய சகோதரர்களின் நலனுக்காக வாழ்த்துக்களை பகிர்ந்துகொண்டதுடன் தொடர்ந்து பிரார்த்தனைகளையும் முன்னெடுத்து வரும் இலங்கை மக்கள் மற்றும் மத குருமார்கள் உள்ளிட்டோருக்கு இந்திய மக்கள் சார்பாகவும் அரசாங்கம் சார்பாகவும் இந்திய உயர் ஸ்தானிகராலயம் தனது இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றது.

இந்திய மக்களின் ஆரோக்கியம் மற்றும் நலனுக்காக இலங்கையின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கிடைக்கப்பெறும் எண்ணற்ற தொலைபேசி அழைப்புகள், செய்திகள் தொடர்பாகவும் அதேநேரம் பல்வேறு இடங்களிலும் முன்னெடுக்கப்படும் விசேட நிகழ்வுகள் குறித்தும் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் பணியாற்றும் அதிகாரிகளும் உயர் ஸ்தானிகரும் பெருமகிழ்வடைகின்றனர்.

இந்திய மக்களுக்காக பிரார்த்தனைகளும் பல்வேறு விசேட நிகழ்வுகளும் இலங்கையில் பல பிரதேசங்களிலும் நடத்தப்பட்டுள்ளன. பல்வேறு விகாரைகளில் ரதன சூத்ர பாராயண நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 2021 ஏப்ரல் 29ஆம் திகதி வஸ்கடுவா ராஜகுரு ஸ்ரீ சுபுதி மகா விகாரையில் சங்கைக்குரிய கலாநிதி வஸ்கடுவா மஹிந்தவன்ச மகாநாயக்க தேரரின் ஆசியுடன் விசேட பூஜைகள் பிரார்த்தனைகள் நடைபெற்றன. 2021 மே முதலாம் திகதி எம்பிலிப்பிட்டியவில் உள்ள ஸ்ரீ போதிராஜ மடாலயத்தில் பாரத ஆசீர்வாத பூஜை ஒன்று சங்கைக்குரிய கலாநிதி ஓமல்பே சோபித நாயக தேரர் அவர்களால் புத்த தாதுக்கள் சன்னிதானத்தில் நடத்தப்பட்டிருந்தது. அதேபோல மாளிகா கந்தையில் உள்ள ஆக்ரா ஸ்ராவக விகாரை உள்ளிட்ட பல இடங்களில் அன்றைய தினம் மகாபோதி சபையின் ஏற்பாட்டின் கீழ் சிறப்பு பிரார்த்தனைகள் இடம்பெற்றிருந்தது. 2021 மே இரண்டாம் திகதி கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை திரியாய ரஜ மகா விகாரையில் மற்றொரு சிறப்பு வழிபாடு நடைபெற்றிருந்தது. 2021 மே 3ஆம் திகதி கங்காராமை விகாரையில் பாரத ஆசீர்வாத பூஜை நிகழ்வுகள் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அதுமட்டுமல்லாமல் 2021 மே 5ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள ஸ்ரீ நாக விகாரையில் சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெற்றிருந்தன. இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபனம் மற்றும் புத்த சாசன, மத விவகாரங்கள், கலாசார விவகார அமைச்சு ஆகியவை இணைந்து 2021 மே 06 ஆம் திகதி முதல் ஒரு வார சிறப்பு பாராயண நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதேபோல 2021 ஏப்ரல் 30ஆம் திகதி யாழ்ப்பாணம் கந்தர்மடம் நடராஜர் ஆலயத்தில் இந்து மத சபையினால் விசேட பூஜைகள் நடத்தப்பட்டிருந்தது. இந்த சிறப்பு வழிபாட்டின் ஓர் அங்கமாக வேத பாராயணங்கள் மற்றும் திருமுறை ஓதுதல் போன்ற நிகழ்வுகளும் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. 2021 மே 2 ஆம் திகதி கொழும்பிலுள்ள சீரடி சாய் நிலையத்தில் மற்றொரு சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றிருந்தது. இதன் தொடர்ச்சியாக 2021 மே 07ஆம் திகதி கொழும்பில் உள்ள மயூராபதி ஆலயத்தில் இந்திய மக்களின் ஆரோக்கியம் மற்றும் நலனுக்காக தன்வந்திரி பெருமானை வேண்டி மற்றொரு விசேட பூஜை நிகழ்வொன்றுநடைபெறஉள்ளது. இதற்கு மேலதிகமாக 2021 மே 8ஆம் திகதி இலங்கையில் உள்ள பஞ்ச ஈஸ்வரங்களில் மஹா மிருத்யுஞ்ச யாகம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

### 04 மாவட்டங்களின் 12 GS...

மஹரகம பொலிஸ் அதிகாரப் பிரதேசத்திற்குட்பட்ட பமுனுவ கிராம சேவகர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் பிலியந்தலை பொலிஸ் அதிகாரப் பிரதேசத்துக்குட்பட்ட ஹொன்னத்தர மற்றும் தல்தர ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டத்தில் கிரிந்திவெல பொலிஸ் அதிகாரப் பிரதேசத்திற்கு உட்பட்ட குட்டிவில கிராம சேவகர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, இரத்தினபுரி மாவட்டத்தில் எம்பிலிபிட்டிய காவல் துறை அதிகாரப் பிரதேசத்திற்கு உட்பட்ட பல்லேகம, உடகம, புதிய நகரம் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் பணாமுர பொலிஸ் அதிகாரப் பிரதேசத்திற்குட்பட்ட வலல்கொட, சுதுகல, பணாமுர ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் மற்றும் வேவல்வத்த பொலிஸ் அதிகாரப் பிரதேசத்திற்கு உட்பட்ட ரத்கம கிராம சேவகர் பிரிவு என்பன தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் பூவரசங்குளம் பொலிஸ் அதிகாரப் பிரதேசத்திற்குட்பட்ட குருக்கள்புதுக்குளம் கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்

### ரிஷாத் எம்.பியை பாராளுமன்றம்...

தலைவர் சஜித் பிரேமதாச விசேட கூற்றொன்றை முன்வைத்தார். அதில் அவர் பாராளுமன்ற சிறப்புரிமைகளை பாதுகாத்து பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை பாராளுமன்றத்துக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கவேண்டும். கட்சி தலைவர் கூட்டத்தின் போதும் இது தொடர்பாக பேசப்பட்டுள்ளது. அதனால் அரசியல் ரீதியில் தீர்மானங்களை எடுக்காமல், அவரது பாராளுமன்ற சிறப்புரிமையை பாதுகாக்க சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்

இதற்கு பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர,

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள எவரையும் அவர்களிடம் மேற்கொள்ளப்படும் விசாரணை நடவடிக்கைகள் முடியும் வரை பாராளுமன்றத்துக்கு அழைத்துவர அனுமதிக்கக்கூடாது. ரிசாத் பதியுதீன் மீது இடம்பெறும் விசாரணைகள் தேசிய பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டவை . இவ்வாறான நிலையில் இவர்கள் பாராளுமன்றத்துக்கு வந்து, பாராளுமன்ற சிறப்புரிமைகளை பயன்படுத்தி, அவற்றை வெளிப்படுத்தி விடுவார்.

அதனால் இது தேசிய பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட விடயம் என்பதால், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படும் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரையும், விசாரணைகள் முடியும் வரை பாராளுமன்றத்துக்கு அழைத்துவர அனுமதிக்கக்கூடாது என்றார்.

இதற்கு கடும் எதிர்ப்புத்தெரிவித்த எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல, ரிஷாத் பதியுதீனை பாராளுமன்றத்துக்கு அழைத்து வருவது தொடர்பில் தற்போது பல காரணங்கள தெரிவிக்கப்படுகின்றன.

எனவே பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை பாதுகாப்பது சபாநாயகரின் கடமை. அதனை நீங்கள் செய்யவேண்டும் என்றார்.

இதன்போது எழுந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி.சுமந்திரன், சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டுவரும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை பாராளுமன்றத்துக்கு அழைத்துவர அனுமதிக்கக்கூடதென அமைச்சர் தெரிவிக்கின்றார்.

இவ்வாறு இடம்பெறுவது பாராளுமன்ற வரலாற்றில் முதல்தடவை. நீதிமன்ற தீர்ப்பில் அவர் குற்றவாளியாக அறிவிக்கப்படும் வரை ரிஷாத் பதியுதீன் பாராளுமன்றத்துக்கு அழைத்துவருவதை நிறுத்த முடியாது.

சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டுவரும் ஒருவரை பாராளுமன்றத்துக்கு வர அனுமதிக்காமல் இருப்பதன் மூலம், அவர் 03 மாதங்கள் தொடராக பாராளுமன்றத்துக்கு வரமுடியாத நிலை ஏற்பட்டால் அவரது பாராளுமன்ற ஆசனம் சட்டரீதியில் இல்லாமல் போகும்.

இந்த நிலை தொடர்ந்தால் அரசியல் ரீதியில் தீர்மானங்களை மேற்கொண்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்து தடுத்து வைத்துக்கொண்டு, அவர் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்படாத நிலையிலும் அவரது பாராளுமன்ற ஆசனம் இல்லாமலாக்கப்படும் என்றார்.

### சதொச மூலமாக அடுத்த...

அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று வர்த்தக அமைச்சின் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

மக்களின் வாழ்க்கைச் செலவை குறைக்கும் நோக்கிலும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளில் ஸ்திரத்தன்மையை பேணவும் எமது அரசாங்கம் அமைச்சரவை தீர்வின் ஊடாக கடந்த காலத்தில் நடவடிக்கையெடுத்திருந்தது.

கடந்த காலத்தில் அரசாங்கம் பொருட்களை கொள்வனவு செய்யும் போது டென்டர் முறைமையைதான் கடைப்பிடித்திருந்தது. அரச விலை நிர்ணயத்தின் நிறுவனமாக லங்கா ச.தொ.ச நிறுவனம் காணப்படுகிறது. இதனூடாக மக்களுக்கு மிகவும் குறைவான விலையில் பொருட்கள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

ஒவ்வொரு வாரமும் டென்டர் முறைக்கு அழைப்பு விடுத்துதான் பொருடகளை கொள்வனவும் செய்தோம். மிகுதி செலாவணி உடன்படிக்கை யொன்றின் ஊடாக இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்திருந்தோம். மூன்று மாதகாலத்துக்கு கட்டுப்பாட்டு விலையை பேணும் நோக்கில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. நேரடி விலைமனுக்கள் கோரலின் ஊடாக நேரடி இறக்குமதியாளர்கள் மற்றும் உள்நாட்டு உற்பத்தியாளர்களுடன் செய்துக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் பொருட்களின் விலைகளில் கட்டுப்பாடு பேணப்பட்டது.

### சாணக்கியனின் கூற்று...

தமிழ் மக்கள் பெருமளவில் வாழ்கின்றனர்.இந்த அம்பாறை மாவட்டத்தை பிரிக்குமாறோ அல்லது ஒரு தமிழ் அரச அதிபரை நியமிக்குமாறோ கேட்கக்கூட முடியாதவர் தான் இந்த சாணக்கியன். ஆனால் அவர் எம்மை அரசின் கைக்கூலி என்கின்றார். இவர் தான் புலிகளைக் காட்டிக்கொடுத்து, தமிழ் மக்களின் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்த பிள்ளையானின் கட்சியில் இருந்தவர். தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கியதாக குற்றம் சாட்டப்படும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளராக இருந்தவர். இவர்தான் தமிழ் மக்களையும் அவர்களின் போராட்டத்தையும் காட்டிக்கொடுத்தவர்.

மேலும், 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக நாம் கை தூக்கியதாக கூறுகிறார்.

கிழக்கில் சிங்கள முதலமைச்சர் ஒருவரை நாம் கொண்டுவர முயற்சிப்பதாக சாணக்கியன் கூறுகின்றார். இது அப்பட்டமான பொய். இந்த நோன்பு நாளில் அல்லாஹ் மீது சத்தியமாக கூறுகின்றேன் நான் அப்படிப்பட்ட காட்டிக் கொடுக்கும் குடும்பத்தில் பிறக்கவில்லை. கல்முனை வடக்கு பிரதேச சபை தொடர்பான பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வழங்க வேண்டும் என்றே நாங்கள் அரசாங்கத்திடம் தெரிவித்து வந்தோம். அதற்கு தீர்வொன்றை காணும் நோக்கிலே எல்லை நிர்ணய குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. 6 மாதங்களில் இதற்கு தீர்வு கிடைக்கும் என்றே தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதனால் கல்முனை மாநகரின் வரலாறு தெரியாமல், அங்கு தமிழ், முஸ்லிம் மக்களின் உறவு எவ்வாறு இருந்தது என்பது தொடர்பாக தெரியாமலே சிலர் சபையில் கதைக்கின்றனர்.

கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமைக்காக தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இணைந்தே நாங்கள் தீர்மானங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

சில சந்தர்ப்பங்களில் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட்டு எடுத்த தீர்மானங்கள் காரணமாக முஸ்லிம்கள் அதற்கான விளைவை இன்றும் அனுபவித்து வருகின்றனர் என்றார்.

### தொற்றாளர்களின்... (03ஆம் பக்கத் தொடர்)

நேற்றைய தினம் திருகோணமலை பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட செயலக நிர்வாக அதிகாரிக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து திருகோணமலை மாவட்ட செயலகத்தில் பணிபுரியும் அதிகாரிகளுக்கு நேற்றையதினம் என்ரிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சூரியவெவ பிரதேச செயலாளரும் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். அதற்கிணங்க அவரோடு பணிபுரிந்த பிரதேச செயலக ஊழியர்கள் 48 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த சில தினங்களாக ஆயிரத்து தொள்ளாயிரத்துக்கு அதிகமான வைரஸ் தொற்று நோயாளர்கள் புதிதாக இனங்காணப்பட்டுள்ள நிலையில் நேற்று முன்தினம் நாட்டில் 1914 பேர் கொரோணா வைரஸ் தொற்று புதிய நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். அதற்கிணங்க கொழும்பு கம்பஹா மாவட்டங்களில் 500க்கும் மேற்பட்ட வைரஸ் தொற்று நோயாளர்கள் தினமும்புதிதாக இனங்காணப்பட்டு வருகின்றனர். வெளிநாட்டில் இருந்து வருகை தந்திருந்த 54 பேருக்கும் நேற்று முன்தினம் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. நேற்றும் 12 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தலுக்காக முடக்கப்பட்டுள்ளன.

கொழும்பு, கம்பகா, மட்டக்களப்பு, வவுனியா, களுத்துறை, அம்பாறை, மொனராகலை, மாத்தளை, பொலநறுவை, திருகோணமலை, இரத்தினபுரி, நுவரெலியா உள்ளிட்ட மாவட்டங்களிலிலேயே கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தலுக்காக முடக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.(ஸ)

### 1990 'சுவசெரிய'... (03ஆம் பக்கத் தொடர்)

அலுவல்கள் இராஜாங்க அமைச்சு குறிப்பிட்டுள்ளது. எவ்வாறாயினும், புதிதாக 112 அம்பியூலன்ஸ் வரையில் பற்றாக்குறையாக உள்ளதாகவும் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### பைசர் நிறுவனத்திடமிருந்து...

மேற்கொள்ளப்பட்ட தடுப்பூசி ஏற்றும் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு இந்தியாவின் 'சீரம்' நிறுவனத்திடமிருந்து கொரோனா தடுப்பூசிகள் கிடைத்திருந்தன.

இதனைத் தொடர்ந்து சீனாவிடமிருந்து 6 இலட்சம் 'சைனோபாம்' தடுப்பூசிகள் இலங்கைக்கு கிடைத்தன. இதேவேளை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் அமெரிக்காவின் 'பைசர்' நிறுவனத்துடனும், ரஷ்யாவின் ஸ்புட்நிக் நிறுவனத்துடனும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருக்கின்றன.ஸ்புட்நிக் நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைய இலங்கைக்கு 13 மில்லியன் தடுப்பூசிகள் கிடைக்கவிருக்கின்றன.

### தேர்தல் முறைமை தெரிவுக் குழுவில்...

நியமிக்கப்பட்டுள்ளது.சபாநாயகரால் நேற்று சபையில் அறிவிக்கப்பட்ட இந்தக் குழுவில், சிறுபான்மை கட்சிகளைச் சேர்ந்த ஆறு உறுப்பினர்கள் உள்ளடங்கியுள்ளனர்.

அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் கபிர் ஹஷிம் ஆகியோர் சிறுபான்மையின பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.அத்தோடு அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, ஜீ.எல்.பீரிஸ், பவித்ரா வன்னியாரச்சி, விமல் வீரவன்ச, பாராளுமன்ற உறுப்பினர்களான அநுரகுமார திஸாநாயக்க, ரஞ்சித் மத்துமபண்டார, மதுர விதானகே, சாகர காரியவசம் ஆகியோரும் இந்தக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

### பொருளாதாரத்திற்கு பாதிப்பின்றி...

நடைபெற்ற இலங்கையின் தற்போதைய கொவிட்19 நிலைமை தொடர்பான சபை ஒத்தி வைப்பு வேளை பிரேரணை மீதான இரண்டாம் நாள் விவாதத்தின் போது எதிர்க்கட்சி பிரதமர கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்லவினால் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி மேலும் கூறுகையில்,

நாட்டின் பொருளாதாரத்திற்கு பாதிப்பு இல்லாதவாறே கொவிட்19 தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றோம். அப்படி செய்யாவிட்டால் கொவிட்19 தடுப்பு நடவடிக்கைகளுக்கு பணம் இல்லாதுபோகும்.

இந்த உலகம் பொருளாதாரத்தை பாதுகாத்துக் கொண்டே கொவிட்19 கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது.

அதன்படி நாங்களும் செயற்படுவோம். நாங்கள் 60 வீதமானவர்களுக்கு இந்த டிசம்பருக்கு முன்னர் தடுப்பூசிகளை வழங்க எதிர்பார்த்துள்ளோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

### ரிஷாத் எம்.பி பாராளுமன்ற...

சட்ட மாஅதிபர் இந்த அறிவிப்பை மேற்கொண்டதாக சட்ட மாஅதிபரின் இணைப்பதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் விசாரிக்கப்பட்டு வருகிறார்.ரிஷாட் பதியுதீனால் கோரிக்கையொன்று முன்வைக்கப்படுமானால் பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அண்மையில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளருக்கு பாராளுமன்ற படைக்கல சேவிதர் எழுத்துமூலம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### மாலேபேயில் வீடுகளில் திடீரென...

கணவன், மனைவியும் அயல் வீட்டு பெண்ணொருவரும் அடங்குவதாக பிரதேசத்துக்கு பொறுப்பான பொது சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்கள் 84 – 91 வயதுகளுக்கு இடைப்பட்டவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த தம்பதியினரின் மகனும் அவரது மனைவியும் கொரோனா தொற்றுக்குள்ளான நிலையில் ஐ.டி.எச் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், உயிரிழந்த மற்றைய பெண்ணின் மகளும் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

### A/L பரீட்சையில் தேசிய ரீதியில்...

வர்த்தகப் பிரிவில், காலி மாவட்டம் சங்கமித்த வித்தியாலய மாணவி அமந்தி இமாசா மதநாயக்க அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்றுள்ளார்.அத்துடன், கலைப்பிரிவில் ப்ரிஸ்படேரியன் மகளிர் கல்லூரி மாணவி சாமல்கா செவ்மினி முதலிடம் பெற்றுள்ளார்.

இதேவேளை, உயிரியல் தொழில்நுட்பப் பிரிவில் ஹொரன தக்சிலா மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் சுசிகா சந்தசரா என்பவர் முதலிடம் பெற்றுள்ளார்.

உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் கொழும்பு றோயல் கல்லூரி மாணவன் பிரவீன் விஜேசிங்க முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

பொறியியல் தொழில்நுட்பம் பிரிவில் ஹொரண தக்சிலா மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் அவிஷ்க சானுக முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

# ஒதுக்கப்பட்ட 50 மில்லியனை கொரோனாவுக்கு பயன்படுத்தவும்

## எதிர்க்கட்சித்தலைவர் ஜனாதிபதியிடம் கோரிக்கை

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



கிபிர் விமான பராமரிப்புக்கும் உடற்பயிற்சி நிலையங்களை ஆரம்பிக்கவும் செலவிடப்பட்டுள்ள மில்லியன் கணக்கான நிதியை கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துமாறு எதிர்க் கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை விசேட கூற்றொன்றை விடுத்தபோதே சபைக்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் இக் கோரிக்கையை விடுத்த எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச மேலும் கூறுகையில்,

நாட்டின் தேசிய பாதுகாப்பு முக்கியமானதுதான். அதே போன்றே கொரோனாவிலிருந்தும் நாட்டை பாதுகாப்பதும் முக்கியம். எனவே கிபிர் விமானங்களை பராமரிக்க அரசு செலவிடவுள்ளதாகக் கூறப்படும் 50 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் அதேபோன்று உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக அமைக்கப்படவுள்ள உடற்பயிற்சி கூடங்களுக்கு செலவிடப்படவுள்ள 650 மில்லியன் ரூபாவையும் கொரோனாவை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு செலவிடுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.


இந்த நிதிகள் மூலம் கொரோனா தடுப்பு மருத்துவ உபகரணங்கள், படுக்கைகள், ஒட்ஸிசன்,தடுப்பூசிகள் போன்றவற்றை கொள்வனவு செய்ய முடியுமென்றார்.

இதன்போது இதற்கு பதிலளித்த விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, உடற்பயிற்சி கூடங்களுக்கான நிதி கொரோனா நிதியிலிருந்து பெறப்படவில்லை.

அது வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி என்றார்.

# குருநாகல், மத்தல, லுணுகம்வெஹெர, பெலிஅத்த நவீன நகரங்களாக அபிவிருத்தி

## பிரதமர் நடவடிக்கை







குருநாகல், மத்தல, லுணுகம்வெஹெர மற்றும் பெலிஅத்த ஆகிய நகரங்களை முழுமையாக நவீன நகரங்களாக அபிவிருத்தி செய்வது தொடர்பான கலந்துரையாடல் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பாராளுமன்ற கட்டிடத் தொகுதியிலுள்ள பிரதமர் அலுவலகத்தில் நேற்று (05) நடைபெற்றது.

இந்நகரங்களை நவீன நகரங்களாக அபிவிருத்தி செய்யும் திட்டம் தொடர்பில் கவனம் செலுத்திய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் திட்டத்தை செயற்படுத்த வேண்டிய விதம் தொடர்பில் அமைச்சின் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

நவீன சந்தை கட்டிடத்தொகுதி, அனைத்து வசதிகளையும் கொண்ட மொத்த விற்பனை நிலையம் மற்றும் வாராந்த சந்தை, வாகன நிறுத்துமிடம், நகர் பூங்கா, பேருந்து நிறுத்தம், பல்நோக்கு கட்டிடம் மற்றும் நடுத்தர வர்க்க வீடமைப்பு தொகுதி உள்ளடங்கலாக பெலிஅத்த நகர் அபிவிருத்தி செய்யப்படும் விதம் குறித்து நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் அதிகாரிகளினால் இதன்போது தெளிவுபடுத்தப்பட்டது.

இரட்டை வழிச்சாலை அமைப்பு, வெளியிலும் உள்ளேயும் சுற்று வட்ட பாதை, நான்கு பாதைகள் கொண்ட சாலை அமைப்பு என்பவற்றை நிர்மாணிப்பது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

மத்தல விமான நிலையத்தை மையமாகக் கொண்டு வர்த்தகம், தொழில், குடியிருப்பு வசதிகள், சுற்றுலா, சுகாதார வசதிகள் மற்றும் விவசாய மேம்பாட்டு வலயங்களை நிறுவுதல் மற்றும் மத்தல – லுணுகம்வெஹெர பகுதியில் செயற்படுத்தப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்கள் குறித்தும் பிரதமர் இதன்போது கவனம் செலுத்தினார்.

குருநாகல் நகரை நவீன நகரமாக்குதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது பிரதமர் கேட்டறிந்தார். அதற்கமைய குருநாகல் நகரை மையமாகக் கொண்டு எதிர்காலத்தில் பல அபிவிருத்தி திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

இக்கலந்துரையாடலில் அமைச்சர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, நாமல் ராஜபக்ஷ, பவித்ரா வன்னிஆராச்சி, இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேகர மற்றும் பிரதமர் அலுவலக ஊழியர்களின் பிரதானி யோஷித ராஜபக்ஷ, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறிநிமல் பெரேரா, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர, பிரதி பணிப்பாளர் நாயகம் ஆனந்த சமரசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

## போட்சிட்டி சட்டமூலம்

# சபாநாயகரினால் பாராளுமன்ற விவாதம் நேற்று ஒத்திவைப்பு



கொழும்பு துறைமுக நகர் பொருளாதார ஆணைக்குழு சட்ட மூலம் தொடர்பில் நேற்று பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெறவிருந்த நிலையில் அடுத்த பாராளுமன்ற கூட்டத் தொடர்வரை விவாதம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பாராளுமன்ற விவகாரம் தொடர்பான செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இதன் பிரகாரம் நாட்டின் தற்போதைய நிலவரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தை நேற்று காலை பத்து மணியில் இருந்து பிற்பகல் 4.30 வரை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் தம்மிக்க தசநாயக்க கூறினார்.

இதேவேளை, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுக்கள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் இதுவரை சபாநாயகருக்கு கிடைக்கவில்லை.

இதன் பிரகாரம் விவாதத்தை நேற்று நடத்துவதில்லை என தீர்மானிக்கப்பட்டது. உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் கிடைத்ததும் எதிர்வரும் பாராளுமன்ற கூட்டத் தொடரின்போது குறித்த சட்டமூலம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

# நாட்டை முழுமையாக முடக்க முடியாவிட்டால் முடிவுகள் எடுக்க ஆளுநர்களுக்கு அதிகாரம் வழங்குங்கள்

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



நாட்டில் கொரோனா அச்சுறுத்தும் இத்தருணத்தில் முழுமையாக நாட்டை முடக்குவது சிக்கலானது என்றால் மாகாணங்களின் ஆளுநர்களுக்கு அதிகாரங்களை வழங்கி மாகாண மட்டத்தில் அது தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதற்கான திட்டங்களை தயாரிக்குமாறு எதிர்க்கட்சி பிரதம கொரடாவான ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இலங்கையின் தற்போதைய கொவிட் நிலைமை தொடர்பான சபை ஒத்தி வைப்புவேளை பிரேரணை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு கூறியுள்ளார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா விடயத்தில் அரசாங்கம் அரசியல் தீர்மானங்களையே எடுக்கின்றது. முதலாவது கொரோனா அலை ஏற்படும் போது நாட்டை முடக்குமாறு கோரிய போதும் தேர்தலுக்காக நாட்டை மூடுவதற்கு மறுத்தனர். அப்போதே நாங்கள் கூறுவதை செய்திருந்தால் இப்போது பிரச்சினை இருந்திருக்காது.


நாங்கள் கொவிட் தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புகளை வழங்க தயாராகவே இருக்கின்றோம். ஆனால் அரசியல் ரீதியிலான தீர்மானங்களுக்கு நாங்கள் ஒத்துழைப்பை வழங்க மாட்டோம்.

நாட்டை முடக்க வேண்டுமென்று நாங்கள் கூறவில்லை. ஆனால் கொவிட்டை கட்டுப்படுத்த வேண்டுமாயின் அதனை செய்ய வேண்டும். அதனை செய்தால் பொருளாதார சீர்குலைவு ஏற்படும் என்று கூறுகின்றனர். அதனை செய்யாவிட்டால் சுகாதார சீர்கேடு ஏற்படுமே. இதில் எதனை இந்த நேரத்தில் தெரிவு செய்யப் போகின்றீர்கள். பொருளாதார அழிவையா, சுகாதார அழிவையா நீங்கள் தெரிவு செய்யப் போகின்றீர்கள்.

இந்த நேரத்தில் எங்களின் ஒத்துழைப்பு எதற்கு வேண்டுமென்று அரசாங்கம் கூறினால் தெரிவுக் குழுவை அமைத்தாவது நாங்கள் கதைக்க முடியும். தற்போது இரண்டு மாதங்களில் ஆயிரத்தை தாண்டியுள்ளது. அப்படியென்றால் எங்கே தடுப்பூசி. இன்னும் முறையாக அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

# யாழ். போதனா வைத்தியசாலை நிலவரங்கள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் கரிசனை

## சுகாதார அமைச்சரிடமும் வலியுறுத்தல்



கொரோனா தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிக்கத் தேவையான அதிதீவிர சிகிச்சைப் பிரிவை யாழில் விஸ்தரிக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் கொரோனா அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதால், வடமாகாணத்தின் பிரதான வைத்தியசாலையாக இருக்கும் யாழ். போதனா வைத்தியசாலையில், கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு அதிதீவிர சிகிச்சை பிரிவு கட்டில்கள் நான்கு மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளன. கொரோனாவின் தாக்கம் அதிகரிக்குமாயின், அதனை எதிர்கொள்வதற்கு குறைந்தபட்சம் 20 அதிதீவிர சிகிச்சைப் பிரிவு கட்டில்களும் அவற்றுக்கான உபகரணங்களும் உடனடியாக தேவைப்படுவதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஸ்ரீ பவாணந்தராஜாவினால் கடற்றொழில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

அதேபோன்று, யாழ். போதனா வைத்தியசாலையின் செயற்பாடுகளுக்கு பொருத்தமான உற்பத்தித் திறனுடைய ஒட்சிசன் பிறப்பாக்கி ஒன்றையும் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைத்துள்ள வைத்தியசாலை பணிப்பாளர், தற்போது காணப்படுகின்ற ஒட்சிசன் பிறப்பாக்கி, வைத்தியசாலைக்கு தேவையான ஒட்சிசனை உற்பத்தி செய்வதற்கு போதுமானதல்ல என்பதுடன் கடந்த ஐந்து வருடங்களாக தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றமையினால் உற்பத்தி திறனும் குறைவடைந்துள்ளது.

இதன் காரணமாக வைத்தியசாலைக்கு தேவையான மேலதிக ஒட்சிசனை தற்போது தெல்லிப்பழை மற்றும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைகளில் இருந்தே பெற்றுக் கொள்ளப்படுகின்றன என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இவ்விடயங்கள் தொடர்பாக சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியுடன் கலந்துரையாடியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இக் கோரிக்கைகள் தொடர்பாக உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

கடற்றொழில் அமைச்சரின் கருத்துக்களை ஏற்றுக்கொண்ட சுகாதார அமைச்சர், சமபந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைளுக்கு அறிவுறுத்துவதாக தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி நேற்று சபை அமர்வில் பங்கேற்றார்

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று புதன்கிழமை காலை சபை அமர்வில் பங்கேற்றார்.காலை 10.05 மணிக்கு பாராளுமன்றத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதியை ஆளும் கட்சியின் முதற்கோலாசான் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, இராஜாங்க அமைச்சர்களான கனக்க ஹேரத், டி.வி.சானக ஆகியோர் பாராளுமன்றத்தின் பிரதான நுழைவாயிலில் வைத்து வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து ஆளும் கட்சியின் முதற்கோலாசான் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்டஅமைச்சர்களுடன் ஜனாதிபதி சபைக்குள் வந்தமர்ந்தார்.

ஜனாதிபதி சபையில் அமர்ந்திருந்தபோது வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன உரையாற்றிக்கொண்டிருந்தார். 20 நிமிடங்கள் வரை சபையில் அமர்ந்திருந்த ஜனாதிபதி பின்னர் சபையிலிருந்து வெளியேறி பாராளுமன்றத்திலுள்ள தனது அலுவலகத்துக்குச் சென்று சில நிமிடங்கள் அங்கிருந்தார்.

கடந்த ஏப்ரல் 08ஆம் திகதி ஜனாதிபதி, பாராளுமன்றத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்ததுடன், பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் முதல் தடவையாக பாராளுமன்ற அமைச்சுசார் ஆலோசனைக் குழுவுக்கு அவர் தலைமை தாங்கினார். இதற்கு முன்னர் கடந்த பெப்ரவரி 11ஆம் திகதி ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு வருகை தந்திருந்ததுடன், சபை நடவடிக்கைகளிலும் கலந்துகொண்டிருந்தார்.

# தி.மு.கவின் வெற்றிக்கு புதிய ஜனநாயக மக்கள் முன்னணி வாழ்த்து



தமிழகத்தில் திராவிட முன் னேற்றக் கழகம் பெற்றுள்ள வெற்றி இந்திய கண்டத்தை சிந்திக்க செய்துள்ளது என புதிய ஜனநாயக மக்கள் முன்னணி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளது. தொடரும் அவ்வாழ்த்துச் செய்தியில்

மு.க. ஸ்டாலினின் சீரிய சிந்தனையுடன் பகுத்தறிவாக மக்களிடம் பண்பாக ஞாயமான உண்மையுள்ள அரசியல் கட்சிகளை தன் இயக்கத்தோடு ஒருங்கிணைத்து ஒரு மாபெரும் கூட்டணியாக செயல்பட்டு தமிழக மக்கள் மத்தியில் அ.திமு.கவினரதும், மத்திய அரசாங்கத்தினதும் உண்மைக்கு புறம்பான செயல்பாடுகளை திறம்பட எடுத்துரைத்தார்.

தலைவர் மு.க. ஸ்டாலின் கடுமையாக உழைத்ததோடு மட்டுமல்லாமல் தி.மு.க கட்சியின் கொள்கைகளை கூட்டணி கட்சிகளோடு இணைந்து வாக்காளர்கள் மத்தியில் வெளிப்படுத்தியதே வெற்றிக்கான காரணமாகும்.

அத்துடன் அ.தி.மு.க ஆட்சியில் மக்கள் கடுமையான இன்னல்களை சந்தித்தனர். அனைத்து துறையிலும் ஊழல், பெண்களுக்கு பாதுகாப்பு குறைவு. அனைத்தையும் மக்கள் சிந்திக்க ஆரம்பித்து விட்டனர். மேலும் அ.தி.மு. கட்சிக்கு வாக்களித்தால் வருங்காலத்தில் அமைதியான வாழ்வுக்கு இன்னல் என முடிவெடுத்து தமிழக மக்கள் ஒரு மாபெரும் அரசியல் புரட்சியை ஏற்படுத்தி தி.மு.கவையும் அதன் கூட்டணிக் கட்சிகளையும் வெற்றியடையச் செய்துள்ளனர்.

தமிழ்நாட்டில் வெற்றியினை பெற்றிருக்கும் தி.மு. கவினருக்கு எனது வாழ்த்தினை தெரிவித்துக்கொள்கின்றேன்.


திகதி 04.05.2021 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4471
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 11,681,620.00
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 1 8 5 3 8 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,391,638.60

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2766
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.6,050,560.00
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 09 11 70 71
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 70,195,648.80

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 828
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,550,920.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 132,111,127.60
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து B சுப்பர் இலக்கம் 13 வெற்றி இலக்கங்கள் 05 08 52 78

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 508
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,825,280.00
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 10 39 48 74
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 96,234,672.00

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு இலக்கம் : 1595
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,256,120.00
சுப்பர் இலக்கம் 05 வெற்றி இலக்கங்கள் 08 20 24 28
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,335,443.60

04.05.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 568,305
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 25,364,500.00
ரூ. 2,000,000.00 பரிசுகள் 02 ரூ.1,000,000.00 பரிசுகள் 01 ரூ. 100,000.00 பரிசுகள் 22

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெரும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# கேள்விக்கான அழைப்பு

சுகாதார அமைச்சு

**மாகாண பொது வைத்தியசாலை - பதுளை**

பதுளை மாகாண பொது வைத்தியசாலை பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் வழங்கல்களை பெற்றுக்கொள்வதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | கேள்வி இலக்கம் | வழங்கல் | அளவு | மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் (ரூ) | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை முறி (ரூ) |
|---|---|---|---|---|---|
| 01 | PGHB/FV/01/21 | SUPPLY&installation of Real Time PCR Machine | 01 | 1,900.00 | 100,000.00 |

02. தேசிய போட்டி கேள்விமுறை (NCB) இன் பிரகாரம் கேள்விகள் கோரப்படும்

03. இதுபற்றிய மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் கணக்காளரை அழைத்து (நீடிப்பு 1103) அல்லது கீழ்க்காணும் வைத்தியசாலைகளின் இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

04. தகைமையுள்ள கேள்விதாரர்களுக்கு ஒரு கேள்விக்காக மீளளிக்கப்படாத மேற்படி கேள்வி ஆவணக் கட்டணத்தை வாரத்தின் வேலை நாட்களில் முற்பகல் 09.00 முதல் பிற்பகல் 03.00 வரை வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்தி பின்னர் 2021.05.05 முதல் 2021.05.19ஆம் வரை தேவைப்படும் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

05. கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு, வேண்டுதல் கடிதத்துடன் ஒவ்வொரு உபகரணத்திற்கும் வேறுவேறாக செல்லுபடியாகும் NMRA (CDDA) பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை மற்றும் கம்பனி பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை கட்டாயமாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2021.05.20 பி.ப.2.30இற்கு முன் பதுளை மாகாண பொது வைத்தியசாலைக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டு வந்து கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகிக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும், அன்றே பி.ப.230 இற்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

07. கேள்வி பற்றிய இறுதித்தீர்மானம் எடுக்கும் உரிமை பதுளை பொது வைத்தியசாலையின் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**

தொலைபேசி இல - 0552222261
மாகாண பொது வைத்தியசாலை - பதுளை

தொலைபேசி இல - 0552222261 பெக்ஸ் - 0552231205

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

# திருத்தத்திற்கான அறிவித்தல்

2021 ஜூன் 30 ஆம் திகதியன்று திறக்கப்படவிருந்ததும் முதலில் 2021 ஏப்ரல் 25 ஆம் திகதியன்று சண்டே ஒப்சேவர் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021 ஏப்ரல் 28 ஆம் திகதியன்று சிலோன் டெயிலி நியுஸ், தினமின மற்றும் தினகரன் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டதும் கீழே குறிப்பிட்டுள்ள கேள்வியில் விலைமனுதாரர்களுக்கான பணிப்புரையின் இரண்டாம் இலக்கத்தை (02) இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் பின்வருமாறு திருத்தியுள்ளார்.

| | |
|---|---|
| **கேள்வி இலக்கம்** | CES/FP/04/PT/6200(MP) |
| **கேள்வியின் பெயர்** | Procurement of Container handling equipment to ECT |
| **பிரசுரிக்கப்பட்ட விலைமனுதாரர்களுக்கான பணிப்புரையின் 2 ஆம் இலக்கம்** | மேலே குறிப்பிட்டுள்ளவாறு தேவைப்படும் நிகரான உபகரணத்தை வழங்கும் வியாபாரத்தில் விலைமனுதாரர் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருடங்கள் இருந்திருத்தல் வேண்டும். |
| **பிரசுரிக்கப்பட்ட விலைமனுதாரர்களுக்கான பணிப்புரையின் 2 ஆம் இலக்கம் திருத்தப்பட்ட பின்னர்** | மேலே குறிப்பிட்டுள்ளவாறு தேவைப்படும் நிகரான உபகரணத்தை வழங்கும் வியாபாரத்தில் விலைமனுதாரர் ஆகக் குறைந்தது பத்து (10) வருடங்கள் இருந்திருத்தல் வேண்டும். |

ஏனைய நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர் - அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு,**
**துறைமுகங்கள் மற்றும் கப்பற்சேவைகள் அமைச்சு,**
**இல. 19, சைத்திய வீதி,**
**கொழும்பு - 01.**

## றுஹுுண பல்கலைக்கழகம் - மாத்தறை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**விலைக்கோரல் இலக்கம்:** RUH/ENG/SUP/2021/02: **மல்டிமீடியா மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள், கனனிகள் மற்றும் துணைப்பாகங்கள், ஆய்வுகூட உபகரணங்கள் (MME), ஆய்வுகூட உபகரணங்கள் (EIE), ஆய்வுகூட உபகரணங்கள் (CEE) என்பவற்றை வழங்கல், விநியோகித்தல், நிறுவுதல், செயற்பட வைத்தல் மற்றும் பரீட்சித்தல்**

1. றுஹுுண பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்கு பின்வரும் பொருட்களின் வழங்கல், விநியோகித்தல், நிறுவுதல், செயற்பட வைத்தல் மற்றும் பரீட்சித்தல் ஆகியவற்றிற்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை றுஹுுண பல்கலைக்கழக துணைவேந்தரின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| உருப்படி இல. | பண்டங்கள்/விளக்கம் | எண்ணிக்கை | விலை மனுப் பிணை முறி (ரூ) | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூ) |
|---|---|---|---|---|
| **Package No. 01: Laboratory Equipment (CEE)** | | | | |
| 1.1 | pH meter/Thermometer/EC meter/ORP meter | 3 | 14,000.00 | |
| 1.2 | Turbidity meter | 3 | 14,000.00 | |
| 1.3 | DO meter | 3 | 12,000.00 | |
| 1.4 | Steel band tape | 10 | | |
| 1.5 | Linen tape | 10 | | |
| 1.6 | Ranging pole | 20 | | |
| 1.7 | Mallet | 10 | 6,000.00 | |
| 1.8 | Compass | 10 | | 3,500.00 |
| 1.9 | Arrows | 20 | | |
| 1.10 | Spring balance | 12 | | |
| 1.11 | Thermometer | 1 | | |
| 1.12 | Auto level machine 24 Magnification | 8 | 6,000.00 | |
| 1.13 | Metacentric Height | 1 | 6,000.00 | |
| 1.14 | Deflection of Beams & Cantilevers and Ancillaries | 1 | 15,000.00 | |
| 1.15 | Bending moments in a beam and Ancillaries | 1 | 14,000.00 | |
| **Package No 02: Laboratory Equipment (EIE)** | | | | |
| 2.1 | Rectifier and a Controllable Inverter | 1 | 12,000.00 | |
| 2.2 | Variable Frequency Drive to Study the Induction Motor Speed Control | 1 | 9,000.00 | |
| 2.3 | Insulation Tester | 1 | 22,500.00 | |
| 2.4 | RF Signal Generator (1 MHz – 3 GHz) | 1 | | 3,000.00 |
| 2.5 | PC based Portable Logic Analyzer | 1 | | |
| 2.6 | Portable Digital Multimeter | 5 | 6,000.00 | |
| 2.7 | FPGA Development Board | 1 | 4,000.00 | |
| **Package No 03: Laboratory Equipment (MME)** | | | | |
| 3.1 | Universal tool and cutter grinder (with all standard and optional accessories) | 1 | 22,500.00 | 2,000.00 |
| 3.2 | Industrial flue gas analyzer-portable | 1 | 7,500.00 | |
| **Package No 04: Computer & Network Accessories** | | | | |
| 4.1 | Computer Laptop i7 | 2 | 6,000.00 | |
| 4.2 | High Performance Workstation | 1 | 30,000.00 | |
| 4.3 | Online UPS – 1 kVA | 8 | 13,000.00 | |
| 4.4 | Online UPS – 2 kVA | 3 | | |
| 4.5 | Online UPS – 3 kVA | 2 | | |
| 4.6 | Internationally Branded Wireless Access Points | 8 | 18,000.00 | 3,500.00 |
| 4.7 | Internationally Branded Wireless Access Point range Extenders | 2 | | |
| 4.8 | Internationally Branded 24-Port FXS IP Gateway | 3 | | |
| 4.9 | RJ11 Surge Protectors for Telephones | 10 | 5,000.00 | |

| உருப்படி இல. | பண்டங்கள்/விளக்கம் | எண்ணிக்கை | விலை மனுப் பிணை முறி (ரூ) | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூ) |
|---|---|---|---|---|
| 4.10 | Analog telephones | 50 | | |
| 4.11 | 24 Ports Gigabit Ethernet Network Switches | 7 | 16,000.00 | |
| 4.12 | Wire Tracker, Line Finder and LAN Cable Tester for Network and Telephone Cable Collation | 1 | 3,000.00 | |
| 4.13 | RJ45 to SC Gigabit Ethernet Media Converter, Single Mode Fiber | 6 | | |
| 4.14 | USB 3.0, 2TB Portable HDD | 1 | | |
| 4.15 | Simulink Desktop Realtime capable DAQ card (8A –IN 14bit, 8A-OUT 14bit, 8D-IN,8D-OUT,2-QEI,4-PWM minimum) (Eg-HUMUSOFT MF634) with computer (i9,32GB,512GB SSD+2TB HDD,21 inch LCD,GTX3090 GPU,1200W power supply), a geared DC motor and accessories, 1.2kVA UPS | 2 | 45,000.00 | 3,500.00 |
| 4.16 | GTX3080 OC or better GPU card with 1200W power supply | 2 | 7,500.00 | |
| 4.17 | Image Processing and Machine Learning Capable Mini-Computers(NVEDIA JETSON NANO – 6) with power supply units, SD memory card (64GB), cameras and HDMI cables | 5 | 7,500.00 | |
| 4.18 | Computer | 2 | 6,000.00 | |
| 4.19 | Network printer | 1 | | |
| **Package No 05: Multimedia & Office Equipment** | | | | |
| 5.1 | Touch Screen Smart Interactive Whiteboard | 1 | 7,500.00 | |
| 5.2 | Photocopy Machine | 1 | 7,500.00 | |
| 5.3 | Public addressing system | 1 | 4,500.00 | |
| 5.4 | FM Microphone | 1 | | |
| 5.5 | Multimedia projector | 1 | | |
| 5.6 | Projector Screen | 1 | | |
| 5.7 | Headset | 75 | | 2,000.00 |
| 5.8 | Pen Drivers | 10 | 12,000.00 | |
| 5.9 | Voice Recorder | 5 | | |
| 5.10 | 3.5mm Stereo female socket | 75 | | |
| 5.11 | Camcorder with tripod | 1 | | |
| 5.12 | White board with stand | 1 | | |
| 5.13 | Air Conditioner 18000 BTU | 1 | | |
| **Package No 06: Furniture** | | | | |
| 6.1 | Steel cupboard | 2 | | |
| 6.2 | Executive Table | 1 | | |
| 6.3 | Executive chair | 1 | 13,200.00 | 1,000.00 |
| 6.4 | Table | 15 | | |
| 6.5 | Chair | 75 | | |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை பல்கலைக்கழகத்தின் சிறாப்பர் கருமபீடத்திற்கு செலுத்தி அல்லது எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையின் ஊடாகவும் றுஹுுண பல்கலைக்கழகத்தின் (மக்கள் வங்கி, உயன்வத்த, மாத்தறை) 032100112477589 எனும் கணக்கிலக்கத்திற்கு மீளளிக்கப்படாத கட்டணத்தை வைப்புச் செய்த வரவுத் துண்டை சமர்ப்பிப்பதன் பேரில் 2021-05-31ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை வெல்லமட, றுஹுுண பல்கலைக்கழகத்தின் வழங்கல் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
4. 2021-08-30ஆம் திகதி வரை விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
5. ஒவ்வொரு உருப்படிக்கும் உருப்படி அடிப்படையில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.
6. விலைமனுக்கள் இலங்கையில் செயற்படும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் ஏற்புடையதான விலைமனுக்கோரல் உருப்படிகளுக்கு உரித்தான (நிபந்தனையற்ற) விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. 2021-09-21ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையில் ‘‘துணை வேந்தர், றுஹுுண பல்கலைக்கழகம்’’ எனும் முகவரிக்கான விலைமனுப்பிணையாகவிருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2021-06-01ஆம் திகதி பி.ப. 1.00 மணியாகும்.
9. உரிய முறையில் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, றுஹுுண பல்கலைக்கழகம், வெல்லமடம, மாத்தறை என்ற முகவரியில் கிடைக்கும் வகையில் மேலேயுள்ள மூடும் நேரத்திற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது மாத்தறை, வெல்லமடம, றுஹுுண பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள 1ஆம் இலக்க கேள்விப் பெட்டியில் மேலேயுள்ள முடிவுறுத்தப்படும் நேரத்திற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் மற்றும் இலக்கம் ஆகியன சுட்டிக்காட்டப்படல் வேண்டும்.
10. விலைமனுக்கள் அவைகளை மூடியவுடன் உடனடியாகவே மேலேயுள்ள முகவரியில் திறக்கப்படும்.
11. விலைமனுக்களை திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
12. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை மாத்தறை, வெல்லமடம, றுஹுுண பல்கலைக்கழக வழங்கலுக்கான சிரேஷ்ட உதவி நிதியாளரிடமிருந்து (041-2227027) பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் மேலேயுள்ள முகவரியில் அலுவலக நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்..

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**றுஹுுண பல்கலைக்கழகம்,**
**வெல்லமடம, மாத்தறை.**
**2021 மே 06.**




# மத்திய மாகாணத்தில் அதிகரிக்கும் கொரோனா மரணங்கள்

## சிகிச்சை நிலையங்களில் இடப்பற்றாக்குறை

**எம்.ஏ.அமீனுல்லா,ஹற்றன் சுழற்சி, மாத்தளை சுழற்சி நிருபர்கள்**

மத்திய மாகாணத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 10469 ஆக உயர்ந்துள்ளதாக மத்திய மாகாண சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய மாகாணத்தில் அதிக எண்ணிக்கையிலான கொரோனா நோய்த்தொற்றாளர்கள் கண்டி மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர். அதன்படி கண்டி மாவட்டத்திலிருந்து 6255 பேர் பதிவாகியுள்ளனர். மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்திலேயே கொரோனா தொற்று காரணமாக அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். அதன்படி கண்டி மாவட்டத்தில் இதுவரை 77 பேரும் மாத்தளை மாவட்டத்தில் 14 பேரும் மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் 15 பேருமாக மொத்தம் 106 பேர் உயிரிழந்துள்ளனர்.

மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ள மாநகர சபை சுகாதார வைத்திய பிரிவில் 53 பேரும், கலேவெல சுகாதார வைத்திய பிரிவில் 40 பேரும், உக்குவளை சுகாதார வைத்திய பிரிவில் 13 பேரும், மாத்தளை மாநகரசபை பிரிவில் 7 பேரும் பல்லேபொல சுகாதார வைத்திய பிரிவில் 6 பேரும் மாத்தளை சுகாதார வைத்திய பிரிவில் 5 பேரும் நாவுல சுகாதார வைத்திய பிரிவில் 6 பேரும் மாத்தளை சுகாதார வைத்திய பிரிவில் 5 பேரும் இறத்தொட்ட, யடவத்தை சுகாதார வைத்திய பிரிவில் ஒருவர் என்ற அடிப்படையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அதேவேளை கடந்த ஒக்டோபர் 20 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை மாத்தளை மாவட்டத்தில் 2128 பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இம்மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவல் தம்புள்ள பிரதேசத்திலேயே வீரியம் அடைந்துள்ளது. இப்பிரதேசத்தில் இனங்காணப்பட்டுள்ள 60 பேர் அவர்களது வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். தனிமைப்படுத்தப்படும் நிலையங்களில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடியே இதற்கு காரணமாகும்.



கடந்த ஏப்ரல் 30ஆம் திகதிமுதல் இம்மாவட்டத்தில் மாத்தளை, நாவுல, தம்புள்ள, கலேவெல ஆகிய பொலிஸ் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

நுவரெலியா மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் (04.05.2021) 46 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொரோனா தடுப்பு செயற்பாட்டு மையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி நுவரெலியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 16 பேருக்கும், ஹங்குராங்கெத்த சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 14 பேருக்கும், நவதிஸ்பன சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 06 பேருக்கும் வைரஸ் தொற்றியுள்ளது.

அத்துடன், மஸ்கெலியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நால்வருக்கும், பொகவந்தலாவ சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மூவருக்கும், டிக்கோயா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருவருக்கும், ஹற்றன் பிரிவில் ஒருவருக்கும் இவ்வாறு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# பொகவந்தலாவையில் மேலும் 17 பேருக்கு கொரோனா

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

பொகவந்தலாவை பொது சுகாதார பிரிவில் மேலும் 17 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பிலிங்கிபொனி பகுதியிலுள்ள தொழிற்சாலையொன்றில் கடந்த 29 ஆம் திகதி 180 பேருக்கு மேற்கொண்ட பி.சி.ஆர் பரிசோதனையின் இரண்டாம் தொகுதி அறிக்கை நேற்றுமுன்தினம் மாலை கிடைக்கப்பெற்றதில் மேலும் 14 பேருக்கு தொற்று இருப்பது உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

இவர்கள் காலவரையறை இன்றி முடக்கப்பட்டுள்ள இன்ஜட்ரி கிராம அலுவலர் பிரிவை சேர்ந்தவர்களாவர். மேலும் பொகவந்தலாவை நகரிலுள்ள சிகையலங்கார நிலைய ஊழியர் ஒருவருக்கும், சாஞ்சிமலை மேல் பிரிவில் ஒருவருக்கும், நோர்வூட் சென்ஜோன் டிலரி சிறுவர் நிலைய சிறுவர் பராமரிப்பாளர் ஒருவருக்குமாக 17 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பொகவந்தலாவை பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை பிலிங்கிபொனி பகுதியிலுள்ள தொழிற்சாலையில் 180 பேருக்கு மேற்கொண்ட பி.சி.ஆர் பரிசோதனை முதற் தொகுதி அறிக்கை கடந்த 03 ஆம் திகதி கிடைக்கபெற்றதில் 29 பேருக்கும் என்டிஜன் பரிசோதனையில் இருவருமாக 31 பேருக்கு கொரோனா தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது. அன்றை தினம் முதல்

புளியாவத்தை நகரம் உட்பட இன்ஜஸ்ட்ரி 319 எல் கிராம அலுவலர் பிரிவும் உடன் அமுலுக்கு வரும் வகையில் காலவரையறையின்றி முடக்கப்பட்டுள்ளது. மேலும் ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போடைஸ் தோட்டமும் முடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குருவிட்ட சிறைச்சாலையில் புதிதாக 64 பேருக்கு கொரோனா

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

குருவிட்ட சிறைச்சாலையிலும் கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரி தம்மிக தசனாயக நேற்று தெரிவித்தார்.

இவ்விடயமாக அவர் ஊடகங்களுக்கு தகவல் தருகையில் நேற்றைய தினம் கொரோனா நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இத்துடன் இச்சிறைச்சாலையில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் எண்ணிக்கை 64 ஆக அதிகரித்துள்ளது. இவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம் கொவிட் கட்டுப்பாட்டு சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலமையால் சிறைச்சாலைக் கட்டமைப்புக்குள் கடுமையா ன சுகாதார நடைமுறைகள் செயற்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# குளவிக் கொட்டுக்கு இலக்காகி 9 தொழிலாளர்கள் பாதிப்பு

**(தெல்தோட்டை தினகரன் நிருபர்)**

பட்டியாகம தோட்டத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி 9 தொழிலாளர்கள் தெல்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஐந்து ஆண் தொழிலாளிகளும் நான்கு பெண் தொழிலாளிகளும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்ந்தும் வைத்தியசாலையில் இருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று 5ஆம் திகதி புதன்கிழமை. காலை பட்டியாகம இரண்டாம் இலக்க தேயிலை மலையில் கொழுந்து பறித்து கொண்டு இருக்கும்போதே குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

தேயிலை செடிகளுக்குள் இருந்த குளவிக்கூடு களைந்து தொழிலாளர்களை தாக்கியுள்ளது.

நான்கு கிலோமீற்றர் வரையில் குளவிகள் தொழிலாளர்களை விரட்டிகொண்டு வந்துள்ளது. அதன்பின்னர் தொழிலாளர்கள் ஒருவழியாக ஹேவாஹெட்ட தெல்தோட்டை பிரதான பாதை வரை வந்து பிறகு தோட்ட லொறியில் தெல்தோட்டை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

# பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு

## செந்தில் தொண்டமான் வாழ்த்து



க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு எனது வாழ்த்துக்கள் என இ.தொ.காவின் உபத் தலைவரும் பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் வெற்றிக்கு உறுதுணையாகவும், சிறந்த வழிகாட்டியாகவும் இருந்த ஆசிரியர்களுக்கும் வாழ்த்துக்கள்.

மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் விடாமுயற்சியும், கடின உழைப்புமே வெற்றிக்கு காரணம்.

கல்வித்துறையில் மாணவர்களின் நாட்டம் இத்தோடு நின்று விடாது பல்கலைக்கழகம் செல்ல வாழ்த்துவதோடு, விடா முயற்சியுடன் தொடர்ந்தும் செயற்பட்டு சாதனை புரிய வேண்டும்.

அதேபோல இப்பரீட்சையில் ஆர்வத்தோடு தோற்றிய மாணவர்களுக்கும், அதிக முயற்சியுடன் இப்பரீட்சையை எழுதி ஏதோ ஒரு சந்தர்ப்ப சூழ்நிலையால் வெற்றிபெற முடியாமல் போன மாணவர்களுக்கும் இது ஒரு முடிவு அல்ல.

இதுவே, ஆரம்ப புள்ளி. மனந்தளராமல் உங்கள் முயற்சியை கைவிடாது தொடர்ந்தும் கல்வி நடவடிக்கைகளில் உங்கள் கவனத்தை முழுமையாக செலுத்தி, அடுத்த வருடம் மீண்டும் இப்பரீட்சையை எழுதி பல சாதனைகளை படைக்க வேண்டும் என்பதே எனது அவா. மலையகத்தை சேர்ந்த மாணவர்கள் உயர்கல்வியை முழுமைப்படுத்திவிட்டு உங்களுடைய முழுமையான சேவையை எதிர்காலத்தில் மலையகத்திற்கு வழங்க எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

# நுவரெலியாவில் போதிய பி.சி.ஆர் இயந்திர வசதிகள் இன்மையால் மக்கள் அசௌகரியம்

**நுவரெலியா தினகரன் நிருபர்**

நுவரெலியாவில் போதிய பி.சி.ஆர் இயந்திர வசதிகள் இன்மையால் கொரோனா வைரஸ் தொற்றாளர்களை இனம் காண்பதில பெரும் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

நுவரெலியா மாவட்டத்திற்கு ஒரே ஒரு பி.சி.ஆர் இயந்திரமே தற்போதைக்கு இருக்கின்றது. இன்றைய சூழ்நிலையில் இன்னும் ஒரு பி.சி.ஆர் இயந்திரம் அவசரமாக தேவைப்படுகின்றது.

அதனை பெற்றுக் கொடுக்க சுகாதார அமைச்சு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னிணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்,

இன்றைய சூழ்நிலையில் கொரோனா தொற்று மிகவும் வேகமாக பரவி வருகின்றது.குறிப்பாக நுவரெலியாவில் 104 பேர் இனம் காணப்பட்டுள்ளனர். அவர்களுக்கு கடந்த 28 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற முடிவுகளின்படியே இந்த எண்ணிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது.



அதற்கு காரணம் ஒரே ஒரு பி.சி.ஆர் இயந்திரமே செயற்படுகின்றது. சரியான முறையில் பி.சி.ஆர் சோதனைகள் செய்யப்படுமாக இருந்தால் இன்னும் அதிகமான தொற்றாளர்கள் இனம் காணப்படுவார்கள். பி.சி.ஆர் சோதனை முடிவுகள் மிகவும் மந்தகதியிலேயே வெளிவருகின்றன.

தொற்றாளர்கள் திறந்த வெளியிலும் பொது இடங்களில் சுயாதீனமாக செயற்படுகின்றார்கள். அவர்களை இனம் கண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாக இருந்தால் பரிசோதனைகளை அதிகரிக்க வேண்டும்.முடிவுகள் மிக விரைவாக வெளிவர வேண்டும்.

இதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் தொற்று பரவுவதை எந்த காரணம் கொண்டும் கட்டுப்படுத்த முடியாது. எங்களுடைய பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு இதுவரையில் முறையான பி.சி.ஆர் சோதனையோ அல்லது தடுப்பூசியோ இன்னும் வழங்கப்படவில்லை. இன்றைய சூழ்நிலையில் அநேகமானவர்கள் வீட்டிற்குள் முடங்கியிருக்கின்ற இந்த நிலையில் எங்களுடைய தாய்மாரும் சகோதரர்களும் களத்தில் இருந்து தொழில் செய்கின்றார்கள்.

அவர்கள் தொழில் செய்வதன் காரணமாகவே எங்களுடைய நாட்டின் பொருளாதாரம் ஓரளவேனும் நிலையாக இருக்கின்றது. அவர்கள் வேலை செய்வதை நிறுத்தினால் நிலைமை என்ன?

அரசாங்கம் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்று அரசாங்கம் பாதுகாப்பு பிரிவினர் ,சுகாதார துறையினர் ஏனையவர்களுக்கு கொடுக்கின்ற முக்கியத்துவத்தை எங்களுடைய பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கும் கொடுக்க வேண்டும்.

அவர்களும் இந்த நாட்டின் முதுகெலும்பாக செயற்படுகின்றவர்கள்.எனவே ஏனைய சமூகத்தையும் ஏனைய தொழில் துறையில் உள்ளவர்கள் தொடர்பாக காட்டப்படுகின்ற முக்கியத்துவம் எங்களுடைய தொழிலாளர்கள் மீதும் செலுத்தப்பட வேண்டும் என்பதே எனது கோரிக்கையாகும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில்

# பாரதி தமிழ் வித்தியாலயத்தில் 22 மாணவர்கள் சித்தி

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

பதுளை பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியவர்களுள், 22 மாணவ, மாணவிகள் சித்தியடைந்து, பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு, இவ் வித்தியாலயத்திலிருந்து 26 மாணவ, மாணவிகள் தோற்றியிருந்த போதிலும், 22 பேர் மட்டுமே சித்தியடைந்தனர். இவர்களில் 1ஏ – 2 பி – ஏ. எப்தனிசான், 2 பி – 1 சி – எம். அபிலாசினி, 2 பி – 1 சி – டி. சியாமளா, 2 ஏ – 1 சி – எஸ். கௌரி ஆகிய நான்கு மாணவ, மாணவிகள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

# மாடுகள் கடத்தப்பட்டது தொடர்பில் இருவர் கைது

**தெனியாய தினகரன் நிருபர்**

சட்டவிரோதமான முறையில் ஆறு பசுமாடுகளை வாகனமொன்றில் ஏற்றி வேறு ஒரு இடத்திற்கு கொண்டு செல்வதற்கு தயாரான போது வாகன சாரதியையும் மற்றும் இன்னும் ஒருவரையும் தெனியாய பொலிஸார் கைது செய்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 34 மற்றும் 43 வயதுடைய இறக்குவானை பிரதேசத்தை சேர்ந்த நபர்கள் என பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

மாடுகளை வண்டியில் ஏற்றுவதற்கு தயாராக இருந்த பொழுது சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன.

# மக்களின் மனமறிந்து பிரதிநிதிகள் சேவை செய்ய வேண்டும்

நோர்வூட் பிரதேச சபை தலைவர் கே.கே.ரவி





**ஹட்டன் விசேட நிருபர்**

மக்கள் பிரதிநிதிகள் எப்போதும் மக்களின் மனமறிந்து வேலை செய்ய வேண்டுமே தவிர அவர்கள் கட்சி பார்த்தோ தொழிற்சங்கம் பார்த்தோ வேலை செய்யக்கூடாது என நோர்வூட் பிரதேச சபையின் தலைவர் கே.கே. ரவி தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட டின்சின் கர்கஸ்;வோல்ட் நடுக்கணக்குப்பிரிவில் கட்டப்பட்ட 35 வீடுகளை பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்வு நோர்வூட் பிரதேச சபைத் தலைவர் கே.கே.ரவியின் தலைமையில் நேற்று (05) திகதி நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த வீடுகள் ஐந்து லட்சம் ரூபா அரசாங்கத்தின் |மூலமும் மீதி ஐந்து லட்சம் தொழிலாளர்களிடமிருந்து அறவிடும் முறையிலும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இதற்கான அடிப்படை வசதிகளான தண்ணீர் மின்சாரம், வீதி அபிவிருத்தி ஆகியன தோட்ட வீடமைப்பு மற்றும் சமூதாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானினால் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நோர்வூட் பிரதேச சபைக்கு தலைவராக வந்த பின்னர் கட்சி பார்த்து தொழிற்சங்கம் பார்த்து வேலை செய்யவில்லை. எல்லோருக்கு பொதுவாக தான் வேலை செய்து வருகிறேன். யாரை கண்டாலும் எந்த கட்சி பாகுபாடு இன்றி வேலை செய்துவருகிறேன்.இந்த வீடுகளை கொடுக்கும் போது கூட பெயர் பட்டியியலில் மாற்றம் செய்ய வேண்டும் என்றார்கள். நானும் ஜீவன் தொண்டமானும் அதனை எதிர்த்தோம்.யார்யார்பெயர்கள் இருக்கின்றதோ அவர்கள் அனைவருக்கும் இன்று வீடுகளின் சாவிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த வீடுகள் கடந்த அரசாங்கத்தினால் கட்டப்பட்ட வீடுகள் யார் கட்டினாலும் பரவாயில்லை. எங்களது நோக்கம் எமது பிரதேசத்தில் உள்ள மக்கள் பயன்பெற வேண்டும் என்பதுதான். எதிர்காலத்தில் இன்னும் பல அபிவிருத்தி வேலைகள் இப்பிரதேசத்தில் செய்ய வேண்டியுள்ளது. அதனை நாங்கள் எவ்வித பாகுபாடு இன்றி செய்வோம். என தெரிவித்தார்.

# இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக நுழைவோரால் கொரோனா ஆபத்துக்கள்

## அவதானமாக இருக்குமாறு வடபகுதி மக்களுக்கு எச்சரிக்கை

*(யாழ்.விஷேட நிருபர்)*

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்குள் பிரவேசிப்போர் விடயத்தில் வட மாகாண மக்கள் அவதானமாக இருக்குமாறு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

தற்போதுள்ள கொரோனா நிலைமைகள் தொடர்பில் யாழ் மாவட்ட செயலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே, கணபதிப்பிள்ளை மகேசன் இவ்வாறு தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்:

தற்பொழுது யாழ் மாவட்டத்தில் கொரோனா நிலைமை சற்று அதிகரித்து வருகின்றது. கடந்த வாரங்களில் இது குறைவடைந்த போதும், நேற்றைய தினத்தில் 37 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால், கடந்த ஒக்டோபர் மாதத்திற்கு பின்னர் 1643 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.கடந்த வாரம் வரை 19 பேர், உயிரிழந்துள்ளதுடன், யாழ் மாவட்டத்தில் 968 குடும்பங்களைச் சேர்ந்த 1995 நபர்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். மேலும், நேற்று மாலையில் கிடைத்த பிசிஆர் பரிசோதனையின்படி கொடிகாமம் நகரப் பகுதியில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால், கொடிகாமம் சந்தை பகுதி அதனுடன் இணைந்த கடைத் தொகுதி அத்தோடு இரண்டு கிராம சேவகர் பிரிவுகள், கொடிகாமம் வடக்கு, கொடிகாமம் மத்தி ஆகிய இரண்டும் நேற்று காலை தொடக்கம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில், அந்தப்பகுதியில் சுகாதாரப் பிரிவினர். தொடர்ச்சியான பிசிஆர் பரிசோதனைகளை மேற்கொண்டு கிராம மக்களை, தொடர்ச்சியாக கண்காணித்து வருகின்றனர்.

ஆகவே பொதுமக்கள் சுகாதாரப் பிரிவினரின் அறிவுரைகளை பின்பற்றிச் செயற்பட வேண்டும். இந்த இக்கட்டான காலகட்டத்தில் அநேகமாக தேவையற்ற பயணங்களைத் தவிர்த்து வீடுகளிலிருந்து செயல்படும்படி நாங்கள் பொதுமக்களை கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழ்நாட்டில் தொற்றுக்கள் அதிகரித்துள்ளதால் மக்கள் கடல் கடந்து சட்டவிரோதமாக இலங்கைக்குள் பிரவேசிப்பதற்குரிய நிலைமைகள் காணப்படுகின்றன. சட்டவிரோதமாக நுழைய முற்பட்ட 11 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலும் இந்த நடவடிக்கை குறித்து ஆழ்கடல் மீனவர்களுக்கும் அதேபோல மீன்பிடி சமூகத்தினருக்கும் கரையோரப் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## தென்மராட்சி கல்வி வலயம் சாதனை

*(சாவகச்சேரி விசேட நிருபர்)*

2020ஆம் ஆண்டு க.பொ.த உயர் தரப் பரீட்சையில் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் தேசிய மற்றும் மாவட்ட மட்டங்களில் சாதனை படைத்துள்ளனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் தனராஜ் சுந்தர்பவன் கணிதப் பிரிவில் தேசிய மட்டத்தில் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

அதேவேளையில் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவி கனகேஸ்வரன் கவீனா விஞ்ஞானப் பிரிவில் 3ஏ சித்தி பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடம் பிடித்துள்ளதுடன் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி குணநாயகம் நிலானி 3ஏ சித்தி பெற்று கலைப்பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுகாதார நடைமுறையை பேணாததால் மந்திகை பொதுச் சந்தை மூடப்பட்டது

*(நாகர்கோவில் விஷேட நிருபர்)*

சுகாதார நடைமுறைகளை மீறி செயற்பட்டதன் காரணமாக மந்திகை பொதுச்சந்தை மூடப்பட்டது. திடீரென இங்கு வந்த சுகாதாரப் பகுதியினர் இதை மூடினர்.

கொரோனா விதிமுறைகளுக்கு அமைவாக சந்தைகளில் சமூக இடைவெளிகளை பேணுதல், கைகழுவுதல் மற்றும் முகக் கவசம் அணிதல் உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளை பின்பற்றி சந்தைகள் இயங்க வேண்டும் எனத் தெரிவிக்கப் பட்டிருக்கின்றது. எனினும் இந்தச் சுகாதார முறைகளைப் பின்பற்றாது மந்திகைச் சந்தை இயங்கியது.இதன் காரணமாக நேற்று புதன்கிழமை(05) சுகாதாரப் பகுதியினர் இச்சந்தையை தற்காலிகமாக மூடினர். சுகாதார நடைமுறைகள் உரியமுறையில் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்திலே, இச்சந்தை மீண்டும் திறக்கப்படும் என சுகாதார தரப்பினர் தெரிவித்தனர்.

## கணிதப்பிரிவில் சித்திவிநாயகர் கல்லூரி மாணவி ரக்சாஜினி முதலிடம்

*(தலைமன்னார் விஷேட நிருபர் )*

வெளியாகியுள்ள 2020 ம் ஆண்டுக்கான கல்வி பொது தராதர உயர் தரப் பரீட்சையில், பௌதீகவியல் விஞ்ஞானப் பிரிவில் மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை மாணவி வசீகரன் ரக்சாஜினி மூன்று ஏ புள்ளிகளைப் பெற்று மன்னார் மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர், மன்னார் உப்புக்குளத்தைச் சார்ந்த திரு. திருமதி வசீகரன் வாசுகியின் புதல்வியாவார். பாடசாலைக் கல்வியிலே அதிகம் கவனம் செலுத்தி வந்ததாகவும். தனக்கு படிப்பில் சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் வகுப்பு ஆசிரியர்களிடம் சந்தேகங்களை உடனுக்குடன் தீர்த்துக்கொள்வதாகவும் தெரிவித்தார்.

இரவு 9 மணி தொடக்கம் மறுநாள் அதிகாலை ஒரு மணி வரை இரவு நேரங்களிலேயே படிப்பில் அதிகநேரம் செலவழித்து வந்த இவருக்கு பெற்றோர், சகோதரிகள் உறுதுணையாக இருந்துள்ளனர். இதுவே, கணிதப்பிரிவில் முதலிடம் பெற வாய்ப்பு ஏற்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## உயர்தரப் பரீட்சையில் சாதனை படைத்தோருக்கு கௌரவம்

*(சாவகச்சேரி விசேட நிருபர்)*

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரின் ஏற்பாட்டில் 2020ஆம் ஆண்டு க.பொ.த உயர் தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்த தென்மராட்சி மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு 05/05/2021 புதன்கிழமை மீசாலையில் இடம்பெற்றது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் கோகுலன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், கணிதப் பிரிவில் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பிடித்த சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் தனராஜ் சுந்தர்பவன், உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பிடித்த மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவி கனகேஸ்வரன் கவீனா மற்றும் கலைப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பிடித்த சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி குணநாயகம் நிலானி ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் லயன்ஸ் கழக பிரமுகர்கள், சாவகச்சேரி லயன்ஸ் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## கிளிநொச்சி கிருஷ்ணபுரம் பகுதியில் காட்டு யானைகளின் தொல்லை

*(பரந்தன் குறூப் நிருபர்)*

கிளிநொச்சி கிருஸ்ணபுரம் பகுதியில் காட்டுயானைகளால் பயன்தரு மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. நேற்றிரவு புகுந்த இந்தக் காட்டு யானைகளே வாழ்வாதாரப் பயிர்களை அழித்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியிலுள்ள காணி உரிமையாளரின் வளவில் இருந்த பயன்தரு தென்னைமரங்கள், வாழை உள்ளிட்ட பயிர்களே யானைகளால் அழிவடைந்துள்ளன. இதேவேளை அப்பகுதியிலுள்ள 20 குடும்பங்கள் வரை யானையின் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளதுடன், யானை மீண்டும் தமது பிரதேசத்திற்குள் நுழைந்துவிடும் என்ற அச்சத்திலும் இவர்கள் உள்ளனர்.

இந்தக் காட்டு யானைகளைத் துரத்துவதற்கு பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டபோதிலும், அது பயிர்களை அழித்துவிட்டு அதிகாலை 4 மணியளவிலேயே அவ்விடத்தை விட்டு கலைந்து சென்றுள்ளன.

## தமிழ் தேசிய கட்சிகளின் எம்பிக்கள் அமைச்சர் சமலுடன் முக்கிய சந்திப்பு

*(பருத்தித்துறை விசேட நிருபர்)*



தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சனைகள் தொடர்பில், அமைச்சர் சமல் ராஜபக்ஷவை, தமிழ் தேசிய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இதன் போது பல்வேறு விடயங்களுக்கு அமைச்சர் சாதகமான பதில்களை வழங்கியதுடன் அடுத்த கட்டமாக மீண்டும் ஒரு சந்திப்பை நடத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

கல்முனை பிரதேச செயலகத்தை தரமிறக்கும் நடவடிக்கையை நிறுத்திவைக்கவும் இதில் இணக்கம் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் முல்லை கரைத்துறைப்பற்றில் 08 கிராம சேவையார் பிரிவுகளதும் காணி நிர்வாகத்தை மகாவலி அதிகார சபை பொறுப்பேற்பதை, தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறும் அமைச்சர் சமல் ராஜபக்ஷ பணித்துள்ளார். இது தொடர்பில் குழு அமைத்து ஆராயும்வரை, எந்த நடவடிக்கைகளையும் தொடர வேண்டாமெனவும் அதிகாரிகளை, அமைச்சர் கேட்டுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இரணைதீவில் சுயதனிமைப்படுத்தப்பட்ட 24 பேருக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகள்

*(மன்னார் குறூப் நிருபர்)*

இரணைதீவில் சுய தனிமைப்படுத்தப்பட்ட சுமார் 24 பேருக்கு நேற்று புதன் கிழமை(5) காலை பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரீ.வினோதன் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவிலிருந்து தலைமன்னார் பகுதிக்கு சட்ட விரோதமான முறையில் கடந்த 10 நாட்களுக்கு முன்னர் வருகை தந்த நிலையில், கைது செய்யப்பட்ட 2 நபர்களும், அவர்களை அழைத்து வந்த மூன்று நபர்களுக்கும் நேற்று புதன் கிழமை (5) சுய தனிமைப்படுத்தப்பட்ட இரணைதீவு பகுதியில் வைத்து பீ.சி. ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தியாவிலிருந்து வருகை தந்தவர்களில் ஒருவர் ஏற்கனவே தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இந்நிலையிலே ஏனைய 3 நபர்களுக்கும் நேற்று பீ.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் இவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட கடற்படையினர் மற்றும் பொலிஸார் உட்பட குறித்த 21 பேருக்கும், இவர்கள் தனிமைப் படுத்தி வைக்கப்பட்டிருந்த இரணைதீவுப் பகுதியிலே பீ.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பரிசோதனை மாதிரிகள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், பின்னர் முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன. இதேவேளை நேற்று முந்தினம் செவ்வாய்க்கிழமை (4) மன்னார், நானாட்டான் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டசுமார்416பி.சி.ஆர். பரிசோதனைகளும் கொழும்பில் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆசிரிய கலாசாலை இறுதிப் பரீட்சை மே 10இல் திட்டமிட்டபடி நடைபெறும்

நாடுமுழுவதிலும் உள்ள எட்டு ஆசிரிய கலாசாலைகளதும் ஆசிரிய மாணவர்களுக்காகப் பரீட்சை திணைக்களத்தால் நடத்தப்படும் இறுதிப்பரீட்சை, எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பமாகி 21 ஆம் திகதி வரை நடைபெறும் என கல்வி அமைச்சின் ஆசிரிய கல்வி நிர்வாகப் பிரிவுப் பணிப்பாளர், அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

கடந்த 2020 செப்டெம்பர் மாதம் நடைபெறவேண்டிய இப்பரீட்சை தாமதங்களை எதிர்கொண்டுள்ள நிலையில், தற்போது நடைபெறுவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பரீட்சையை எதிர்கொள்ளவுள்ள ஆசிரிய மாணவர்கள், கலாசாலைகளில் அல்லது கலாசாலைச் சூழலில் தங்கியிருந்து பரீட்சையை எழுதுவதற்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்குமாறும் கலாசாலை அதிபர்களைக் கல்வி அமைச்சின் ஆசிரிய நிர்வாகப் பிரிவுப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

இதே வேளை பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவர்கள் மற்றும் பரீட்சை மேற்பார்வைக் குழுவினர் அனைவரும் பரீட்சை ஆரம்பமாவதற்கு முதல் நாளோ அன்றி அதற்கு முதல் நாளோ அன்டிஜன் சோதனையை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

## சவுக்கங் காடு தீயில் எரிந்து நாசம்



*(நாகர்கோவில் விஷேட நிருபர்)*

மணற்காடு சவுக்கங் காட்டில் ஏற்பட்ட பாரிய தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. நேற்று புதன்கிழமை (05) அதிகாலை மணற்காடு சவுக்கங்காடு பகுதியில் தீப் பரவல் ஏற்பட்டது. இதனால் இப்பகுதி புகைந்து கொண்டிருந்த நிலையில், இதுபற்றி பிற்பகல் அளவிலேயே மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கு தெரியவந்தது. இதனையடுத்து பிரதேச செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவ பிரிவு மற்றும் விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினரின் இணைந்து பெரும் சிரமத்துக்கு மத்தியில் மாலை வேளையில் இத் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இத்தீ காரணமாக சுமார் 20 ஏக்கர் சவுக்கங்காடு எரிந்து அழிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.




## ஆளுநர் பன்வாரிலாலுடன் மு.க.ஸ்டாலின் சந்திப்பு

# ஆட்சி அமைக்க உரிமை கோரினார்

## நாளை முதலமைச்சராக ஆளுநர் முன்னிலையில் பதவியேற்பு

ஆட்சி அமைக்க ஆளுநர் முறைப்படி அழைப்பு விடுத்ததும் அமைச்சரவை பட்டியலை இன்று மு.க.ஸ்டாலின் ஆளுநர் பன்வாரிலால் புரோகித்திடம் வழங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக சட்டசபை தேர்தலில் தி.மு.க. கூட்டணி 159 இடங்களில் வெற்றி பெற்றது. இதில் தி.மு.க. மட்டும் 125 இடங்களில் வென்று தனிப்பெரும்பான்மை பெற்றது.

கூட்டணி கட்சி சார்பில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட ம.தி.மு.க., மனிதநேய மக்கள் கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 8 எம்.எல்.ஏ.க்களையும் சேர்த்து தி.மு.க.வுக்கு 133 எம்.எல்.ஏ.க்கள் உள்ளனர்.

தி.மு.க. தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கிறது. புதிய ஆட்சியை ஏற்படுத்த முறைப்படி சட்டசபை தி.மு.க. தலைவரை தேர்வு செய்ய தி.மு.க. எம்.எல். ஏ.க்கள் கூட்டத்தை பொதுச் செயலாளர் துரைமுருகன் கூட்டினார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் நேற்று மாலை 6 மணி அளவில் நடைபெற்றது. கூட்டத்துக்கு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமை தாங்கினார்.

பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மை செயலாளர் கே.என். நேரு, துணை பொதுச் செயலாளர்



கள் பொன்முடி, ஐ.பெரியசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி வரவேற்றார்.

கூட்டத்தில் தி.மு.க. சட்டமன்ற கட்சி தலைவராக (முதல்அமைச்சராக) மு.க.ஸ்டாலினை எம்.எல்.ஏ.க்கள் அனைவரும் ஒருமனதாக தேர்ந்தெடுத்தனர். அப்போது அரங்கத்தில் உள்ள எம்.எல்.ஏ.க்கள் அனைவரும் எழுந்து கரவொலி எழுப்பி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

தி.மு.க. சட்டமன்ற தலைவராக (முதல்அமைச்சராக) மு.க.ஸ்டாலின் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டதற்கான கடிதத்தில் 133 எம்.எல்.ஏ.க்களும் கையெழுத்திட்டனர். இதைத் தொடர்ந்து எம்.எல்.ஏ.க்கள் மு.க.ஸ்டாலினுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

கூட்டம் முடிந்ததும் மு.க.ஸ்டாலின் மெரினா கடற்கரையில் உள்ள அண்ணா மற்றும் கருணாநிதி நினைவிடங்களில் மலர் தூவி மரியாதை செலுத்தினார். நேற்று (புதன்கிழமை) காலை 10.30 மணிக்கு கிண்டி ஆளுநர் மாளிகைக்கு மு.க.ஸ்டாலின் சென்றார். அவருடன் பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மை செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோரும் சென்று இருந்தனர்.

அங்கு ஆளுநர் பன்வாரிலால் புரோகித்தை தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் சந்தித்தார். அப்போது அவர் சட்டமன்ற கட்சி தலைவராக எம்.எல்.ஏ.க் களால் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான கடிதத்தை ஆளுநர் பன்வாரிலால் புரோகித்திடம் வழங்கினார்.

ஆட்சி அமைப்பதற்கான உரிமை கோரினார். இதை ஆளுநர் பன்வாரிலால் ஏற்றுக்கொண்டார்.

இதையடுத்து ஆளுநர் பன்வாரிலால் புரோகித், மு.க. ஸ்டாலினுக்கு வாழ்த்து தெரிவித்து பூங்கொத்து வழங்கினார். ஆட்சி அமைப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்வதாக கூறினார். பின்னர் அங்கு மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட அனைவருக்கும் ஆளுநர் தேனீர் வழங்கினார்.

நாளை 7ம் திகதி முதல்அமைச்சராக பதவி ஏற்க விரும்புவதாக மு.க.ஸ்டாலின் தெரிவித்தார். கிண்டி ஆளுநர் மாளிகையில் பதவி ஏற்பு விழாவை வைத்துக் கொள்ளலாம் என்றும் விருப்பம் தெரிவித்தார். இதையும் ஆளுநர் பன்வாரிலால் புரோகித் ஏற்றுக் கொண்டார்.

ஆட்சி அமைக்க ஆளுநர் முறைப்படி அழைப்பு விடுத்ததும் அமைச்சரவை பட்டியலை இன்று மு.க.ஸ்டாலின் ஆளுநர் பன்வாரிலால் புரோகித்திடம் வழங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று சந்தித்ததைத் தொடர்ந்து கிண்டி ஆளுநர் மாளிகை வளாகத்தில் உள்ள திறந்த புல்வெளி மைதானத்தில் புதிய அமைச்சரவை பதவி ஏற்பு விழாவுக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து வருகின்றன. அங்கு சுமார் 200 பேர் அமரும் வகையில் பதவி ஏற்பு விழா நிகழ்ச்சிகள் எளிமையான முறையில் நடைபெறுகிறது.

பதவி ஏற்பு விழாவில் பங்கேற்கும் அனைவரும் கொரோனா பரிசோதனை செய்திருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதையொட்டி விழாவில் பங்கேற்க வரும் அனைவருக்கும் நேற்று கொரோனா பரிசோதனை நடத்தப்பட்டு வருகிறது.

## மேற்கு வங்காளத்தில் மம்தா பானர்ஜி முதலமைச்சராக நேற்று பதவியேற்பு

மம்தா பானர்ஜி 3வது முறையாக நேற்று மேற்கு வங்க முதலமைச்சராக பதவியேற்றுக்கொண்டார். அடுத்தகட்டமாக அவர் அமைச்சரவையை அமைக்க உள்ளார்.

மேற்கு வங்காள சட்டசபைக்கு நடந்த தேர்தலில் மொத்தம் உள்ள 294 தொகுதிகளில் 292 தொகுதிகளுக்கு ஓட்டுப்பதிவு நடைபெற்றது.

கடந்த 2ம் திகதி நடந்த ஓட்டு எண்ணிக்கையில் 213 தொகுதிகளில் வெற்றி பெற்று மம்தா பானர்ஜி 3வது முறையாக ஆட்சியை பிடித்தார்.

மம்தாவின் திரிணாமுல் காங்கிரசுக்கு அடுத்தபடியாக பாரதிய ஜனதா கட்சி 77 இடங்களில் வெற்றி பெற்றது. இந்தநிலையில் மேற்கு வங்காளத்தில் பல்வேறு பகுதிகளிலும் கடந்த 2 தினங்களாக திரிணாமுல் காங்கிரஸ், பா.ஜனதா தொண்டர்கள் இடையே கடும் மோதல் ஏற்பட்டது.

இதில் 11 பேர் கொல்லப்பட்டனர். 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சூறையாடப்பட்டன. மேற்கு வங்காளத்தில் ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்துவதற்கு சதி செய்து இத்தகைய வன்முறை தூண்டி விடப்பட்டிருப்பதாக மம்தா பானர்ஜி குற்றம் சாட்டி உள்ளார்.

இந்தநிலையில் மம்தா பானர்ஜி முதலமைச்சராக பதவி ஏற்கும் ஏற்பாடுகள் நேற்றுமுன்தினம் தொடங்கின. கடந்த திங்கட்கிழமை மம்தா பானர்ஜி ஆளுநரை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார். ஏற்கனவே வகித்து வந்த முதல்வர் பதவியை ராஜினாமா செய்து அவர் கடிதம் கொடுத்திருந்தார்.

அதை ஏற்றுக்கொண்ட ஆளுநர் ஜெகதிப்தன்கர் தற்காலிகமாக முதல்வர் பதவியை ஏற்கும்படி மம்தாவை கேட்டுக்கொண்டார். மேலும் ஆட்சி அமைக்க வருமாறு அழைப்பு விடுத்தார். இதை ஏற்றுக்கொண்ட மம்தா



பானர்ஜி நேற்றுக் காலை 10.45 மணிக்கு முதலமைச்சராக பதவி ஏற்றுக்கொண்டார்.

மம்தா பானர்ஜி பதவி ஏற்கும் விழா கொல்கத்தாவில் உள்ள ஆளுநர் மாளிகையில் மிக எளிமையாக நடைபெற்றது. கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மிக குறைந்த அளவில் அழைப்பாளர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

மம்தா பானர்ஜி 3வது முறையாக நேற்று மேற்கு வங்க முதலமைச்சர் ஆகி இருக்கிறார். அடுத்தகட்டமாக அவர் அமைச்சரவையை அமைக்க உள்ளார். இதற்கிடையே மேற்கு வங்காள எம்.எல்.ஏ.க்கள் பதவி ஏற்பு விழா நடைபெற உள்ளது. இதற்காக தற்காலிக சபாநாயகராக பீமன் பானர்ஜி தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவர் புதிய எம்.எல்.ஏ.க்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைப்பார். மம்தா பானர்ஜி தற்போது எம்.எல்.ஏ.வாக இல்லை. அடுத்த 6 மாதத்துக்குள் அவர் எம்.எல்.ஏ.வாக தேர்வு செய்யப்பட வேண்டும். எனவே திரிணாமுல் காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களில் யாராவது ஒருவர் பதவியை ராஜினாமா செய்வார்கள் என்று தெரிய வந்துள்ளது.

## இந்தியாவில் கொரோனா நிலவரம்; புதிதாக 3,82,315 பேருக்கு தொற்று



கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 1,69,51,731 ஆக உயர்ந்துள்ளது. நேற்றுமுன்தினம் ஒரே நாளில் 3,38,439 பேர் குணமடைந்துள்ளனர்.

இந்தியாவில் கொரோனா வைரசின் 2ம் அலை கட்டுக்கடங்காமல் பரவி வருகிறது. தினசரி நோய்த்தொற்றுகளின் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து 3 இலட்சத்தை தாண்டிவிட்டது. உயிரிழப்பும் கணிசமாக உயர்ந்து வருகிறது. இதனால் நோய்த்தொற்று அதிகம் கண்டறியப்படும் மாநிலங்களில் ஊரடங்கு விதிக்கப்பட்டு, கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் கொரோனா பாதிப்பு நிலவரம் குறித்த அறிக்கையை நேற்றுக் காலை மத்திய சுகாதார அமைச்சு வெளியிட்டது. இந்த தகவலின்படி இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2,06,65,148 உயர்ந்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் 3,82,315 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நேற்று ஒரே நாளில் 3,780 பேர் மரணம் அடைந்துள்ளனர். இதன் மூலம் கொரோனா வைரசால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2,26,188 ஆக உயர்ந்துள்ளது.

கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 1,69,51,731 ஆக உயர்ந்துள்ளது. நேற்று ஒரே நாளில் 3,38,439 பேர் குணமடைந்துள்ளனர்.

நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் 34,87,229 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

நாடு முழுவதும் நேற்று வரை 16,04,94,188 பேருக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

## சுகாதார கட்டமைப்புக்கு ரூ.50 ஆயிரம் கோடி; ரிசர்வ் வங்கி ஆளுநர் அறிவிப்பு

கொரோனா காலத்தில் சிறப்பாக சேவையாற்றி வரும் டாக்டர்கள், நர்சுகள் உள்ளிட்ட சுகாதாரத்துறை பணியாளர்கள், முன்களப்பணியாளர்கள், பொலிசார் தன்னலமின்றி சிறப்பாக பங்காற்றி வருகிறார்கள்.

ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் இன்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

கொரோனா 2வது அலை தீவிரமாக பரவுவதால் இந்திய பொருளாதாரத்துக்கு புதிய சோதனைகள் வர உள்ளன. நாட்டின் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டு இருக்கிறது.

கொரோனாவால் பொதுமக்கள், தொழில் நிறுவனங்கள் பாதிக்காமல் இருக்க ரிசர்வ் வங்கி நடவடிக்கை எடுக்கும். நிலைமையை ஆர்.பி.ஐ. உன்னிப்பாக கவனித்து வருகிறது.

சென்ற ஆண்டை விட இந்த வருடம் கொரோனா அலை தீவிரமாக இருந்தாலும் அதன் பொரு



ளாதார பாதிப்பு ஓரளவுக்கு கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது. ஏனென்றால் நாடு முழுவதும் பொது முடக்கம் இல்லை. ஓரிரு மாநிலங்களில் கட்டுப்பாடுகளுடன் கூடிய பொது முடக்கம் இருக்கிறது. வேறு சில மாநிலங்களில் அதிக தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கு என பல்வேறு வகையான பொது முடக்கம் இருக்கின்றன. கொரோனாவால் பொருளாதாரம் பாதிக்கப்படுவதை தடுத்து நிறுத்துவோம். நாடு முழுவதும் சுகாதாரத்துறை கட்டமைப்புக்கு ரூ.50 ஆயிரம் கோடி அவசர ஊக்கத்தொகையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## நந்திகிராம் தொகுதியில் தோல்வி, மம்தா பானர்ஜி முதல்வராகக் கூடாது

நந்திகிராம் தொகுதியில் தோல்வியடைந்த மம்தா பானர்ஜி முதல்வர் பதவியில் அமரும் தகுதியை இழந்து விட்டார் என திரிபுரா முதல்வர் பிப்லப் தேவ் குமார் விமர்சித்துள்ளார்.

நந்திகிராம் தொகுதியில் தோல்வியடைந்த மம்தா பானர்ஜி முதல்வர் பதவியில் அமரும் தகுதியை இழந்து விட்டார் என திரிபுரா முதல்வர் பிப்லப் தேவ் குமார் விமர்சித்துள்ளார்.

மேற்கு வங்கத்தில் 292 தொகுதிகளுக்கும் நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் திரிணாமூல் காங்கிரஸ் கட்சி 212 இடங்களில் வென்றது. பாஜக 77 இடங்களில் வெற்றி பெற்றது. திரிணாமூல் காங்கிரஸ் மிகப்பெரும் வெற்றியை பெற்றாலும் அக்கட்சியின் தலைவரும் மாநில முதல் மந்திரியுமான மம்தா பானர்ஜி நந்திகிராம் தொகுதியில் தோல்வி அடைந்தார். இந்த நிலையில், நந்திகிராம் தொகுதியில் தோல்வியை தழுவியதால் தார்மீக அடிப்படையில் மம்தா பானர்ஜி



முதல்வராகக் கூடாது என்று திரிபுரா முதல் மந்திரி பிப்லப் தேவ் குமார் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில், "

மம்தா பானர்ஜி தான் போட்டியிட்ட நந்திகிராம் தொகுதியில் தோல்வியடைந்து விட்டார். மக்களால் நிராகரிக்கப்பட்டவர் எப்படி முதல்வராக முடியும். திரிணாமூல் காங்கிரஸ் சார்பில் வேறு ஒருவரே முதல்வர் பதவியில் அமர வேண்டும். முதல்வர் பதவி வகிக்கும் தார்மீக உரிமையை மம்தா இழந்து விட்டார்" என்றார்.

# தமிழகத்தில் புதிய கட்டுப்பாடுகள் இன்று முதல் அமுல்

தமிழகத்தில் தேர்தல் முடிந்து புதிய அரசு நாளை பொறுப்பேற்க உள்ளது. அதே நேரத்தில் இன்று முதல் புதிய கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் கொரோனா பரவல் மீண்டும் அதிகரித்து வருவதை அடுத்து பல்வேறு கட்டுப்பாடுகள் தொடர்ச்சியாக விதிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த மாதம் 20ம் திகதி முதல் இரவு நேர ஊரடங்கு தினமும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக அனைத்து கடைகளையும் இரவு 9 மணிக்குள் மூடிவிட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இரவு 10 மணிக்கு பிறகு அவசர தேவைகளுக்கு மட்டுமே மக்கள் வெளியில் வர வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. இதனை மீறி வெளியில் யாராவது வாகனங்களில் வந்தால் அந்த வாகனங்களை பறிமுதல் செய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



இந்தநிலையில் தமிழகத்தில் தேர்தல் முடிந்து புதிய அரசு நாளை பொறுப்பேற்க உள்ளது. அதே நேரத்தில் இன்று முதல் புதிய கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான அறிவிப்பு நேற்று முன்தினம் இரவு வெளியிடப்பட்டது. அது இன்று முதல் அமுல்படுத்தப்படவுள்ளது.

அதன்படி இன்று காலை 6 மணி முதல் பகல் 12 மணிவரை மளிகை, காய்கறி கடைகளுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதுதவிர மற்ற அனைத்து கடைகளையும் மூடுவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதனால் நாளை ஜவுளிக்கடைகள், பாத்திரக்கடைகள், எலக்ட்ரானிக் கடைகள் உள்ளிட்ட அனைத்து கடைகளும் முழுமையாக அடைக்கப்பட்டு இருக்கும்.

அதேநேரத்தில் ஓட்டல்களில் பார்சல்களுக்கு மட்டும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அனைத்து உணவகங்கள், பேக்கரிகளில் காலை 6 மணி முதல் 10 மணிவரையிலும் பகல் 12 மணி முதல் 3 மணிவரையிலும், மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரையிலும் பார்சல்களுக்கு மட்டும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

டீக்கடைகள் பகல் 12 மணிவரை செயல்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஓட்டல்கள் மற்றும் டீக்கடைகளில் அமர்ந்து சாப்பிடுவதற்கு அனுமதி இல்லை. மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் அழகு நிலையங்கள் செயல்பட ஏற்கனவே தடை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த 20ம் திகதி முதல் இந்த பகுதிகளில் கடைகள் செயல்படவில்லை.

இன்று முதல் ஊரகப் பகுதிகளில் உள்ள அழகு நிலையங்களுக்கும் தடை விதிக்கப்படுகிறது. சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மீன் மார்க்கெட், இறைச்சிக் கடைகள் செயல்படுவதற்கு அனுமதி இல்லை.

இன்று முதல் காலை 6 மணியில் இருந்து பகல் 12 மணிவரை செயல்பட இந்த கடைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. பயணிகள் ரெயில், மெட்ரோ ரெயில், தனியார் பஸ்கள், வாடகை ஆட்டோக்கள், கார்கள் ஆகியவற்றில் 50 சதவீத இருக்கைகளில் மட்டுமே பயணிகள் அமர்வதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுவும் இன்று முதல் அமுலுக்கு வருகிறது. அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள் 50 சதவீத பணியாளர்களுடன் செயல்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில் மருந்தகங்கள் வழக்கம் போல செயல்படும். மருந்து வாகனங்கள், உணவுப் பொருட்களை ஏற்றிச்செல்லும் வாகனங்கள் மற்றும் பால் வாகனங்களுக்கு எந்த தடையும் விதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கிழக்கின் குரல்



## பாலங்களை புனரமைக்குமாறு கோரிக்கை

### பொதுமக்கள் விசனம்

(ரொட்டவெவ குறுப் நிருபர்)

கிண்ணியா கச்சக்கொடுத்தீவு உப்பு வயலுக்கு செல்லும் வீதியிலுள்ள இரண்டு பாலம் உடைந்துள்ளதால் உப்பு செய்கையாளர்கள், இவ்வீதியினூடாக பிரயாணம் செய்யும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகுவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

கச்சக்கொடுத்தீவு பிரதான வீதியிலிருந்து உப்பு வயலுக்கு செல்லும் உள்வீதியிலுள்ள இரண்டு பாலங்களும் உடைந்துள்ளன. ஒவ்வொரு பாலத்துக்கும் இடையே உள்ள தூரம் சுமார் 600 மீற்றராகும்.

பாலம் உடைந்து காணப்படுவதால் வாகனங்கள் எதுவும் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் நீர் இறைக்கும் இயந்திரம், உப்பு மற்றும் உபகரணங்கள் எடுத்து செல்வதில் சிரமங்களுக்கு உள்ளாகுவதாக விசனம் தெரிவிக்கின்றனர். மேலும் காக்காமுனை, மயில்தீவு, விண்வெளி மற்றும் கச்சக்கொடுத்தீவு அதிகமான பொதுமக்கள் போக்குவரத்துக்கு பயன்படுத்திவருகின்ற பிரதான பாதையாகவும் இது காணப்படுகிறது.

எனவே உடைந்து கிடக்கும் பாலங்கள் இரண்டையும் புனர்நிர்மாணம் செய்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டுக் கொள்கின்றனர்.

## இடதுகரை வாய்க்கால் புனரமைக்கபடாததால் விவசாய செய்கை பாதிப்பு

(மண்டூர் குறுப் நிருபர்)

களுவாஞ்சிக்குடி நவகிரி நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவுக்குட்பட்ட நவகிரிக் குளத்தில் இருந்து தும்பங்கேணி ஊடாக வரும் இடதுகரை வாய்க்கால் புனரமைக்கப்படாமல் இருப்பதனால் விவசாய செய்கைகள் மேற்கொள்ளவில்லையென விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர். இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

நவகிரிக் குளத்தில் இருந்து தும்பங்கேணி ஊடாகவுள்ள இடதுகரை வாய்க்கால் (T 10/2) கடந்த 25 வருட காலத்திற்கு மேலாக திருத்தப்படாமல் இருப்பதனால் வெல்லாவெளி, விவேகானந்தபுரம், பிலாலிம் வேம்பு கண்டங்கள் உட்பட சுமார் 1500 க்கு மேற்பட்ட ஏக்கர் வயல் நிலங்களில் செய்கை மேற்கொள்ளப்படுவதில்லையென்றும், அவ்வாறு பல்வேறு சவால்களுக்கு மத்தியில் செய்கைகளை மேற்கொண்டாலும் வயல்நிலங்கள் நீரின்றி கருகி வாடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நவகிரிக் குளத்தில் இருந்து தும்பங்கேணி ஊடாகவுள்ள இடதுகரை வாய்க்காலில் ஆலையடிமடுப் பகுதியில் இடைமறித்து நீர்ப்பாசனம் பாய்வதற்கான தடை ஏற்படுத்தப்பட்டுள்ளதனால் பிலாலிவேம்பு பிரதேசத்திற்குட்பட்ட பொதுமக்கள் மற்றும் கால்நடைகள் குடிநீரின்றி அவதியுறுவதாகவும் தெரியவருகிறது.

## ரிஷாட்டை விடுதலை செய்யுமாறு கோரி ஓட்டமாவடி பிரதேச சபை முன்பாக போராட்டம்

### பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் பதாகைகளை தாங்கியவாறு கோஷம்





கல்குடா தினகரன் நிருபர்

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனை உடனடியாக விடுதலை செய்ய கோரி ஓட்டமாவடி பிரதேச சபை முன்பாக கண்டனப் போராட்டம் ஒன்று நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் தலைமையில் நடைபெற்ற இக் கண்டனப் போராட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் வாழைச்சேனை, ஓட்டமாவடி பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது எமது தலைமையை விடுதலை செய்?, ரிஷாட்டை ஏன் கைது செய்தாய் காரணத்தை வெளிப்படுத்து, ரிஷாட்டை விடுதலை செய் என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியவாறு சமூக இடைவெளிகளைப் பேணி போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

புனித நோன்பு காலத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனை கைது செய்துள்ளமை கவலையளிப்பதுடன், எந்த வித முன்னறிவித்தலுமின்றி கைது செய்துள்ளமை மனவேதனையளிப்பதுடன், உடனடியாக ஜனாதிபதி, பிரதமர் விசாரணை மேற்கொண்டு விடுதலை செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுப்பதாக ஆர்ப்பாட்டகாரர்கள் தெரிவித்தனர்.

## மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராக சுபியான் பதவியேற்பு

அம்பாறை மாவட்ட குறுப், வெல்லாவெளி தினகரன் நிருபர்கள்

மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராக நிந்தவூரைச் சேர்ந்த இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர் எம்.பி.எம். முஹம்மட் சுபியான் செவ்வாய்க்கிழமை (04) தனது கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார். மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராக கடமையாற்றிய கே. முகுந்தன் அநுராதபுர மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளராக கடந்த திங்கட்கிழமை (3) தனது கடமைகளை பொறுப்பேற்றிருந்தார். முஹம்மட் சுபியான் இதற்கு முன்னர் அநுராதபுர மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளராக கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடமையாற்ற கிடைத்தமை மிக்க மகிழ்ச்சியை தருவதோடு இங்கு கடமையாற்றுகின்ற ஆளணியினரின் வினைத்திறனான சேவை மூலம் இம்மாவட்டத்தின் தேவைகளினை நிறைவேற்றுவதற்கு முடியும் என நம்பிக்கை வெளியிட்டார். இவர் நிந்தவூர் அல் அஷ்ரக் தேசிய பாடசாலையின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிராமிய வீதிகள் புனரமைப்பு

(மூதூர் தினகரன் நிருபர்)

அரசின் ஒரு இலட்சம் கிலோ மீற்றர் வீதி புனரமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ், மூதூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட நகர் மற்றும் கிராமிய மட்டத்தில் காணப்படும் பல வீதிக்களுக்கான புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் அரசினால் பிரதேச மட்டத்தில் வாழும் மக்களுக்கான அத்தியாவசிய போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதியினை விரிவுபடுத்தி கொடுக்கும் நோக்குடன் பல்வேறு கிராமங்களிலுமாக, பெரிதும் சேதமடைந்த இவ்வீதிகள் புனரமைக்கப்படவுள்ளதுடன், சில வீதிகள் காபட் வீதிகளாகவும் புனரமைக்கப்படவுள்ளன.

## அட்டாளைச்சேனையிலுள்ள பள்ளிவாசல்கள் தலைவர்களுக்கு கொரோனா விழிப்புணர்வு





(ஒலுவில் கிழக்கு தினகரன், பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்கள்)

கொவிட் 19 மூன்றாவது அலையின் வீரியம் தொடர்பில் அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகப்பிரிவிலுள்ள பள்ளிவாசல்களின் தலைவர்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு செவ்வாய்க்கிழமை (04) அட்டாளைச்சேனை ஜும்ஆப் பள்ளிவாசல் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனைப் பிரதேச செயலக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச்.எம். றிபாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ,அட்டாளைச்சேனைப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ். அகிலன் கலந்து கொண்டு கொவிட் 19 பற்றியும் அதன் வீரியம், காற்றில் பரவும் தன்மை பொதுமக்கள் முக கவசம் அணிவதன் அவசியம் மற்றும் சமூக இடைவெளி தொடர்பிலும் பள்ளிவாசல்களில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பற்றியும் கடைகளில் பொருட்கள் கொள்வனவின் போது பொதுமக்கள் பின்பற்ற வேண்டிய கடப்பாடுகள் பற்றியும் பல்வேறு விளக்கங்களை முன்வைத்தார்.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களை பள்ளிவாசல்கள் கடைப்பிடிப்பதுடன் பொதுமக்களைப் பாதுகாப்பதற்கு பள்ளிவாசல்களின் ஒலி பெருக்கி ஊடாக அறிவுத்தல்களை வழங்குமாறும் அட்டாளைச்சேனைப் பிரதேச செயலக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச்.எம்.றிபாஸ் தலைமை உரையின்போது தெரிவித்தார்.

இச்செயலமர்வில் அட்டாளைச்சேனை ஜும்ஆப்பாள்ளிவாசல் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ்.எம். ஜுனைத்தீன், அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் பிரதம பொதுசுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம்.சலீம் உட்பட ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனைப் பள்ளிவாசல்களின் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

## கல்முனையில் சுகாதார நடைமுறைகளை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கல்முனை விசேட,பெரியநீலாவணை விசேட நிருபர்கள்)



கல்முனை மாநகர சபை எல்லையினுள் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மிக இறுக்கமாக அமுல்படுத்துவதற்கு மாநகர கொவிட்19 தடுப்பு செயலணி தீர்மானித்துள்ளது.

கொரோனா கட்டுப்பாடு நடவடிக்கைகளுக்கு ஒத்துழையாமல், பொது இடங்களில் சுகாதார நடைமுறைகளை அலட்சியம் செய்வோரைக் கைது செய்து, சட்ட நடவடிக்கை எடுப்பதெனவும் அச்செயலணி தீர்மானித்துள்ளது.

கல்முனை மாநகர கொவிட்19 தடுப்பு செயலணிக் கூட்டம் மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் தலைமையில் திங்கட்கிழமை (03) நடைபெற்ற போதே இத்தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக்கூட்டத்தில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன், பிராந்திய கட்டளைத் தளபதி பிரிகேடியர் சானக விஜயரட்ன, கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.எச்.சுஜித் பிரியந்த, கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, பிராந்திய தொற்றுநோய் தடுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் என்.ரமேஷ், இராணுவ அதிகாரிகள், பள்ளிவாசல்கள் சம்மேளனம் மற்றும் வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் பங்கேற்றிருந்தனர். தற்போது றமழான் நோன்புப் பெருநாள் வியாபாரம் களைக்கட்டியுள்ள நிலையில் புடவைக் கடைகளில் சனநெரிசலைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலும் அங்கு சுகாதார நடைமுறைகளை கண்டிப்பாக அமுல்படுத்துவது தொடர்பிலும் இதன்போது கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

## அதிக சனக்கூட்டம் காணப்படும் வர்த்தக நிலையங்களுக்கு சீல்

### காத்தான்குடி சுகாதார அதிகாரிகள்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடி பிரதான வீதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் புடவைக் கடைகளில் புதிய ஆடைகள் மற்றும் பொருட்கள் கொள்வனவுக்காக சனக் கூட்டம் காணப்பட்டால், அந்த வர்த்தக நிலையம் உடனடியாக மூடப்பட்டு கடைக்கு சீல் வைக்கப்படுமென காத்தான்குடி சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நோன்புப் பெருநாள் காலம் என்பதால் புடவைக் கடைகள் உட்பட சில வர்த்தக நிலையங்களில் பொருட்கள் மற்றும் புதிய ஆடைகளை கொள்வனவு செய்வதற்கு அதிகமானோர் ஒன்று சேர்வதை தடுக்கும் பொருட்டு சுகாதார அதிகாரிகள் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

காத்தான்குடி பிரதான வீதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் புடவைக் கடைகளில் பொருட்கள் மற்றும் புதிய ஆடைகளை கொள்வனவு செய்வதற்கு சனக் கூட்டம் காணப்பட்டால் அந்த வர்த்தக நிலையம் உடனடியாக மூடப்பட்டு, கடைக்கு சீல வைக்கப்;படுவதுடன் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனை காத்தான்குடி சுகாதார அலுவலக வாகனத்தில் ஒலி பெருக்கி மூலம் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அறிவித்துள்ளனர்.

இவ்வாறு காணப்படும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் அங்கு கடமையாற்றும் ஊழியர்களுக்கும் பி.சி.ஆர். மற்றும் அண்டிஜன் பரிசோதனைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

நாட்டில் கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் பொருட்டு இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்படுவதாகவும் சுகாதார அதிகாரிகள் மேலும் குறிப்பிட்டனர்.

## மூதூரில் கொவிட் விழிப்புணர்வு மேற்பார்வை

தோப்பூர் குறுப் நிருபர்



மூதூர் நகரத்தில் அமைந்துள்ளள கடைத்தொகுதிகளுக்கு பொருட்களை கொள்வனவு செய்ய வருவோரின் சுகாதார நடைமுறைகளை மேற்பார்வை செய்யும் செயற்றிட்டம், பொது சுகாதார பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்டது.

அதிகமாக மக்கள் ஒன்றுகூடும் வர்த்தக நிலையங்களில் வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோர் கொவிட் பரவல் பாதுகாப்பு சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவது தொடர்பாகவும் மேற்பார்வை மேற் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

கொவிட் 19 தொடர்பான சட்ட திட்டங்கள் மற்றும் சுகாதார நடமுறைகளை இறுக்கமாக பின்பற்றி செயற்படும் படி மக்களுக்கும் மற்றும் வர்த்தகர்களுக்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. நுகர்வோருக்கு பின்வரும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

முக கவசம் அணிதல், குழந்தைகளை அழைத்து வருவதை தவிர்த்தல், சமூக இடைவெளி பேணலை அதிகப்படுத்தல், உள்நுழையும் போதும் வெளியேறும் போதும் கைகளை சுத்தப்படுத்தல் போன்ற அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## சீனக்குடாவில் பாரிய மர கடத்தல் முறியடிப்பு

திருமலை மாவட்ட விசேட, தம்பலகாமம் நிருபர்கள்

திருகோணமலை சீனக்குடா பொலிஸ் பிரிவில் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து கப்பற் துறை மற்றும் முத்து நகர் பகுதியில் பாரிய மரக் கடத்தல் ஒன்று செவ்வாய்க்கிழமை (04) காலை பொலிஸாரினால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இரண்டு படகுகளில் மற்றும் மூன்று மாட்டு. வண்டிகளிலும் கருங்காலி மற்றும் தேக்கு மரங்கள் 30க்கும் மேற்பட்ட 10 அடி நீளமான மரக்குற்றிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன் போது சந்தேக நபர்கள் தப்பி ஓடி உள்ளதாகவும் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் மூன்று மாட்டு வண்டிகளையும் இரண்டு படகுகளையும் 30க்கும் மேற்பட்ட மர குற்றிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட இம் மரக் குற்றிகள் சீனக்குடா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கின் குரல்



# கல்முனை பிராந்தியத்தில் கொரோனா தொற்று பரவாமல் தடுக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

### கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(பெரியநீலாவணை விசேட நிருபர்)



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் ஏற்பாடு செய்த கொரோனா மூன்றாம் அலையை கட்டுப்படுத்தல் தொடர்பாக திணைக்கள தலைவர்களுக்கிடையிலான விசேட உயர் மட்ட கலந்துரையாடல் ஒன்று செவ்வாய்க்கிழமை (04) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர். சுகுணன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் அவர் உரையாற்றும் போது,

கொரோனா மூன்றாம் அலையின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. கல்முனை பிராந்தியத்திற்குள் இந்த தொற்றுநோய் பரவாமல் தடுப்பதற்கு சகல திணைக்களத் தலைவர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தற்போது ரமழான் பெருநாள் காலமாக இருப்பதால் பொதுமக்கள் ஒன்று கூடுவது அதிகமாக உள்ளது. இதனால் சுகாதார சட்ட விதிமுறைகளை கடைப்பிடிப்பது அவசியமாகும்.

குறிப்பாக முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளியை பேணுவது, கைகளை சுத்தமாக கழுவுவது போன்ற அடிப்படை விடயங்களை கடைப்பிடிப்பது முக்கியமாகும்.

கல்முனை பிராந்தியத்தில் மூன்றாம் அலையின் தாக்கம் இல்லாவிட்டாலும் அம்பாறை, மொன்றாகலை, திருகோணமலை போன்ற பிரதேசங்களில் இதன் அலை வேகமாக உள்ளது. அரசியல் பிரதிநிதிகள், சுகாதார தரப்பினர்களின் அறிவுறுத்தல்களை உதாசீனம் செய்யாமல் இந்த நோயின் தாக்கத்தை உணர்ந்தவர்களாக செயற்பட வேண்டும்.

பொதுமக்களுக்கு எவ்வளவு விழிப்புணர்வை வழங்க முடியுமோ அவ்வளவுக்கு அதனை வழங்க வேண்டும்.

நிகழ்வின் இறுதியில் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகள் பற்றி திணைக்கள தலைவர்களுடன் விரிவான கலந்துரையாடல் நடைபெற்றதுடன் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தொற்று அதிகமாக பரவி வரும் பிரதேசங்களுக்கு சென்று வருபவர்கள் குறித்து இங்கு அதிகம் கவனம் செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய தொற்றுநோய் தடுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் என்.ரமேஸ், கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.எச். சுஜித் பிரியந்த, பிரதேசங்களுக்கு பொறுப்பான பொதுச் சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், இராணுவ கட்டளை அதிகாரி, கடற்படை அதிகாரிகள் என திணைக்களங்களின் தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தின் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தில் கடமைபுரியும் ஊழியர்களுக்கு செவ்வாய்க்கிழமை (04) எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனையில் 12 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருப்படிருப்பது உறுதிப்படுத்தப்பட்டதாக களுவாஞ்சிகுடி பிராந்திய சுகாதாரப் பணிமனை தெரிவித்துள்ளது.

இதனையடுத்து நேற்று புதன்கிழமை தொடக்கம் பிரதேச செயலகத்தின் அனைத்து சேவைப்பிரிவுகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

களுவாஞ்சிகுடி பிராந்திய சுகாதாரப் பணிமனைக்குட்பட்ட கிராமங்களில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்பாட்டில் பிராந்திய சுகாதாரப் பணிமனையினால் பல்வேறு விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய செவ்வாய்க்கிழமை மாலை பிரதேச செயலகத்தில் கடமைபுரியும் ஊழியர்கள் 93 பேருக்கு அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 12 ஊழியர்கள் கொரோனா தொற்றக்குள்ளாகியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து சுகாதாரப்பரிவினர் பிரதேச செயலகத்தின் செயற்பாடுகளை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# நிந்தவூரில் இரு மாணவிகள் மாவட்ட ரீதியில் முதலிடம்

(நிந்தவூர் குறூப் நிருபர்)

வெளியாகியுள்ள உயர்தர பரீட்சை முடிவுகளின் படி, உயிர் முறைமைகள் தொழிநுட்ப பிரிவில் நிந்தவூரைச் சேர்ந்த இரு மாணவிகள் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இதில், நிந்தவூர் கமு/அல்அஷ்ரக் தேசிய பாடசாலையில் கல்வி பயின்ற முஹம்மது சரீப் பாத்திமா சிமாஹா, உயிர் முறைமைகள் தொழிநுட்ப பிரிவில் (புதிய பாடத்திட்டம்) மாவட்டத்தில் முதல் இடத்தையும், அகில இலங்கை ரீதியில் 73ம் இடத்தையும் பெற்றுள்ளார். அத்துடன், அதே பாடசாலையைச் சேர்ந்த அப்துல்லாஹ் பாத்திமா அஸ்றா, உயிர் முறைமைகள் தொழிநுட்ப பிரிவில் (பழைய பாடத்திட்டம்) மாவட்டத்தில் முதல் இடத்தையும், அகில இலங்கை ரீதியில் 6வது இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

# நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறிய 56 வர்த்தகர்களுக்கு அபராதம்

### அம்பாறை மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் கே.எம்.ஏ. றிஸ்லி

(ஒலுவில் விசேட நிருபர்)



அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஏப்ரல் மாதம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த 56 வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் 02 இலட்சத்தி 49 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் கே.எம்.ஏ. றிஸ்லி தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதல் விலைக்கு அத்தியாவசியப் பொருட்களை விற்பனை செய்வதாக நுகர்வோரால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம்.சாலிய பண்டார தலைமையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புகளை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மேற்கொண்டதாக தெரிவித்தார்.

இத் திடீர் சுற்றிவளைப்பின் போது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட 82 வர்த்தகர்களுக்கெதிராக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்டத்திற்கமைய நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு இதில் 56 வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் 02 இலட்சத்தி 49 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அத்தியவசியப் பொருட்களின் கட்டுப்பாட்டு விலையை விட கூடுதல் விலைக்கு விற்பனை செய்பவர்கள், எதிர்காலத்தில் பாவனையாளர் அலுவலகல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்களால் திடீர் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளவுள்ளதாகவும், மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் கே.எம்.ஏ. றிஸ்லி மேலும் தெரிவித்தார்.



இரண்டாம்கட்ட கொவிட்19 தடுப்பூசி மருந்து ஏற்றல் நிகழ்வு மட்டக்களப்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் மட்டக்களப்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி இ.உதயகுமார் தலைமையில் இடம்பெற்ற போது.

படம்: நிந்தவூர் தினகரன் நிருபர்

# துறைநீலாவணை மகா வித்தியாலய மாணவி தெரிவு

(மணல்சேனை நிருபர்)

வெளியான உயர்தரப் பெறுபேற்றின் அடிப்படையில் துறைநீலாவணை மகாவித்தியாலய மாணவி தங்கவேல் மிதுசாளினி வைத்தியத்துறைக்கு தெரிவுசெய்யப்பட்டு சாதனைபடைத்துள்ளதாக அதிபர் ரி.ஈஸ்வரன் மற்றும் பிரதி அதிபர் எஸ். செல்வம் ஆகியோர் தெரிவித்தனர்.

இவர் 2 ஏ, பி சித்தியும் பெற்று மாவட்ட மட்டத்தில் 14 ஆவது நிலையினை பெற்று சாதனை படைத்துள்ளார். அதேவேளை கலைத்துறையில் இருந்தும் அதிகமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். சித்தியடைந்த மாணவிகளுக்கு அதிபர், ஆசிரியர்கள், பழையமாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

# பெரியநீலாவணை வீ.சி வீதி காபட் வீதியாக அபிவிருத்தி

(பெரியநீலாவணை விசேட நிருபர்)



பெரியநீலாவணை – மருதமுனை ஆகிய தமிழ் ,முஸ்லிம் மக்களை இணைக்கும் வீ.சி. வீதி கிராமத்தின் முதன்மை வீதிகளாகும். எனினும் மிக நீண்டகாலமாக குண்டும் குழியுமாக புனரமைப்பு செய்யப்படாமல் மழை காலங்களில் நீரில் மூழ்கிக் காணப்பட்டன. வாகனங்களில் பயணம் செய்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர்.

இந்த நிலையில் ஜனாதிபதியின் ஒரு இலட்சம் கிலோமீட்டர் உள்ளூர் வீதிகளை நவீன காபட் வீதிகளாக அபிவிருத்தி செய்யும் வேலை திட்டத்தின் கீழ், மருதமுனை கடற்கரை பிரதான வீதி 2.05 கிலோ மீற்றர் தூரத்திற்கும் பெரியநீலாவணை வீ.சி. வீதி ஒரு கிலோ மீற்றர் துரத்திற்கும் என தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றுநோய் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் காபட் வீதியாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளமைக்கு மக்கள் தமது பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர்.

# தோப்பூர் மாணவி முதலிடம்

தோப்பூர் குறூப் நிருபர்

வெளியாகிய க.பொ.த உயர்தரப் பெறுபேற்றின் அடிப்படையில் தோப்பூர் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவி முஹம்மட் தஸ்லீம் பாத்திமா சிஹானா கலைத்துறையில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதாக கல்லூரி முதல்வர் ஏ.பி. அப்துல் ஜப்பார் தெரிவித்தார்.

குடும்ப பொருளாதார நிலை காரணமாக உயர்தரத்தில் ஏனைய துறைகளில் கற்க முடியாமல் கலைத்துறையை தோப்பூர் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் கற்று மாவட்ட மட்டத்தில் முதல் நிலையைப் பெற்று சாதனை நிலைநாட்டியமை குறிப்பிடத்தக்கதாகும். இவர் முகம்மட் தஸ்லீம், தஸ்லீம் மஜீனா தம்பதிகளின் அன்பு புதல்வி என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# மாவட்ட மட்டத்தில் முதலிடம்

தம்பலகாமம் நிருபர்

வெளியான க.பொ.த. உயர்தரம் 2020 பரீட்சை முடிவில் திருகோணமலை ஶ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி மாணவி குமணன் செந்தூரணி உயிரியல் பிரிவில் 3 'ஏ' சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

அத்துடன் உவர்மலை விவேகானந்தா கல்லூரி மாணவன் சித்திர வேலாயுதம் மிதுசாந் கணித பிரிவில் 4 'ஏ' சித்தி பெற்று மாவட்டத்தில் முதல் நிலையை அடைந்துள்ளார்.

# கிண்ணியா பிரதேசத்திலுள்ள கடைகளை மூட தீர்மானம்

கிண்ணியா மத்திய நிருபர்

கிண்ணியா பிரதேசத்தில் உள்ள அனைத்து அத்தியவசியமற்ற கடைகளையும் காலவரையறை இன்றி மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனை நடைமுறைப்படுத்துவதற்கு கிண்ணியா கொரோனா கட்டுப்பாட்டு குழுவினர் நேற்று (5) பிரதேச செயலாளர் தலைமையில் வீதிதோறும் சென்று கடைகளை மூடும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். கிண்ணியா சுகாதார பிரிவில் கடந்த சில தினங்களாக அதிகரித்து வரும் கொரோனா தொடர்பாக நிலைமையை ஆராய்ந்து, திருகோணமலை மாவட்ட செயலாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய உணவு, மருந்து கடைகளைத் தவிர, அனைத்து கடைகளையும் காலவரையறை இன்றி மூடுவதற்கு தீர்மானித்ததாக பிரதேச செயலாளர் முகம்மது கனி தெரிவித்தார்.

# கல்முனை ஸாஹிறா மாணவன் சாதனை

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

வெளியிடப்பட்ட கல்விப் பொதுத்தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் பிரகாரம் கல்முனை ஸாஹிறாக் கல்லூரி தேசிய பாடசாலையைச் சேர்ந்த இப்றாஹீம் அன்பாஸ் அஹமட் உயிரியல் பிரிவில் தேசிய ரீதியில் மூன்றாம் இடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இவர் மாவட்ட மட்டநிலையில் முதலாவதாகவும் தேசியமட்டநிலையில் மூன்றாவதாகவும் உள்ளார். மூன்று பாடங்களிலும் மூன்று 'ஏ' சித்தி பெற்றமையே இந்நிலையை அடையக் காரணமாகியுள்ளது.இவர் சிரேஷ்ட வைத்தியர் எம் ரீ.இப்றாஹீமின் கனிஷ்ட புதல்வரென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# அம்பாறை பிராந்தியத்தில் தெஹியத்தக் கண்டிய, உகன பிரிவுகளில் 344 தொற்றாளர்கள் அடையாளம்

### தெஹியத்தக்கண்டிய பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி

(அம்பாறை மத்திய குறூப் நிருபர்)

தெஹியத்தக்கண்டிய சுகாதாரப் பிரிவில் ஆடைத்தொழிற்சாலையுடன் தொடர்புபட்ட 240 தொற்றாளர்கள் நேற்று நண்பகல் 12 மணி வரையான காலப்பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெஹியத்தக்கண்டிய பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர். சனித் வெற்றியாராச்சி தெரிவித்தார்.

அத்துடன் ஆடை தொழிற்சாலையுடன் தொடர்புபடாத தெஹியத்தக்கண்டிய பிரதேசத்தை வதிவிடமாகக் கொண்ட 160 பேர் இவர்களுள் அடங்குவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் இந்த நிலை நீடிக்குமானால் மேலும் பல கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும் எனவும் கூறினார்.

அத்துடன் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இப்பிரதேசத்தில் கதிராபுர மற்றும் தெஹியத்தக் கண்டிய நகர் பகுதி கிராமசேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டமையும் குறிப்படத்தக்கது.

அத்துடன் இப்பிரதேசத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள சுமார் 1178 குடும்பங்களுக்கான உலர் உணவு பொருட்களும் இதுவரையில் வழங்கப்பட்டுள்ளதாக தெஹியத்தக்கண்டிய பிரதேச செயலாளர் பிரியங்கா வீரசிங்க தெரிவித்தார். உகன சுகாதார பிரிவிலும் நேற்று நண்பகல் வரையான காலப்பகுதியில் 104 பேர் இனங்காணப்பட்டு அவர்கள் சிகிச்சை நிலையங்களில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த தொற்று நிலையை அடுத்து உகன பிரதேசத்தில் குமாரிகம கிராமசேவகர் பிரிவும் தனிமைப் படுத்தப்பட்டுள்ளதாகவும் உகன பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எல்.என். லியனகே தெரிவித்தார்.

மேலும் அம்பாறை சுகாதார பிராந்தியத்தின் தெஹியத்தக்கண்டியவில் 240 பேரும், உகன பிரதேசத்தில் 104 பேரும் என தொற்று அதிகளவு அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களாக மாறியுள்ளன.

# நகர்வலம்



# காட்டு யானைகள் முகாமைத்துவ வலயம் சட்டபூர்வ வர்த்தமானியாக வெளியிடப்படும்

ஹம்பாந்தோட்டைகுறூப் நிருபர்

ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள காட்டு யானைகள் முகாமைத்துவ வலயம் தற்பொழுது சட்டபூர்வமாக வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்பட்டுள்ளதாக இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்க்ஷ தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டை மாவட்ட காட்டு யானைகள் முகாமைத்துவ காட்டு வலயத்தை வர்த்மனை அறிவித்தலாக வெளியிடுமாறு கோரி சூரியவெள,வல்சபுகளை பிரதேசத்தில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளை நேற்று முன்தினம் (04) அமைச்சர் சந்தித்தார்.

ஹம்பாந்தோட்டை மாவட்ட ருஹூனு நிர்வாகக் கட்டிடத் தொகுதியில் இடம்பெற்ற இச்சந்திப்பில் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு பேசிய அமைச்சர்:கடந்த பல வருடங்களாக இக்காட்டுப் பகுதியை வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடுவதாக பலர் தெரிவித்தனர்.எனினும் எவரும் இதை வெளியிடவில்லை. ஆனாலும் நாம் அதனை தற்பொழுது செய்து காட்டியுள்ளோம். நியிமிக்கப்படவுள்ள குழுவினூடாக வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்பட்டுள்ள காட்டுவலயத்தில் காணி முகாமைத்துவம் மற்றும் யானைகளுக்கு வேலி அமைத்தல் என்பன மேற் கொள்ளப்படவுள்ளன.



விசேடமாக இக் குழுவின் செயற்பாடுகளில் விவசாயிகள் சங்க உறுப்பினர்களும் பங்கேற்க வேண்டும். இவ்வாறு இடம் பெறாவிட்டால் இதனை நடைமுறைபடுத்தும் போது மீண்டும் பிரச்சினைகள் ஏற்படும்.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதமளவில், இந்தவேலைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்பட்டுள்ள பிரதேசங்களில், யானை நுழைவுப் பிரதேசங்கள் உள்ளடங்க தடைவிதிக்கப்பட்டுள்ளது. இவற்றை நாம் மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பரம்பரை விவசாயிகளை பாதுகாப்பதே எமது நோக்கம். நாம் முன்னெடுக்கும் இத்திட்டத்தினூடாக அபிவிருத்திகளும் இடம்பெற வேண்டும். இத்திட்டத்தால், யானைகள் பாதுகாக்கப்படும் அதேவேளை, சுற்றாடலுக்கும் பாதிப்புக்கள் ஏற்படக் கூடாது.

இவ்வாறானதொரு திட்டத்தையே நாம் தயாரித்து வழங்குவோம். மரங்கள் இல்லாத காட்டுப் பிரதேசங்களில், மர நடுகை திட்டமொன்றும் முன்னெடுக்க ப்படும். காடுகளை வளப்படுத்துவதே, தமது நோக்கம் எனவும் அவர் தெரிவித்தார்.

## ஹொரணை மில்கந்த தமிழ் மகாவித்தியாலய

# கலைப்பிரிவில் தோன்றிய சகலரும் சித்தி

களுத்துறை சுழற்சி நிருபர்

களுத்துறை மாவட்ட ஹொரணை கல்வி வலயத்தில் மிகவும் பின்தங்கிய மில்லகந்த தமிழ் மகா வித்தியாலயத்தில்,

கலைப்பிரிவில் பரீட்சை எழுதிய சகலரும் சித்தியடைந்து உள்ளனர்.இவர்கள்,கடந்த 2020ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தர பரீட்சையில் கலைப் பிரிவில் தோற்றியிருந்தனர்.

இப்பிரிவிரில் தோன்றிய 12 மாணவர்களில் ஆறு மாணவிகள் பல்கலைக்கழகம் செல்வதற்கான தகைமைகளைப் பெற்றுள்ளதாக பாடசாலையின் அதிபர் கே.எஸ். கணேசன் தெரிவித்தார்.

இதேவேளை ஹொரணை கல்வி வலயத்திற்குட்பட்ட ஹல்வத்துர தமிழ் மகா வித்தியாலயத்தில் கலைப் பிரிவில் தோன்றிய 21 மாணவர்களில் 18 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் ரஞ்சித்குமார் தேஷான் மஹேலகுமார் என்ற மாணவன் 3 ஏ சித்திகளுடனும் மேலும் இருவர் உட்பட மூவர் பல்கலைக்கழகத்திற்கும் தெரிவாகியுள்ளதாகவும் அதிபர் எம். சந்திரமோகன் தெரிவித்தார்.

# வறிய குடும்பங்களுக்கு நீர் இணைப்பை வழங்க நிதி

புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளத்திலுள்ள 11 வறிய குடும்பங்கள் நீர் இணைப்பைப் பெறுவதற்கு,புத்தளம் மாவட்ட வை.எம்.எம்.ஏ.நிறுவனம் முன்வந்துள்ளது.

புத்தளம் முஹியத்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட வை.எம்.எம்.ஏ நிறுவனம் இதற்கு முன்வந்துள்ளது. வை.எம்.எம்.ஏ. புத்தளம் மாவட்ட பணிப்பாளர் முஜாஹித் நிஸாரின் ஏற்பாட்டில், இதற்காக வை.எம்.எம்.ஏ. நிறுவனம் நிதி வழங்கியுள்ளது.

இதற்கமைய தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு செலுத்திய தொகையின் பற்றுச் சீட்டுக்களை பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்வு புத்தளம் பெரிய



பள்ளவைாசலில் கடந்த (04) செவ்வாயன்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பெரிய பள்ளி நிர்வாகிகளான ஏ.எம்.பஸால், எம். அம்ஹர் மற்றும் வை.எம்.எம்.ஏ. பிரதிநிதிகளான எஸ்.ஆர்.எம். முஹ்ஸி, எம்.டீ.எம்.நபீல் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# வீதிகளில் செல்லும் பெண்களின் நகைகளை அபகரித்த கும்பல் கைது

புத்தளம் விசேட நிருபர்

வீதிகளில் பயணிக்கும் பெண்களின் தங்க நகைகளைக் கொள்ளையிட்டு தப்பிச் செல்லும் இருவர், தும்மலசூரிய பொலிஸ் நிலைய புலனாய்வு பிரிவினரால் உடுபத்தாவ கரவுல்ல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்து கரவுல்ல பிரதேசத்தில் பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியைப் பறித்துக் கொண்டு தப்பிச் சென்ற இவர்களையே,பொலிஸார் கைது செய்தனர்.

இச்சந்தேக நபர்கள், கடந்த சில காலமாக பல பகுதிகளுக்குச் சென்று வீதிகளில் பயணிக்கும் பெண்களின் தங்கச் சங்கிலிகளை கொள்ளையிடும் சம்பவங்களில் ஈடுபட்டு வந்துள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கிரிவுல்ல, மாராவில, வென்னப்புவ, தும்மலசூரிய, கொஸ்வத்தை போன்ற பிரதேசங்களிலும் கொள்ளைச் சம்பவங்களில் இவர்கள் ஈடுபட்டுள்ளதாக தும்மலசூரிய பொலிஸ் நிலைய குற்றப் பிரிவின் பொறுப்பதிகாரி தெரிவித்தார். வீடுகளுக்குச் சென்று பெண்களிடம் குடிப்பதற்கு நீர் கேட்டுவிட்டு,அச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியே இக்கொள்ளைகளில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கொள்ளையிடப்படும் தங்க சங்கிலிகளை குறைந்த விலையில் நகைக் கடைகளில் விற்பனை செய்தல், தனியார் வங்கிகளில் அடகு வைத்தல் போன்ற வேலைகளிலும் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்.இலக்கத் தகடுகள் மாற்றப்பட்ட மோட்டார் சைக்கிள்களையே இவர்கள் இக் கொள்ளைகளுக்கு

பயன்படுத்தியுள்ளனர். இவ்வாறு கொள்ளையிடப்பட்ட பல நகைகளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அநுராதபுர பிரதேசத்தில் சுற்றிவளைப்பு ஹெரோயினுடன் மூன்று பேர் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

அநுராதபுரம் பொலிஸ் பிரிவின் இரு வெவ்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், ஹெரோயின் போதைப் பொருட்களை வைத்திருந்த சந்தேக நபர்கள் மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அநுராதபுரம் மைலகஸ் சந்தி மற்றும் சிராவஸ்திபுர பகுதியில் நடாத்தப்பட்ட சுற்றிவளைப்பிலே இவர்கள் கைதாகினர். கடந்த (03) திங்கட்கிழமை இந்தச் சுற்றிவளைப்பு நடத்தப்பட்டது.

இவர்களிடமிருந்து, 4 கிராம் ஹெரோயினையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.கைது செய்யப்பட்டவர்கள் 22,40,26 வயதுடைய அநுராதபுரம் சிராவஸ்திபுர மற்றும் மைலகஸ் சந்தி அநுராதபுரம் பகுதியை வசிப்பிடமாக கொண்டவர்களாவர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை, அநுராதபுரம் வலய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பேருவளை மஸ்ஸல்ல ராவியா பள்ளிவாசல் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வு,கொழும்பு பெரியபள்ளிவாசல் பிரதான கதீப், கலீபதுல் குலபா அப்துல் ஹமீத் (பஹ்ஜி) தலைமையில் நடைபெற்றது. இங்கு அவர் பிரதான சொற்பொழிவாற்றுவதை படத்தில் காணலாம். படம்: பேருவளை விஷேட நிருபர்

# சிறு நீரக சிகிச்சைக்கு உதவி கோரும் பாத்திமா சப்னா

பேருவளை விஷேட நிருபர்)

பேருவளை அம்பேபிட்டியபடல்வத்தையில் வசிக்கும் முஹம்மத் நவாஸின் மகளான 23 வயதுடைய பாத்திமா சப்னா சிறுநீரகநோயினால் பாதிக்கப்பட்டு காலி கராப்பிபட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார். இவரது இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

மிகவும் வறிய குடும்பத்தைச் சேர்ந்த இவர், சிகிச்சைக்காக பரோபகாரிகளின் உதவியையும் நாடி நிற்கிறார். சிறுநீரக மாற்று சிகிச்சை செய்வதற்கு "ஓ" நெகடிவ் அல்லது ஓ பொசிடிவ் சிறுநீரகம் தேவைப்படுகிறது. 30 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்ட எவரும் இதைத் தானம் செய்ய முடியும். சிறுநீரக தானம் செய்ய விரும்புவோர், கீழ் காணும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். தொலைபேசி: 0777 640690 – 077 4180542 – 077 0397353 நிதி உதவி செய்யவிரும்புவர், 8220902298 என்ற இலக்கத்துக்கு பேருவளை கொமர்ஷல் வங்கி கிளையில் வைப்பிலிட முடியும்.

# கொவிட் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்க அநுராதபுரம் மாவட்டத்தில் புதிய நிலையங்கள்

அநுராதபுரம் தினகரன் நிருபர்

கொவிட் 19 தொற்று நோயினால் பாதிக்கப்படுவோருக்கு சிகிச்சை வழங்குவதற்காக, அநுராதபுரம் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நான்கு சிகிச்சை நிலையங்களிலும் நோயாளர்கள் நிரம்பிவழியும் நிலை ஏற்பட்டுள்ளதாக மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆரியரத்ன தெரிவித்தார்.அநுராதபுரம் மாவட்டத்தில் மெத்சிரி செவன சிறுநீரக விசேட வைத்திய சாலை மற்றும் கெப்பித்திகொள்ளாவ, நொச்சியாகம.கலன்பிந்துனுவெவ உள்ளிட்ட வைத்தியசாலைகளிலுள்ள கொரோனா நோய் சிகிச்சை பிரிவுகளிலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.இந்த

அதிகரிப்பு பண்டிகைக் காலத்தின் பின்னரே ஏற்பட்டுள்ளது.

இந்நிலமையை கருத்திற் கொண்டு மாவட்டத்தில் மேலும் பல சிகிச்சை பிரிவுகளை நிர்மாணிக்க சுகாதார தரப்பினர் தீர்மானித்துள்ளனர்.அதற்கமைவாக அநுராதபுரம் மாவட்டத்தின் பிரதேச வைத்தியசாலைகளான தந்திரிமலை மற்றும் தம்மன்னாவ வைத்திய சாலைகள் தேர்தெடுக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக ரம்பாவ வஹமல் கொள்ளாவ பகுதியில் அமைந்துள்ள இலங்கை இராணுவத்திற்குச் சொந்தமான களஞ்சிய சாலையும் சிகிச்சை நிலையமாக மாற்றப்படவுள்ளது. இதற்கான ஆரம்பகட்ட பேச்சுவார்த்தைகள் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.இதற்கு இராணுவத்தினருடைய பூரண ஒத்துழைப்பு கிடைக்குமென தாம் நம்புவதாக அநுராதபுரம் மாவட்ட பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆரியரத்ன தெரிவித்தார்.

# முஸ்லிம் சிறைக்கைதிகள் குறித்த வை.எம்.எம்.ஏயின் மகஜருக்கு உரிய பலன்

மாவத்தகம தினகரன் நிருபர்

ரமழானில் முஸ்லிம் சிறைக்கைதிகளுக்கு சமயக் கடமைகளைச் செய்வதற்கு வசதி செய்யுமாறு கோரி அனுப்பிய மகஜருக்கு உரிய பலன் கிடைத்திருப்பதாக, அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவையின் தேசிய தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தெரிவித்துள்ளார். இது பற்றி அவர் தெரிவித்ததாவது:

சிறையிலுள்ள முஸ்லிம் கைதிகளுக்கு இந்த ஆண்டு கொரோனாக் காரணமாக தமது மதக் கடமைகளைச் சரிவரச் செய்வதற்கு உரிய வசதிகள் வழங்க மறுக்கப்பட்டன.

எனினும் இதற்கான வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு, சிறைக்கைதிகளின் பெற்றோர்கள் வை. எம். எம். ஏ பேரவைக்கு முறைப்பாடு முன்வைத்தனர்.இதையடுத்து நீதி அமைச்சர் அலி சப்ரி, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை மற்றும் உயர் அதிகாரிகளுக்கு, அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவை சுட்டிக்காட்டியிருந்தது. இதன்பலனாக, சிறைக்கைதிகளுக்கு வழமைபோன்று இம்முறையும் சமயக் கடமைகளில் ஈடுபட அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மேலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலிலுள்ள கைதிகளுக்கும் நோன்பு திறப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறும் கோரப்பட்டதற்கிணங்க இவர்களுக்கும் இந்த வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் வை.எம்.எம்.ஏ பேரவையின் தலைவர் தெரிவித்தார்.

# கொரோனா சிகிச்சைக்கு தென் மாகாணத்தில் மேலும் நான்கு வைத்தியசாலைகள் தயார்

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

தென் மாகாணத்தில் காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் கொவிட் 19 கொரோனா தொற்றுக்கு உள்ளாகும் நோயாளர்களின் தொகை நாளாந்தம்அதிகரிகரித்து வருவதால், மேலும் நான்கு வைத்தியசாலைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேடவைத்திய நிபுணர்டொக்டர் சந்திமசிரிதுங்க (05) தெரிவித்தார். ஏற்கனவே உள்ள வைத்திய சாலைகளுக்கும் மேலதிகமாக இந்த வைத்தியசாலைகள் தயார் படுத்தப்படவுள்ளன. காலிமாவட்டத்தில் பெந்தோட்டை மற்றும் ஹினிதும ஆகிய இரண்டு வைத்தியசாலைகளும்,மாத்தறை மாவட்டத்தில் ஹக்மனை,கங்கொடகம வைத்திய சாலைகளும் மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பலாந்தோட்டை வைத்தியசாலை என்பவையே மேலதிகமாகத் தயார் படுத்தப் படவுள்ளன.தற்பொழுது தென் மகாணத்தில் உள்ள ஏழு வைத்தியசாலைகளிலும் 1250 கொரோனா தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான வசதிகள் உள்ளன. இத்துடன் மேலும் புதிய நான்கு வைத்தியசாலைகளில் வசதிகளை ஏற்படுத்துவதால் 400 பேருக்கு சிகிச்சை பெறுவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

இத்தோடு இவற்றிற்கு மேலதிகமாக இராணுவத்தினரால் கொக்கல்லை பிரதசத்தில் நடாத்தப்பட்டு வரும் சிகிச்சை நிலையத்தில் மேலும் 150 பேருக்கு சிகிச்சை பெறுவதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. தேவை ஏற்படுமாக இருந்தால் அக்மீமனையிலுள்ள ருஹூனு கல்வியற் கல்லூரியையும் கொரோனா சிகிச்சை நிலையமாகப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உலக நீர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் வெற்றியீட்டியோருக்கு பரிசுகள்



உலக நீர் தினத்தை முன்னிட்டு தேசிய நீர் வளங்கள் வடிகாலமைப்புச் சபையின் மேற்கு தெற்கு ஆதார நிலையம் சித்திரப் போட்டியை ஏற்பாடு செய்திருந்தது.இதில் வெற்றியீட்டியோருக்கு பரிசில்கள் வழங்கும் வைபவம் அலுவலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. களுகங்கையை சூழவுள்ள மதுகமை மற்றும் ஹொரனை கல்வி வலையத்தில் உள்ள பாடசாலை மாணவர்களிடையே வட்ஸப் மூலம் இந்த சித்திரப்போட்டி நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தேசிய நீர்வளங்கள் வடிகாலமைப்புச் சபையின் உப தலைவர் சட்டத்தரணி நிமல் ஆர் ரணவக, பொது முகாமையாளர் திளினவிஜயதுங்க, ஆதார நிலைய பிரதிப்பொது முகாமையாளர் எம்.ரீ.எம் ராஸில் உட்பட சபையின் உயர் அதிகாரிகள் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். இதன் போது மாணவி ஒருவருக்கு பரிசு வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

படம்: பேருவளை விஷேட நிருபர்

# நவீன பாலின சமத்துவ நிறுவன கட்டமைப்பின் முன்னோடி JAT

மர பூச்சுகளின் உற்பத்திகளின் முன்னோடியாகத் திகழும் JAT Holdings, அதன் பாலின சமத்துவ தலைமைத்துவத்தை பேணும் பொருட்டு தனித்துவம் வாய்ந்த 3 பெண்கள் அதன் உயர் ஆற்றல்மிக்க பணிப்பாளர்கள் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முகாமைத்துவத் தீர்மானங்களின் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன், பணிப்பாளர் சபையின் கலப்பு பிரதிநிதித்துவம் பல்வேறு முன்னோக்குகள், சிந்தனைகள், நிபுணத்துவம் மற்றும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது ஆகியவற்றை சிறப்பாகக் கையாள்வதுடன், வர்த்தக உலகில் JAT Holdings நிறுவனத்தை திருப்புமுனையை ஏற்படுத்தும் முன்னோடியாக நிலைநிறுத்துகிறது.



இந்த முன்னுரிமையை தமது பணி இலக்காகக் கொண்டு, வைத்தியர் சிவா செல்லையா, (பணிப்பாளர் சபைத் தலைவர், JAT) மற்றும் ஈலியன் குணவர்த்தன, (முகாமைத்துவப் பணிப்பாளர், JAT) ஆகியோர் அதிகாரத்தில் பெண்கள் கொண்டுள்ள சிறப்பான அனுகூலம் தொடர்பில் ஏகோபித்த உறுதிப்பாட்டுடன் உள்ளனர். மேலும், ஒவ்வொரு நபரின் நிபுணத்துவத்தையும் பயன்படுத்திக் கொள்ளும் தளமேடை, அதிகாரம் மற்றும் படைப்பாற்றல் சுதந்திரம் ஆகியவற்றை அவர்களுக்கு வழங்குவதில், பெண்கள் சமத்துவத்துடன் தங்களது திறமைகளை நிரூபிப்பதற்கு இத்தீர்மானம் வழிவகுக்கும்.

நிறுவன / பிணையங்கள் சட்டத்துறையில் கிட்டத்தட்ட 40 ஆண்டுகால நிபுணத்துவத்துடன், இலங்கையின் உச்ச நீதிமன்றத்தின் வழக்கறிஞரான திருமதி பிரியந்தி பீரிஸ் தற்போது LOLC Finance PLC Associated Electrical Corporation Ltd மற்றும் MTN Corporate Consultants (Pvt) Ltd ஆகிய நிறுவனங்களின் பணிப்பாளர் சபை அங்கத்தவராகச் செயற்படுவதுடன், 2004 முதல் 2011 வரை நிதியமைச்சின் சட்ட ஆலோசகராக கடமையாற்றிய பழுத்த அனுபவத்தையும் கொண்டுள்ளார்.

# தங்கொட்டுவ போர்சலேன் தங்க விருதை சுவீகரிப்பு




இலங்கையின் முன்னணி போர்சலேன் தயாரிப்புகள் உற்பத்தியாளரான தங்கொட்டுவ போர்சலேன் பிஎல்சி, NCE ஏற்றுமதி விருதுகள் 2020 இல் செரமிக் மற்றும் போர்சலேன் தயாரிப்புகள் பாரிய உற்பத்தியாளர் பிரிவில் தங்க விருதை சுவீகரித்துள்ளது. இலங்கை தேசிய ஏற்றும்தியாளர் சம்மேளனத்தினால் (NCE) இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இலங்கையின் புகழை உலகெங்கும் பரவச் செய்வதில் 37 வருட கால வரலாற்றைக் கொண்டுள்ள தங்கொட்டுவ போர்சலேன், தொடர்ச்சியான இரண்டாவது வருடமாகவும் இந்த விருதை சுவீகரித்திருந்தமை விசேட அம்சமாகும்.

தங்கொட்டுவ போர்சலேன் பிஎல்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி சன்ன குணவர்தன கருத்துத் தெரிவிக்கையில், “இந்த விருதை மிகவும் பெருமையுடன் நாம் ஏற்றுக் கொள்கின்றோம். கொவிட்19 தொற்றுப் பரவல் காரணமாக சந்தைப் போக்குகள் அனைத்தும் பெரும் சவால்களுக்கு முகங்கொடுத்திருந்தன. குறிப்பாககூட்டாண்மைநிறுவனங்கள் தமது வியாபாரங்களை நிர்வகித்திருந்த முறையை மாற்றியமைக்க வேண்டிய நிலையை எதிர்கொண்டிருந்தன. நிறுவனம் எனும் வகையில் மீண்டெழுந் திறனைக் கொண்ட ஸ்தாபனமாக தங்கொட்டுவ போர்சலேன் திகழ்வதுடன், புறச் சூழலில் காணப்பட்ட மாற்றங்களை நேர்த்தியான முறையில் பின்பற்றக்கூடியதாக இருந்தது. எமது வினைத்திறன் வாய்ந்த அணிக்காகவும், இந்த நெருக்கடியான சூழலிலும் எமது ஊழியர்கள் மீண்டெழுந் திறன் கொண்டிருந்ததுடன், தமது குறிக்கோளில் உறுதியாக இருந்தமைக்காகவும் இந்த விருது அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.” என்றார்.

ஆசியா, ஐரோப்பா மற்றும் தெற்கு அரைக்கோளம், அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு இராஜ்ஜியம் ஆகிய பிராந்தியங்களில் நற்பெயரை தங்கொட்டுவ போர்சலேன் கொண்டுள்ளது. அதன் பிரகாரம் தனது வர்த்தக நாமங்களான Macy, Jashanmal, Country Road, CMT, Migross, Caskata, Kashida, Michael Wainwright, Witz, Nishita Design, Bergoff, Narumi, Porsgrund போன்றவற்றுக்கு சர்வதேச ரீதியில் வாடிக்கையாளர்களை தொடர்ச்சியாக பேணி வருகின்றது.

Singhe Hospitals PLC உடன் கைகோர்த்துள்ள

# Arogya Life Systems Lanka Private Limited




சப்ரகமுவாவில் சுகாதார சேவைகளை வழங்குவதில் முன்னணியில் உள்ள நிறுவனமும் 2019 இல் சிறந்த தொழில் முனைவோருமான Singhe Hospitals PLC, Arogya வழங்கும் பல்வேறு தொழில்நுட்ப தீர்வுகள் மூலம் தனது செயற்பாடுகளை திறம்பட மேற்கொள்வதற்காக Arogya Life Systems Lanka Private Limited உடன் கைகோர்த்துள்ளது.

இதனை முன்னெடுப்பதற்காக இரண்டு நிறுவனத்தின் நிர்வாக அதிகாரிகளும் அண்மையில் சந்திப்பொன்றினை நடத்தி உத்தியோகபூர்வமான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இதன் முதற்கட்டமாக வெளியக நோயாளர்கள் மற்றும் சேனலிங் பிரிவு செயற்படுத்தப்படும். அதனைத்தொடர்ந்து மேலும் பல பிரிவுகளும் வாடிக்கையாளர்களுக்கு இலத்திரன்யல் சுகாதாரசேவை உலகின் சிறந்த அனுபவத்தினை வழங்குவதற்காக செயற்படுத்தப்படும். இந்த புகைப்படத்தில் ஒப்பந்தத்தை பகிர்ந்துகொள்வோர் டாக்டர் டிலத் எஸ். ஷெயலத் மற்றும் நவிந்த வீரசிங்க.

# கொழும்பு பேஷன் வீக்கில் சர்வதேச திருமண தெரிவுகள்

## வாழ்வைக் கொண்டாடுகின்றார் பவுசுல் ஹமீட்



இலங்கையின் ஆண்கள் ஆடைகள் பேஷன் ஐகான் பவுசுல் ஹமீட் தனது கவர்ச்சிகரமான சர்வதேச திருமண தெரிவுகளை இலங்கையின் மிகவும் மதிப்பு மிக்க நிகழ்வான கொழும்பு பேஷன் வீக்கின் 2021ம் பதிப்பு 3 நாள் நிண்ட நிகழ்வாக ஷாங்க்ரிலா ஹோட்டலில் நடந்த போது வெளியிட்டார்,

சர்வதேச திருமண தெரிவுகள் வாழ்வைக் கொண்டாடுவதுடன் இலங்கையில் பல நூற்றான்டுகாலமாக இலங்கைக்குள் நிம்மதியாக வாழும் பணக்கார, பன்முகப் படுத்தப்பட்ட கலாச்சாரங்களால் ஈர்க்கப்பட்டது. இத் தெரிவுகள் இலங்கை, இந்திய, இந்தோமேற்கு, மேற்கு ஐரோப்பிய உடைகள் மற்றும் வெளிப்புற மற்றும் கடற்புற உடைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஆடம்பரமான திருமண ஆடைகளை உள்ளடக்கியது.

இத் தெரிவுகள் சிறந்த தரம், கைவினைத்திறன் மற்றும் கலையில் சிறந்து உயர் தர ஆபரணங்களுடன் தயாபடுத்தப்பட்டு மர்மமான தோற்றத்தை தீவிரப்படுத்தும். இக் கவர்ச்சிகரமான தெரிவுகள் சிறந்த கம்பளி, கைத்தெறி மற்றும் பட்டுத் துணிகளில் உருவாக்கப்பட்டது, அதே நேரத்தில் இயற்கையின் அற்புதம், கருப்பு, நீலம் மற்றும் வெள்ளை நிறங்கள் ஆகியவை மணமகன் தனது பெரிய நாளில் விஷேடமாக மற்றும் தனித்துவமாக தெரியும் வகையில் இத் தெரிவுகள் தயார்படுத்தப்பட்டுள்ளன.

நிகழ்வின் போது ஃபவுசுல் ஹமீட் மணமகனை மணமகளுக்கு ஏற்றவாரு தம்மை எவ்வாறு தயார்படுத்துவது என்பதை சிறப்பு உரையாடல் ஒன்றின் மூலம் தெரியப்படுத்தினார். திருமண நாளில் பாரம்பரியமாக மணப்பெண்ணுக்கே முன்னுரிமை அளிக்கப்படும், இதனால் அவர்களுக்கான சிறப்பு நாளில் அவர்கள் சிறப்பாக உணருவதை உறுதி செய்ய பெரும்பான்மையான நேரமும் கவனமும் செலவிடப்படுகின்றது. மணமகனும் இத்தினத்தில் பிரகாசிக்கும் நோக்கத்துடன் அதிகளவு அர்ப்பணிப்புடன் கடின உழைப்பையும் வழங்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்த இவ் விஷேட அமர்வை பவுசுல் ஹமீட் நடாத்தினார்.

# தெற்காசியாவின் முதலாவது டிஸ்னிலேன்ட்...

**தாய் பிறந்த நாட்டை அபிவிருத்தி செய்யும் நோக்கில் மலேசியாவில் இருந்து இலங்கை வந்திருக்கும் மைக்கல்...**

## கலாநிதி P.R.I.MICHAEL

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு உட்கட்டமைப்பு இன்றியமையாத தொன்றாகும். உட்கட்டமைப்பே முதலீட்டுகளை கவர்ந்திழுக்கும் மாய மந்திரமாகும்.பண்டாரநாயக்க சர்வ தே ச விமான நிலையத்தில் இருந்து மத்த ளை செல்வதற்கு இரண்டு மணித்தியாலங்கள் செலவாகிறது. இது மிகவும் சிரமமான பயணமாகும். இலங்கை வளர்ச்சியடைந்து வரும் மிகவும் சுறுசுறுப்பான நாடாகும். பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து மத்தளை 45 நிமிடங்களில் செல்வதற்கான அதிவேக சுப்பர் ரயில் சேவையை அமைக்க முடியும்.மக்களும் அதை விருபுவர்.காலி,மாத்தறையில் இருந்து 20 நிமிடங்களில் கொழும்புக்கு வரக்கூடிய அனைத்து தர பெட்டிகளுடனான ரயில் சேவையை எமக்கு தர முடியும் என மலேசியாவில் இருந்து வந்து எமது நாட்டில் முதலீடு செய்வதோடு எமது நாட்டுக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களை வரைவழைப்பதில் மும்முரமாக செயற்படும் கலாநிதி மைக்களை அவரது அலுவலகம் அமைந்துள்ள செலிங்கோ கோபுரத்தின் 08 ஆவது தளத்தில் சந்தித்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.






அக்கலந்துரையாடலில் அவர் மேலும் கூறியதாவது,...

மலேசியாவில் இருந்து வந்து ஏன் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்கிறீர்கள்என்றுபலர்என்னைகேட்கின்றனர். என் தாய் வீடு இலங்கையாகும். என்து தாய் கண்டி மாத்தளையில் பிறந்தவர். எனது தந்தை 1894 ஆம் ஆண்டு சிலோன் ரெயில்வேயில் கண்டிக்கான பாதை அமைக்கும் பணியில் ஊழியராக கடமையாற்றியராவார். அதன் பின்னர் அவர்கள் மலேசியாவிற்கு புலம் பெயர்ந்து வாழ்ந்தனர். மலேசியாவே நான் பிறந்த நாடாகும். ஆனால் என் தாய் மண்ணை வளப்படுத்துவது எனது தலயாய கடமையாகும் அதையே நான் செய்து கொண்டிகிறேன்.

இந் நாட்டின் அபிவிருத்திக்கு மூலதனம் முக்கிய காரணமாக அமைக்கிறது.அதை உள்ளூர் மூலதனத்தை மட்டும் கொண்டு செய்ய முடியாது.இலங்கைக்கு வெ ளிநாட்டு முதலீடுகள் இன்றியமைததாகும். வெ ளிநாட்டு முதலீட்டாளர்களை நாம் கட்டாயம் வரவழைத்தா வேண்டும்.வெளிநாட்டு மூதலீட்டாளர் சுலபமாகவும் விரைவாகவும் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வே விரும்புகின்றனர்.அத்தோடு பணம் சம்பாதிப்பதும் அவர்களின் நோக்கமாகும்.அதற்கான் கட்டமைப்புகளை நாம் ஏற்படுத்தி கொடுத்தாக வேண்டும்.அத்தோடு அவர்களை கவரக் கூடிய திட்டங்களும் எம்மிடம் இருக்க வேண்டும். தற்போதை அரசாங்கம் அதற்கான திட்டங்களை வகுத்துள்ளதாக எனக்கு தோன்றுகிறது. உதாரணமாக போட் சிட்டியை குறிப்பிடலாம்.இந்த அரசுடன் இணைந்து பல வேலைத் திட்டங்களை செய்ய முடியும் என நம்புகின்றேன்.நான் 2012 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் பல திட்டங்களை செய்து கொண்டிருக்கிறேன். சிங்கப்பூரில் நடந்த ரயில்வே துறை மாநாட்டில், இலங்கை ரயில்வேயில் மின்மயமாக்க திட்டத்தை நடைமுறைப்படுத்த நான் விருப்பினேன். அந்த மாநாட்டில் 38 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.குறிப்பாக இங்கிலாந்து,இந்தியா,ஜப்பான் போன்ற நாடுகளாகும். தெற்காசியவின் முதல் டிஸ்னிலேன்டை இலங்கையில் அமைப்பதற்கான திட்டத்தை செயறபடுத்தியுள்ளோம் இதற்கு மலேசியா மற்றும் கொரியாவிலிருந்து முதலீடுகளைக் கொண்ட கொரியா கேவிடேஷன் நிறுவனத்தால் உருவாக்கப்படும் உத்தேச போபிட்டிய ஓய்வு பூங்காவில் இலங்கை தெற்காசியாவின் முதல் டிஸ்னிலேண்டை உருவாக்கும். இந்த திட்டத்திற்காக 150 ஏக்கர் நிலத்தை குத்தகை அடிப்படையில் பெற அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக கொரியா குழிவுறுதல் நிறுவனத்தின் தலைவர் பேகியம் கிம் மற்றும் இலங்கையின் பிரதிநிதி நான் செயற்பட்டுவருகிறேன்.

கொரியா மற்றும் மலேசியாவிலிருந்து சர்வதேச நிதியுதவி மூலம் இந்த திட்டத்தை நிர்மாணிக்க சுமார் 400 மில்லியன் அமெரிக்க



டாலர்களை திரட்டுவோம் என்று நாங்கள் நம்புகிறோம், மேலும் COVID19 தொற்று நோய்க்கு முன்னர் இதிலிருந்து 30% பெறுவதில் நாங்கள் வெற்றி பெற்றோம். இலங்கை கொவிட்19 சுகாதார நிர்வாகத்தை மேம்படுத்துவதோடு, நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்து வருவதும், தடுப்பூசி போடுவதும் இந்தியா போன்ற பிற நாடுகளிலிருந்தும் இந்த திட்டத்திற்கு அதிக முதலீட்டாளர்களை ஈர்க்க பெரிய வாய்ப்புகளைக் காண்கிறோம்.

முன்மொழியப்பட்ட பூங்கா மலேசியாவின் ஜென்டிங் ஹைலேண்ட்ஸைப் போலவே இருக்கும் என்றும், அதனுடன் சிறப்பு ரயில் இணைப்பு இருக்கும் என்றும் அவர்கள் நம்புகின்றனர். □கூடுதலாக, பல ஓய்வு நேரங்களை நாங்கள் இணைத்துள்ளோம்.

கொவிட்19 தொற்றுநோய் தீர்க்கப்படும்போது, குறிப்பாக இந்தியா மற்றும் பிற அண்டை நா டு களிடமிருந்து கோரிக்கையை நாங்கள் காண்கிறோம், ஏனெனில் இந்த பிராந் தியத்தில் செயல்படும் ஒரே டிஸ்னி லேண்ட் இதுதான்.உல்லாச பயணிகளுக்காக 300 அறைகள் கொண்ட ஹோட்டலும் அமையவிருக்கிறது.

இலங்கையை தளமாகக் கொண்ட எங்கள் நிறுவனம், டர்ன்கீ திட்டங்கள் மற்றும் மெகா திட்டங்களை கட்டமைப்பதில் நிபுணத்துவம் பெற்ற ஒரு நிறுவனம், வளர்ந்து வரும் நாடுகளில் ஆசிய பசிபிக் மையத்தில் கவனம் செலுத்துகிறது. எங்கள் நன்கு நிறுவப்பட்ட தென் கொரிய மற்றும் மலேசிய நிறுவனங்களின் தொழில்நுட்ப அறிவு மற்றும் உபகரணங்களை பூங்காவிற்கு மிகவும் நவீன தொழில்நுட்பங்களுடன் பயன்படுத்துவோம்.

இந்த பூங்கா திட்டத்திற்காக நாம் இலங்கையில் இருந்து வெளிநாட்டில் வதியும் முதலீட்டாளர்களை இணைத்துக் கொள்ளும் செயற்பாடுகளையும் முன்னெடுத்துள்ளோம்.

# இந்திய அரசியலில் முதல் களத்தில் தோல்வியுற்ற பிரபலங்கள் ஏராளம்

## பின்னர் அவர்களுக்கு கிடைத்ததெல்லாம் வெற்றிக் கனிகள்; கமலுக்கு இப்போது கிடைத்துள்ளது முதல்படி தோல்வி மாத்திரமே!

நடந்து முடிந்த தமிழக சட்டசபை த் தேர்தலில் மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவரும் நடிகருமான கமல் கோவை தெற்கு தொகுதியில் பாஜகவின் வானதி சீனிவாசனிடம் தோல்வி அடைந்தார். தான் போட்டியிட்ட முதல் தேர்தலிலேயே கமல் துரதிர்ஷ்டவசமாக தோல்வி அடைந்தார்.

இருந்தாலும் 22 வது சுற்று வாக்கு எண்ணிக்கை வரை கமல் முன்னிலையிலேயே இருந்து வந்தார். ஆனால் கடைசி 2 சுற்றுகளில் வானதி சீனிவாசன் முன்னிலை வகித்து, வெற்றி பெற்றார். 1728 வாக்குகள் வித்தியாசத்திலேயே வானதி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

கமலின் மக்கள் நீதி மய்யம் கட்சி 154 தொகுதிகளில் போட்டியிட்டும் ஒரு இடத்தில் கூட வெற்றி பெறவில்லை. அந்தக் கட்சியில் கமலை தவிர மற்றவர்கள் முன்னிலையில் கூட வரவில்லை. பெரும்லாபான தொகுதிகளில் கமல் கட்சிக்கு 4வது இடம் தான் கிடைத்தது. கமல் மட்டுமல்ல இந்திய அளவில் பிரபலமான சினிமாவில் இருந்து அரசியலுக்கு வந்தவர்கள் பலரும் தாங்கள் முதலில் போட்டியிட்ட தேர்தலில் தோற்றுத்தான் போய் உள்ளார்கள்.

குல் பனாங் 2014 இல் நடந்த லோக்சபா தேர்தலில் சண்டிகரில் ஆம் ஆத்மி கட்சி சார்பில் போட்டியிட இவருக்கு முதன் முதலில் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் பாஜகவின் கிர்ரோன் கரிடம் தோல்வியைத் தழுவினார்.

ராக்கி சாவந்த் 2014 லோக்சபா தேர்தலின் போது ராஷ்டிரிய ஆம் என்ற கட்சியை தொடங்கினார். ஆனால், அந்தத் தேர்தலில் வடமேற்கு மும்பை தொகுதியில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட்டு தோல்வி அடைந்தார்.

மகேஷ் மஞ்சிரேக்கர் 2014 லோக்சபா தேர்தலில் மும்பையின் வடமேற்கு தொகுதியில் மகாராஷ்டிர நவ நிர்மான் மேனா வேட்பாளராக நிறுத்தப்பட்டார். ஆனால் சிவ சேனாவின் கஜானன் கிர்திகரிடம் தோல்வி அடைந்தார்.



ரவி கிஷான் காங்கிரஸ் கட்சியில் இணைந்ததும் 2014 லோக்சபா தேர்தலில் உத்தர பிரதேசத்தின் ஜவுன்பூர் தொகுதியில் அக்கட்சி சார்பில் போட்டியிட்டார். அந்த தேர்தலில் தோல்வி அடைந்து, பிறகு 2019 இல் பாஜகவில் இணைந்தார். பாஜகவில் இணைந்த பிறகு உத்தர பிரதேசத்தின் கோரக்பூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி அடைந்தார்.

ஸ்மிருதி இரானி 2003 இல் பாஜகவில் இணைந்து, மகாராஷ்டிர இளைஞரணி துணை தலைவரானார். 2004 இல் நடந்த லோக்சபா தேர்தலில் டெல்லி சாந்தினி சவுக் தொகுதியில் கபில் சிபிலை எதிர்த்து போட்டியிட்டு தோற்றார். ஆனால் அதற்கு அடுத்தடுத்த தொகுதிகளில் வெற்றி பெற்ற இவர், தற்போது அமேதி தொகுதி எம்பியாகவும், மத்திய ஜவுளி மற்றும் மகளிர் குழந்தைகள் மேம்பாட்டு துறைகளின் அமைச்சராகவும் இருந்து வருகிறார்.

2009 லோக்சபா தேர்தலில் சமாஜ்வாதி கட்சி சார்பில் வேட்பாளராக போட்டியிட்டு தனது அரசியல் பயணத்தை தொடக்கினார் மனோஜ் திவாரி. ஆனால் கோரக்பூர் தொகுதியில் பாஜகவின் யோகி ஆதித்யநாத்திடம் தோல்வி அடைந்தார்.

பிரகாஷ் ஜா 3 முறை லோக்சபா தேர்தலில் போட்டியிட்டு, ஒவ்வொரு முறையும் தோல்வி அடைந்தார். 2004 இல் தனது சொந்த தொகுதியான சம்பரன் தொகுதியில் போட்டியிட்டும் தோற்றார். 2009 இல் லோக் ஜனசக்தி கட்சி சார்பில் போட்டியிட்டும் தோற்றார். 2014 இல் ஐக்கிய ஜனதா தளம் கட்சி சார்பில் போட்டியிட்டும் தோற்றார்.

ராஜேஷ் கன்னா 1991 லோக்சபா தேர்தலில் டெல்லியில் காங்கிரஸ் சார்பில் தனது முதல் தேர்தலில் போட்டியிட்டார். அதிக ரசிகர்களை கொண்ட புகழ்பெற்றவராக இருந்தும் இவர் தோற்றார்.

சக நடிகரான ராஜேஷ் கன்னாவை எதிர்த்து, தனது முதல் தேர்தலில் போட்டியிட்ட சத்ருகன் சின்ஹா தோல்வி அடைந்தார். காங்கிரஸ், பா.ஜ.க என மாறி மாறி சென்றும் வெற்றி கிடைக்கவில்லை.

2014 இல் ஜன சேனா என்ற கட்சியை தொடக்கிய பவன் கல்யாண், 2019 லோக்சபா தேர்தலில் 2 தொகுதிகளில் போட்டியிட்டார். ஆனால் இரண்டிலுமே இவர் தோல்வி அடைந்தார்.

இந்தியாவின் இவ்வாறான அரசியல் வரலாற்றை எடுத்து நோக்குகையில் கமல் ஆரம்பப் படியில் மாத்திரமே தோல்வி அடைந்துள்ளார். அவரது கட்சிக்குக் கிடைத்த வாக்குகளை வைத்துப் பார்க்கையில் கமலுக்கு எதிர்காலத்தில் அரசியலில் நம்பிக்கையான எதிர்காலம் இருப்பதாகவே தோன்றுகின்றது.

# பாஜகவின் 'உண்மையான மாற்றம்' பொய்த்து விட்டது மம்தா: வங்க மகளின் வெற்றி



வங்கத்தில் மிகப் பெரும் வெற்றி பெற்று மூன்றாவது முறையாக ஆட்சியமைத்திருக்கிறார் மம்தா. எப்படியாவது வங்கத்தைக் கைப்பற்றிவிடும் நோக்கத்தில் மோடி, அமித் ஷா, ஜே.பி.நட்டா, ராஜ்நாத் சிங், யோகி ஆதித்யநாத் என்று பாஜகவின் பெருந்தலைகளெல்லாம் வங்கத்தில் வந்து குவிந்தனர். இன்னொரு புறம், இடதுசாரிகளும் காங்கிரஸும் ஐஎஸ்எஃபும் அமைத்த கூட்டணியின் வாக்குப் பிரிப்பானது மம்தாவையே பாதிக்கும் என்று கூறப்பட்டது. இவர்களுக்கெல்லாம் எதிர்முனையில் இருந்தவர் ஒரே ஒரு பெண். அதுவும் சக்கர நாற்காலியில் பிரசாரம் செய்யும் பெண்!

வங்கத் தேர்தல் வரலாறு

சுதந்திரத்துக்குப் பிறகு நடைபெற்ற முதல் தேர்தலில் (1952) காங்கிரஸ் வென்றது (150 இடங்கள், 38.82% வாக்கு வீதம்); இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பிரதான எதிர்க்கட்சியாக (28 இடங்கள்) உருவெடுத்தது. 1962 தேர்தல் வரையிலும் காங்கிரஸே மூன்று முறை ஆட்சியமைத்தது. பிறகு, 1967ல் காங்கிரஸால் 280 தொகுதிகளில் 127ஐ மட்டுமே வெல்ல முடிந்தது. இடதுசாரிக் கட்சிகளும் பங்களா காங்கிரஸ், ஃபார்வர்டு பிளாக் உள்ளிட்ட கட்சிகளும் தேர்தலுக்குப் பிறகு கூட்டணி அமைத்து ஆட்சியமைத்தன. அப்போதிருந்து 1971 வரை வெவ்வேறு கூட்டணி சார்பில் அஜோய் முகர்ஜி ஆட்சியமைப்பது, கூட்டணிப் பிரச்சினையால் ஆட்சி கலைந்து குடியரசுத் தலைவர் ஆட்சி அமலுக்கு வருவது என்று வெவ்வேறு காட்சிகளை வங்கம் கண்டது. 1972 தேர்தலில் காங்கிரஸ் மகத்தான வெற்றி பெற்றது (216 இடங்கள், 49.08% வாக்கு வீதம்). வங்கத்தில் காங்கிரஸ் அமைத்த கடைசி ஆட்சி அது.

நெருக்கடிநிலை முடிவுக்கு வந்த பிறகு 1977ல் நடைபெற்ற தேர்தலில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்று (178 இடங்கள், 35.46%) ஆட்சியமைத்தது. ஜோதி பாசு முதல்வரானார். 2001ல் அரசியலிலிருந்து ஓய்வு பெறும்போது 24 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆண்ட முதல்வர், உலகிலேயே நீண்ட காலம் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்ற பெருமைகளைப் பெற்றார். ஜோதி பாசுவின் ஆட்சிக் காலத்தில் நடந்த தேர்தல்களில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 36%க்கும் குறையாமல் வாக்கு வீதத்தைத் தக்கவைத்தது. 2001 தேர்தலில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியமைக்க, புத்ததேவ் பட்டாச்சார்யா முதல்வரானார். இதற்கிடையே திரிணமூல் காங்கிரஸ் உருவாகி 60 இடங்களில் வென்று பிரதான எதிர்க்கட்சியாக வளர்ச்சியைப் பெற்றிருந்த காலம் அது. 2006ல் 30 இடங்களில் வெற்றி பெற்ற திரிணமூல் காங்கிரஸ் 26.64% வாக்குகளைப் பெற்று தன் இடத்தை ஸ்திரப்படுத்திக்கொண்டது.

1977ல் மார்க்சிஸ்ட் கட்சியின் எழுச்சிக்குப் பிறகு காங்கிரஸ் சரிய ஆரம்பித்ததைப் போல் திரிணமூல் காங்கிரஸின் எழுச்சியில் கம்யூனிஸ்ட் கட்சி சரிய ஆரம்பித்தது. 2011 சட்டமன்றத் தேர்தலில் 184 இடங்களில் (38.93% வாக்கு வீதம்) வென்று முதன் முறையாக ஆட்சியமைக்கிறார் மம்தா பானர்ஜி. 2016 தேர்தலில் திரிணமூல் 211 இடங்களிலும் (44.93% வாக்கு வீதம்), மார்க்ஸிஸ்ட் கட்சி 44 இடங்களிலும் (12.25% வாக்கு வீதம்) வெல்கின்றன. 2021 தேர்தலில் 213 இடங்களில் (47.9% வாக்கு வீதம்) திரிணமூல் வென்றிருக்கிறது. ஒரு இடத்தில்கூட வெற்றிபெறாத மார்க்ஸிஸ்ட் கட்சியின் வாக்கு வீதம் 4.6%; காங்கிரஸ் கட்சியின் வாக்கு வீதமோ 3%.

### பாஜகவின் நுழைவு

பாஜகவின் கதைக்கு வருவோம். 2011 தேர்தலில் ஒரு இடத்தில்கூட அது வெற்றிபெறவில்லை. அதன் பிறகு இடைத்தேர்தலில் ஒரு இடம். 2014 மக்களவைத் தேர்தலில் இரண்டு இடங்கள். 2016 சட்டமன்றத் தேர்தலில் 3 இடங்கள். இப்படி ஆமை வேகத்தில் துரத்திய பாஜக மீது அச்சம்கொள்வதற்கான முகாந்திரத்தை 2019 நாடாளுமன்றத் தேர்தல்தான் மம்தாவுக்குத் தந்தது. 42 மக்களவைத் தொகுதிகளில் 18ல் பாஜக வென்றது (40.7% வாக்கு வீதம்). இந்திய வரைபடத்தின் மேல்பாதியிலுள்ள தங்களால் கால்பதிக்க முடியாத பெரிய மாநிலமான வங்கத்தை இம்முறை ஆக்கிரமித்துவிடுவது என்று பாஜக தனது படை முழுவதையும் இறக்கிவிட்டது. முதல் வேலையாக திரிணமூல் காங்கிரஸிலிருந்து ஆட்களைத் தூக்கும் வேலையைச் செய்தது. 2020 டிசம்பரில் திரிணமூலின் சுவேந்து அதிகாரி பாஜகவில் இணைந்ததைத் தொடர்ந்து, ராஜீவ் பானர்ஜியும் தாவினார். தேர்தல் ஆரம்பிப்பதற்குள் 30க்கும் மேற்பட்ட திரிணமூல் எம்எல்ஏக்கள் பாஜகவுக்குத் தாவியிருந்தார்கள்; அவர்களில் பலருக்கும் போட்டியிட வாய்ப்பு தரப்பட்டது.

வங்கத் தேர்தல் பிரச்சார காலத்தில் மோடி 17 முறையும், அமித் ஷா 21 முறையும் வலம்வந்தனர். பெரும்பாலான கருத்துக் கணிப்புகளும் இந்தத் தேர்தல் மம்தாவுக்குச் சுலபமாக இருக்கப்போவதில்லை என்றே கணித்தன. பாஜகவின் அதி தீவிரப் பிரச்சாரம், வங்கத்தை மம்தா இரண்டு முறை தொடர்ச்சியாக ஆண்டதில் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஆட்சிக்கு எதிரான உணர்வு, திரிணமூல் காங்கிரஸின் தலைவர்கள் மீது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் அதிருப்தி போன்ற காரணங்களை முன்வைத்து மம்தா மூன்றாவது முறை ஆட்சியமைப்பது கடினமே என்றன ஆரூடங்கள். போதாக்குறைக்குத் தேர்தல் தொடர்பான வன்முறைகள் இரு தரப்பிலும் வெடித்தன. மத்தியப் படை வங்கத்தில் இறங்கியது.

### மம்தாவின் நம்பிக்கை

இவை எல்லாவற்றையும் மீறி மம்தா நம்பிக்கையுடன் இருந்ததற்குப் பல காரணங்கள் இருந்தன. முக்கியமாக, திரிணமூல் செயல்படுத்திய நலத்திட்டங்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாக மம்தாவின் போக்கில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. தன்னுடைய ஆட்சி மீதான விமர்சனங்களுக்கேற்பத் திட்டங்களை அமல்படுத்தினார். நிர்வாகத்தை எளிமைப்படுத்தினார். பெண்களின் வாக்குகள் மீது மம்தாவுக்கு அசாத்திய நம்பிக்கை இருந்தது. 'உண்மையான மாற்றம்' என்று பாஜக வைத்த முழக்கத்துக்கு எதிராக 'வங்கத்துக்கு அதன் சொந்த மகள்தான் வேண்டும்' என்ற முழக்கத்துடன் மம்தா தேர்தலைச் சந்தித்தார். பிரதமர் மோடி, அமித் ஷா என்று அங்கே வந்து குவிந்தவர்களையெல்லாம் 'அந்நியர்கள்' என்றார். பாஜக எவ்வளவுதான் பலம் வாய்ந்ததாக இருந்தாலும் மம்தாவுக்கு ஈடுகொடுக்க வங்கத்தில் ஒரு தலைவர் இல்லாமல் போய்விட்டது அதற்கு. வங்கம் இறுதியில் தன் சொந்த மகளையே தேர்ந்தெடுத்திருக்கிறது!

'உண்மையான மாற்றம்' என்று பாஜக வைத்த முழக்கத்துக்கு எதிராக 'வங்கத்துக்கு அதன் சொந்த மகள்தான் வேண்டும்' என்ற முழக்கத்துடன் தேர்தலைச் சந்தித்தார் மம்தா. வங்கம் இறுதியில் தன் சொந்த மகளையே தேர்ந்தெடுத்திருக்கிறது!

# இரண்டாவது அலையில் தென்படும் உருமாற்றமடைந்துள்ள கொரோனா

## இரண்டரை மடங்கு ஆபத்தானது

இரண்டாவது அலையில் தென்படும் உருமாற்றமடைந்துள்ள கொரோனா வைரஸ், முந்தையதைவிட, இரண்டரை மடங்கு ஆபத்தானதாக உள்ளது; இதுவே, பரவல் அதிக வேகமாக நடப்பதற்கு காரணம்' என, ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.

மஹாராஷ்டிர மாநிலம் மும்பையைச் சேர்ந்த, டாடா அடிப்படை ஆராய்ச்சி மையம் மற்றும் கர்நாடக மாநிலம் பெங்களூரைச் சேர்ந்த, இந்திய அறிவியல் மையம் ஆகியவை இணைந்து, கொரோனா வைரஸ் பரவல் குறித்து ஆய்வு மேற்கொண்டன. கணித அடிப்படையில் நடந்த இந்த ஆய்வு குறித்து, அவை கூறியுள்ளதாவது:

தற்போது பரவி வரும் வைரஸ், முந்தையதைவிட, இரண்டரை மடங்கு ஆபத்தானது. ஒருவருக்கு தொற்று ஏற்பட்டால், அவர் வாயிலாக, மேலும், மூன்று பேருக்கு பரவும் ஆபத்து உள்ளது.அதனால் தான், இரண்டாவது அலையில், தொற்று பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தடுப்பூசி வழங்குவது தொடர்ந்தால், ஜூனில் இருந்து பலி எண்ணிக்கை வெகுவாக குறையும்.மே மாதத்தில் பலி எண்ணிக்கை அதிகமாக இருக்கும். ஆனால் படிப்படியாக குறைந்து, ஜூலையில் பள்ளிகளை திறக்கும் சூழ்நிலை ஏற்படும்.



பெப்ரவரி முதல் வாரத்தில், இரண்டாவது அலை துவங்கியது. ஆனால், உள்ளூர் ரயில்கள் முழுமையாக இயக்க உத்தரவிட்டதே, பாதிப்பு அதிகரிக்க காரணமாகி விட்டது. கர்நாடகாவிலும் வைரஸ் பாதிப்பு தீவிரமாக உள்ளது. பெங்களூரு நகரில், கொரோனா நோயாளிகளுடன் தொடர்பில் இருந்தவர்கள் குறித்து தகவல்கள் சேகரிக்கப்பட்டன. அதன்படி பார்க்கையில், 45 சதவீதம் பேர், கொரோனா நோயாளிகளுடன் தொடர்பில் இருந்துள்ளது தெரியவந்துள்ளது. தொற்று பாதிக்கப்பட்டோருடன், பெங்களூரில் மட்டும், 48.5 இலட்சம் பேர், தொடர்பில் இருந்தது தெரிய வந்துள்ளதாக, மாநகராட்சி கூறியுள்ளது.

# சிங்கங்களையும் சீண்டியது கொரோனா



இந்தியாவில் முதன் முறையாக கொரோனா வைரசால் பூங்காவில் பராமரிக்கப்பட்டு வந்த சிங்கங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. ஐதராபாத்தில் உள்ள நேரு விலங்கியல் பூங்காவில் 8 ஆசிய சிங்கங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனா இருப்பது உறுதியாகியுள்ளது.

ஐதராபாத்தில் உள்ள நேரு விலங்கியல் பூங்காவில் சுமார் 10 வயதுடைய 12 சிங்கங்கள் உள்ளன. அதில் சில சிங்கங்களிடையே பசியின்மை, இருமல் போன்ற கொரோனா அறிகுறிகள் இருப்பதை வனவிலங்கு கால்நடை மருத்துவர்கள் கவனித்தனர். கடந்த 24ம் தேதி கால்நடை அதிகாரிகள் சிங்கங்களின் ஓரோபார்னீஜியல் (மென்மையான அண்ணம் மற்றும் ஹையாய்டு எலும்புக்கு இடையில் உள்ள குரல்வளையின் ஒரு பகுதி) மாதிரிகளை எடுத்து சோதனையிட்டதில், தலா நான்கு ஆண் மற்றும் பெண் சிங்கங்களுக்கு கொரோனா தொற்று இருப்பதை கண்டறிந்தனர்.

இது குறித்து நேரு விலங்கியல் பூங்கா கண்காணிப்பாளரும் இயக்குநருமான டாக்டர் சித்தானந்த் குக்ரெட்டி கூறுகையில், சிங்கங்களுக்கு கொரோனா அறிகுறிகள் இருந்தது உண்மைதான். ஆனால், கொரோனா பரிசோதனை அறிக்கைகளை நான் இன்னும் பெறவில்லை,' என்றார்.

வனவிலங்கு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தின் இயக்குனர் டாக்டர் ஷிரிஷ் உபாதி கூறியதாவது: நியூயார்க்கில் உள்ள பிராங்க்ஸ் விலங்கியல் பூங்காவில் கடந்தாண்டு ஏப்ரல் மாதத்தில் 8 புலிகள் மற்றும் சிங்கங்கள் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டன.

இருப்பினும் காட்டு விலங்குகளில் இது போன்ற பாதிப்புகள் இருப்பது இன்னும் கண்டறியப்படவில்லை. ஆனால், ஹாங்காங்கில், வளர்ப்பு பிராணிகளான நாய்கள் மற்றும் பூனைகளில் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாறு அவர் கூறினார்.

## அற்றோணித்தத்துவத்தை இல்லாதொழித்தல்

தெஹிவளையில், கிரெகறீஸ் பிளேஸ், 34C ஆம் இலக்கத்தில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதும் PV 122492 ஆம் கம்பெனிப் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான அக்குவா விலா புறொப்படீஸ் (பிறைவேட்) லிமிடெட் ஆகிய நாம், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பீ.எச்.கே.எச்.திலகரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019/06/13 ஆந்திகதிய 468 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தின் மூலம் இலங்கையில், மாத்தறை, புபுது மாவத்தை, தலதாவத்தயைச் சேர்ந்தவரும் GBR 508405824 ஆம் இலக்கப் பிரித்தானியக் கடவுச்சீட்டை வைத்திருப்ப வருமான பார்பரா ஹீன் சீகல் என்பவருக்கு எம்மால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை நாம் இல்லாதொழித்து இரத்துச் செய்துள்ளோமென இலங்கைக் குடியரசின் அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றோம்.

**2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆந் திகதியாகிய இன்று.**

**அக்குவா விலா புறொப்படீஸ் (பிறைவேட்) லிமிடெட்**

இல. 218, கொட்டா வீதியில் அமைந்திருக்கும் இலங்கை சிறுநீரக நோயாளர்களின் சங்கம் 2021 பெப்ரவரி மாதம் 15ம் திகதி முதல் இல. 155, ஏ சர்வோதய கட்டிடம், டொக்டர் டெனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு -08 என்ற முகவரிக்கு இச் சங்கம் மாற்றப்பட்டுள்ளது என்பதை இலங்கை வாழ் மக்களுக்கு அறியத்தருகின்றோம்.

**அகில இலங்கை சிறுநீரக நோயாளர் சங்கம், செயலாளர்.**


**0112680051**


Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams


## சிறு விளம்பரம்



### மோட்டார் வாகனங்கள்



122

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்** விற்பனைக்கு

SP BIG-8303 TVS ஸ்கூட்டி 2019, மோட்டார் சைக்கிள் அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 07112 1 0 810 . 033498


OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www. observerjobs. lk


## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### பரீட்சை திணைக்களம்

### எழுதுபொருள் வழங்கலின் பெறுகை

**(2021.06.01 தொடக்கம் 2022.05.31 வரையான ஓர் ஆண்டு காலத்திற்கு)**

